ஜூன். ஜூலை
மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளி அரசி

நல்லதொரு குடும்பம்
ஒளி 05 இதழ் 06
மங்கையரின் தோழி
பக்கங்கள் : 80 (68+XII)
100/=

அரசியலோ ஆபாசமோ கலக்காத அற்புத படைப்பு

இம்மாத ஆளுமைகள்






## நல்லாசிரியர்களுக்கு ஒரு சமர்ப்பணம்



வறுமையும் திறமையும்

## தந்தைமை

தந்தையர் தின சிறப்பிதழ்

+ தரம் 5-4 திருத்தற்சேவை
+ விசேட கவிதைக் கையேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUN TRAVELS



சில மணிநேரத்தில்
இந்தியாவுக்கான
E.T.A. TOURIST விசா
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Flight Ticket, U.K., Denmark, Swiss, Norway, German

போன்ற நாடுகளுக்கான விசா விண்ணப்பங்கள்
Online மூலம் செய்து கொடுக்கப்படும்.

email : sunholidayhome@gmail.com
077 225 9030 / 077 936 1427

Kovil Road,
Kailasappillaiyar Kovilady,
Jaffna.

கோயில் வீதி,
கைலாசப்பிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.



# இளவரசி சேலைச் சோலை

(பட்டுப் புடைவைகளின் சாம்ராஜ்ஜியம்)

# ELAVARASI TEXTILE

**Specialist in Wedding Sarees**



125, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

*125, Power House Road
Jaffna*

Vecicle Parking Available

Mastar Card Credit Card Accepted

Proprietor
Mob : 0777315087
Viber : 0094315087

Tel : 021-2222503
Fax : 021-2228441




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








PERIODICAL
JAFFNA

# உள்ளடக்கம்




இனிது இனிது இல்லறம் இனிது



சத்குரு பதில்கள்



வருமுன் காப்போம்



மெல்லிசையாய் வசமானாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதாந்த குடும்ப சஞ்சிகை
# ஒளி அரசி
மங்கையரின் தோழி

**வெளியீட்டாளர்** மாஸ்மீடியா சேவிஸ்
இல. 70, டேவிட்சன் றோட், கொழும்பு - 04

**ஆசிரியர்கள்**

பிரதம ஆசிரியர் : திருமதி யசோதை சரவணபவன்
ஆசிரியர் : திரு. இ. ஜனதன்
இணை ஆசிரியர் : திருமதி பா. ஜயிலா

**எழுத்தாளர் குழு**

| | |
|---|---|
| திரு. ச. லலீசன் | அச்சுவேலி |
| நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் | கொழும்பு |
| திருமதி தேவா மாதவன் | கொழும்பு |
| இரா. நிசாந்தன் | வட்டக்கச்சி |
| ஸகீட். எச். சப்றின் | மருதமுனை |
| கவிஞர் பிறேம்ராஜ் | கொழும்பு |
| திருமதி சூர்யா சிவரூபன் | வட்டுக்கோட்டை |
| எஸ். எல். மன்சூர் | அட்டாளைச்சேனை |
| செல்வி பாலாஜினி | பளை |
| திருமதி சுமித்ரா ராகவன் | கிளிநொச்சி |
| து.திலக் (கிரி) | சுவிஸ் |
| வே. முல்லைத்தீபன் | ஒட்டுசுட்டான் |
| காரை. எம். பி. அருளானந்தம் | யாழ்ப்பாணம் |
| இ.அன்ரன் இருதயகுமாரன் | நெல்லியடி |

**ஆலோசகர்கள்**

திருமதி கோகிலா மகேந்திரன் (ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
திரு. த. ஜெயசீலன் (கவிஞர், மாநகர சபை ஆணையாளர்)
திரு. செ. செல்வராசா (ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்)
திரு. செ. மகேஷ் (ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்)
திருமதி சிவமலர் சுந்தரபாரதி (அதிபர்)
மைமூனா அகமட் (ஓய்வுபெற்ற நீதியரசர்)
திரு. சி. நற்குணலிங்கம் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரி)
திருமதி ஆனந்தராணி நாகேந்திரன் (சங்கீதபாட ஆசிரிய ஆலோசகர்)
திரு. ஏ. ஜெயக்குமார் (ஓய்வுபெற்ற அதிபர்)
திரு. எஸ்.சரவணபாவானந்தன் (கோட்டக்கல்வி அதிகாரி )
திரு. ஏ.ஜே.ஞானேந்திரன் (சிரேஷ்ட எழுத்தாளர் - சுவிஸ்)
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் (ஊடகவியலாளர்)

**சட்டஆலோசகர் :** திரு. ரட்ணம் ரகுராஜா

**தபால் முகவரி**

ஆசிரியர், 'ஒளிஅரசி' இல. 55, பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

**தொடர்புகளுக்கு :**

தொலைபேசி : 0114320695
துரித அழைப்பு : 0718628369,0714273035
தொலைநகல் : 0112506610
E-mail : oliarazi33@gmail.com
Viber - 0714273035

**இதழ் வடிவமைப்பு**

எஸ்.மகாவிஷ்ணு
எம்.ஜீவநீதன்

பிரதம ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

# தந்தைக்கு ஒரு தினம்

வணக்கம் வாசகப்பெருநெஞ்சங்களே!

உங்கள் ஒத்துழைப்புடனும் உதவிகளுடனும் தொடர்கிறது ஒளி அரசியின் பயணம். வெற்றிப்பயணம் எனச்சொல்லுமளவிற்கு ஒளிஅரசியின் விற்பனை இல்லையெனினும் ஒரு சஞ்சிகை ஐந்து ஆண்டுகள் கடந்து பயணிப்பதென்பது வெற்றி தானே! அந்த வகையில் ஒளிஅரசியும் வெற்றியுடனே தான் பயணிக்கின்றாள்.

தாயிற்சிறந்த கோயிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்கிறது ஆன்றோர் வாக்கு. இம்மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. தந்தை என்பவர் யார்? ஒரு தந்தை எப்படி இருக்கவேண்டும்? என்பது பற்றிய அலச லோடு இம்மாத ஆசிரியர் தலைப்பினை பகிரவுள்ளாள் ஒளிஅரசி.

அப்பா என அழைக்கப்படுகின்றவர்கள் எல்லோரும் தந்தையராக உள்ளனரா என்றால் இல்லை என்பதே பதிலாக அமையும்.

இன்றைய காலத்தில் இருபத்தைந்து வீதத்தினர் சரியான வகையில் தந்தையராக விளங்கவில்லை என்பதே உண்மை. காலத்தின் மாற்றமோ அன்றி பல்கிப்பெருகிவிட்ட ஆடம்பரங்களோ,போதைப்பாவனையோஏதோவொன்று இந்நிலையைத் தந்திருக்கின்றது. பாசம் அது மறைந்து கண்டிப்பு தண்டிப்பாக மாறிவருகின்றது. பத்திரிகைகள் சுமந்துவரும் இச்செய்திகள் பதறவைக்கிறது நெஞ்சை. ஒரு பிள்ளையின் நடை, உடை, செயற்பாடு அனைத்தும் தந்தையைப் பின்பற்றியே பிள்ளைக்கு வருகிறது என்பதை பல தந்தையர்கள் உணர மறக்கின்றனர்.

வாழ்க்கை என்னும் பெரும் சுழற்சியில் ஒவ்வொரு மனிதனின் துணிச்சலும் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் தைரியமும் உழைப்பும் கூட அப்பா என்னும் அடிவேரில் இருந்து கிடைப்பதுதான். விழவும், எழவும், வலியையும் வடுக்களையும் சுமக்கவும் அப்பா தருகின்ற உந்து சக்தியே காரணமாகின்றது. ஆழ்மனதில் அடைந்துகிடக்கின்ற நம்பிக்கையின் அத்திபாரம் அப்பாவோடு அப்பாவின் கைபிடித்து நடக்கும் முதல் அடி தான் என்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிகையல்ல. அப்பா தன் பிள்ளைக்கு நங்கூரமாகவும்நம்பிக்கையாகவும்இருக்கவேண்டும். அப்போதுதான், தான் சாய்ந்துகொள்ள அப்பா என்கிற தூண் கூடவே உள்ளது என்ற நம்பிக்கை பிள்ளைக்கு உண்டாகும். இந்த சமூகம் ஒரு மனிதனை நல்லவனாக காண்கின்றது என்றால் அங்கே அப்பாவின் பங்கு அளப்பரியது.

தாயானவள் தன் பிள்ளை எப்போதும் தன்னோடே இருக்கவேண்டும் என எண்ணியே தன் இடுப்பில் பிள்ளையை சுமக்கின்றாள். ஆனால் தான் காணாத உயரத்தை தன் பிள்ளை காணவேண்டும் என எண்ணியே தந்தை தன் பிள்ளையை தோளிலே சுமக்கின்றார். ஒரு கை தட்டி ஓசை வருவதில்லை. தந்தையும் தாயும் அன்புடன் பிணைந்த ஆரோக்கியமான ஒரு இல்லறத்தின் குழந்தைகள் சமூகத்திற்கு பொக்கிஷங்களாய் கிடைக்கின்றனர். போர் தின்று தீர்த்த அப்பாக்களின் எண்ணிக்கை அதிகம், அதனால் அப்பாவாய் வாழும் அம்மாக்கள் எம்நாட்டில்அநேகம் பேர்உள்ளனர். இதுகாலத்தின் கொடுமை.

தந்தையர்க்கு மட்டுமின்றி தந்தையாய் வாழும் தாய்மாருக்கும் இந்நாளின் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும் ஒளி அரசியின் சார்பில்.

பிரதம ஆசிரியர்

---

**இம்மாத சிந்தனைக்கு:**

ஒருவன் சமூகத்தில் சிறந்த மனிதனாக விளங்கி, கற்றவர்கூடுகின்ற சபைதனில் தானும் ஒருவனாய் அமர்கின்றான் என்றால் அங்கே அவன் தந்தையின் பங்கு அளப்பரியது.

**எடுத்துக்காட்டு**

**பொதுமறையில் இருந்து.**

**தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்.**

# ஒளிஅரசி சந்தா விபரம்

## அன்பு வாசகர்களே!

**ஒளிஅரசியை உங்கள் வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ளவேண்டுமா? கீழுள்ள வங்கி கணக்கிலக்கத்திற்கு பணத்தை வைப்பிலிட்டு வைப்புத்துண்டு, தொலைபேசி இல, தபால் முகவரி என்பவற்றை தெளிவாக எழுதி ஒளிஅரசியின் கடிததொடர்பு முகவரிக்கோ அல்லது 071 4273035 என்ற வைபர் இலக்கத்திற்கோ அனுப்பவும்.**

| | |
|---|---|
| **கட்டணத்தொகை** | **உள்நாடு - ரூ. (85X12=1020) + (30X12=360) =1380** |
| **வங்கியின் பெயர்** | **ஹற்றன் நஷனல் வங்கி.** |
| **வைப்பிலிடவேண்டிய பெயர்** | mass media services |
| **வங்கி கணக்கு இலக்கம்** | **009010383405** |
| **வெளிநாடு** | **50$** |


PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையும் திறமையும்

உலகம் இருபத்தோராம் நூற்றாண்டு தொழிநுட்பத்தின் எல்லையைத்தொட்டு ஓடிக்கொண்டிருக்கின்றது. இளைய சந்ததியினரும் பல்வேறுபட்ட கண்டுபிடிப்புகளைமேற்கொண்டு தமக்கும் தமது வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமைசேர்த்துவருகின்றனர்.

அவர்களின் கண்டுபிடிப்புகள் பாராட்டப்படவேண்டியதுடன் அவர்களின் சாதனைகளும் பதிவிடப்படவேண்டியவையாகும். அந்தவகையில் இம்மாத ஒளிஅரசியில் சாதனையாளராக எம்மால் அடையாளப்படுத்தப்படுபவர், சம்மாந்துறையைச் சேர்ந்த, இளம் விஞ்ஞானியாக, அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் சோமசுந்தரம் வினோஜ்குமார் என்பவராவார்.





நேர்காணல் து. திலக்(கிரி)
சுவிற்சர்லாந்து

இவர் தனது ஆரம்பக்கல்வியை சம்/ கோரக்கன்கட்டு தமிழ் மகாவித்தியாலயத்தில் கற்றுள்ளார். தற்போது இவர் யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீட மாணவனாக உள்ளார். மேசன் தொழில் செய்யும் அப்பா, வீட்டை நிர்வகிக்கும் அம்மா, கிழக்குப் பல்கலைக்கழக மாணவனாக அண்ணா என நான்கு அங்கத்தவர்களைக்கொண்ட குடும்பத்தின் கடைசி வாரிசு வினோஜ்குமார். ஆரம்பத்தில் கைப்பணிப்பொருட்கள் போன்றே தனது ஆக்கமுயற்சியை ஆரம்பித்தஇவரது இம்முயற்சிக்கு அத்திவாரமாக அமைந்த விடயம் யாதென்றால், அவரது வாசிக்கும் திறனே ஆகும்.

சிறுவயது முதல் பாடசாலை நூலகத்தில் கண்டுபிடிப்புகள் பற்றியும் கண்டுபிடிப்பாளர்கள் பற்றியும் ஆர்வமாய் வாசிக்க ஆரம்பித்த இவர், வறுமை வாழ்வில் ஒளிர்ந்த அவர்களின் சாதனைகளே தன்னையும் சிந்திக்கத்தூண்டியது எனவும் அவர்களைப்போலவே நானும் ஏன் சாதிக்கமுடியாது என்ற கேள்வியே தன்னை இத்துறையின் பால் நகர்த்தியது என்றும் கூறுகின்றார். பிள்ளையின் கல்வி இதனால் பாதிக்கப்படுமோ என அஞ்சிய போதும் இத்துறைக்கு பெற்றோர் பூரண ஆதரவையும் வழங்கியுள்ளனர். இருப்பினும் ஓய்வு நேரங்களையும் தவணை விடுமுறைகளையுமே இவர்தனது கண்டுபிடிப்புகளிற்காக ஒதுக்கியுள்ளார்.

ஒரு பிள்ளையின் ஆரம்ப கற்றல் வீட்டில் இருந்தே ஆரம்பிக்கின்றது என்பதற்கு வினோஜ்குமாரும் சான்றாவார். சிறு வயதில் கைப்பணிப்பொருட்கள்போன்று பலவற்றைச்செய்த போதும் அவை எதுவும் போட்டிகளில் எடுபடவில்லையெனவும் கூறுகின்றார். அப்போதைய காலங்களில் மின்சாரம் இல்லாததனால், அவர்கள் வீட்டில் குப்பிவிளக்கு மற்றும்மெழுகுவர்த்தி பாவிப்பது வழக்கமாகஇருந்தது எனவும், தாயார் சேமித்து ஏற்றிய மெழுகுவர்த்தியே தன்னையும் அது சார்ந்த ஒரு கருவியைச் செய்யத்தூண்டியது எனவும் கூறுகின்றார். அதாவது மெழுகினை அதிகமாகச் சேமிக்கும் மெழுகு சுழற்சி இயந்திரம் ஒன்றை முதலில் செய்துள்ளார். அது 2012 இல் இலங்கை பொறியியலாளர் நிர்வாகம் மற்றும் புத்தாக்க ஆணைக்குழு என்பவற்றினால் அங்கீகரிக்கப்பட்டதாகவும் அதுவே தேசியரீதியில் தன்னை கண்டுபிடிப்பாளராக அறிமுகப்படுத்தியது எனவும் நெகிழ்வுடன் பகிர்ந்துகொண்டார்.

உங்கள் கண்டுபிடிப்புகளின் ஊக்குவிப்பாளர்கள் பற்றி கூறுங்கள் என்றபோது, தனது பாடசாலையில் கற்பித்த ஆசிரியர் சாந்திமதி அவர்களின் ஆரம்ப கற்றல் முறையானது வித்தியாசமாக இருந்ததாகவும் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்னும் சொற்றொடரைப்போன்று பரீட்சைப் பெறுபேற்றிற்காக அல்லாது அவர் எதனையும் செய்முறை விளக்கங்களுடன் கற்பித்தவிதம் இன்றுவரை மனதில் ஆழமாகப் பதிந்துள்ளதாகவும் அதன் பின்னரே கண்டுபிடிப்புகளின் மீது தான் அதிக கவனத்தைச் செலுத்தியதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றார். நிஷாப் ஆசிரியர், யாரிப் ஆசிரியர் மற்றும் சம்/ முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் பரத் அவர்களும் பௌஷானா அகமட் ஆசிரியரும் கூட எனது முயற்சிக்கு உறுதுணையானவர்களே எனக் கூறுகின்றார்.

நான் இதுவரை 81 வரையான கண்டுபிடிப்புகளைச் செய்திருக்கின்றேன். ஆனால் இருவரை சிறந்த கண்டுபிடிப்பொன்றை செய்யாதது போலவே எனக்குத் தோன்றுகிறது. மீள்புத்துருவாக்கம், புத்துருவாக்கம் என இரண்டு வகை உள்ளது. எனினும் எனது கண்டு பிடிப்புகளின் ஸ்திரத்தன்மையும் பயன்பாடும் இன்னும் அதிகரிக்கும் போதே என் எண்ணங்களும் முழுமைபெறும் எனநினைக்கின்றேன் என்றார்.

தானியங்கி தாலாட்டும் கழிவகற்றும் தொட்டில், தானியங்கி பசளை வீசும் இயந்திரம், இரு சக்கர உதவியாளன், கணித உதவியாளன் போன்றவை எனது விசேட கண்டுபிடிப்புகள். கண்டுபிடிப்புகளின் தந்தையாகப் போற்றப்படுபவர் தோமஸ் அல்வா எடிசன், ஒரு கண்டுபிடிப்பானது சமூகத்திற்கு எந்தளவிற்கு பயன்பாடாக அமைகின்றதோ அதுவே கண்டு பிடிப்பாளனின் வெற்றியாக அமைகின்றது என்னும் அவரது கூற்றிற்கிணங்க, நானும் எனது கண்டுபிடிப்புகள் ஒவ்வொன்றையும் சமூகத்திற்கு பயன்படும்விதமாகவே அமைத்து வருகின்றேன். கண்டுபிடிப்புகளின் தரம் என்பது அதன் உருவத்தில் இல்லை, பிரச்சினைகளைத் தீர்க்கும் விதத்தில் உள்ளது என்பார்கள் வளவாளர்கள்.

எமது கண்டுபிடிப்புகளை முதலில் புலமைச் சொத்துக்காரியாலயத்திற்கு அனுப்ப வேண்டும், அவர்களின் ஆராய்தலின் பின்னர் அதற்கான அங்கீகாரம் மற்றும் ஆக்க உரிமைப்பத்திரம், காப்புறுதி என்பன வழங்கப்படும். தனது பொறியியல் பாட தொழில்நுட்பமானது தனது சிந்தனைகளுக்கு தீனி போடும் ஒன்றாக அமைந்ததாகவும், அதன் கற்றல்செயல்முறைகள் தனக்கு இத்துறையில் இலகுவாக செயற்பட உதவியதாகவும் கூறுகின்றார்.

சென்ற வருடம் நடைபெற்ற 1000 படைப்புகள் என்ற தொனிப்பொருளிலாலான கண்டுபிடிப்பு கண்காட்சிப்போட்டியில் 23 படைப்புகளை காட்சிப்படுத்தியிருந்தேன். அதில் 14 கண்டு பிடிப்புகள் தெரிவுசெய்யப்பட்டது. உலக அறிவியல் மற்றும் கண்டுபிடிப்பு ஸ்தாபனத்தினால் இதற்காக வெள்ளிப்பதக்கம் வழங்கப்பட்டது. இலங்கையின் வரலாற்றில் அதிக கண்டுபிடிப்புக்களைச்செய்த தனிநபர் ஒருவர் என்ற பதிவு எனக்கு உள்ளது. அங்கத்துவம் பெற்ற நாடுகளின் பட்டியலில் சர்வதேச அளவிலும் இரண்டாம் இடம் பெற்றேன். அதற்காகவும் வெள்ளிப்பதக்கம் கிடைத்தது. தேசிய ரீதியில் கணித உதவியாளன் கண்டுபிடிப்பிற்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.

தாய்லாந்தில் இடம்பெற்ற 97 நாடுகளைச் சேர்ந்த 1800 பல்கலைக்கழக மாணவர்கள் பங்குபற்றியபோட்டியில் இலங்கை சார்பாக நானும் கலந்துகொண்டேன். அதில் எனக்கு மூன்றாம் இடம் கிடைத்தது. உலக கண்டு பிடிப்பாளர் அல்லது முயற்சியாளர் ஸ்தாபனத்தினால் விருதும் பணப்பரிசும் கிடைத்தது என தனக்கான அங்கீகாரங்களை மகிழ்வுடன் பகிர்ந்துகொண்டார்.

சுவிஸ் நாட்டில் வாழும் 'அன்பே சிவம்'



அமைப்பின் தொண்டரான சிங்கம் அண்ணா, எனது படைப்புகளை பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் எழுதி என்னை ஊக்குவித்த திரு. சகாதேவராஜா ஐயா மற்றொரு நிருபரான அண்ணன் துஷ்யந்தன் என்பவர்களுடன் நான் கல்வி கற்ற பாடசாலைகள், அனைத்துமே எனது வெற்றியின் பின்னால் இருப்பவைகள்.

கல்வியோடு ஓய்வு நேரங்களில் இவ்வாறான புத்துருவாக்கச் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருவது சிறந்த எதிர் காலத்தை உருவாக்கும் என்பதையே தற்போது பாடசாலைகளில் விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்தும்போது நான் கூறுவது என்றதுடன் புத்துருவாக்கத்தின் செயற்றிறனுக்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் ஒளிஅரசி ஊடாக வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அவரது திறன் மேலும் வளரவும் இளம் விஞ்ஞானியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள இவர் எதிர்காலத்தில் சிறந்த விஞ்ஞானியாக உருவாக்கம் பெறவேண்டும் எனவும் ஒளிஅரசியின் சார்பில் வாழ்த்தி விடைபெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தந்தைமை



**கோபிகை**

**கா**லைச்சூரியன் தன் கதிர்களைப் பரப்பி உலகைக்கைப்பற்றிக் கொண்டிருந்தான். பனித்துளிகள் பட்டு புல்வெளி வெண்மேகம் போல காட்சியளித்தது. மெல்லிய குளிர் உடலை வருட சாய்வு நாற்காலியில் அமர்ந்து பத்திரிகைஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்தார் அருணாசலம்.

அருணாசலம் - காவேரி தம்பதியினருக்கு இரண்டு பிள்ளைகள். வசதி வாய்ப்பிற்கு குறைவில்லை. பிள்ளைகள் இருவரும் ஆங்கிலப் பாடசாலையில் படித்து பட்டம் பெற்றவர்கள். மூத்தமகன் அனாதியன் பொறியியலாளனாகவும், மகள் ஆதர்சா வைத்தியராகவும் கடமையாற்றிக் கொண்டிருந்தனர். பிள்ளைகளினால் பெற்றவர்கள் பெறும் பெருமையை அனுபவித்து மகிழ்வாக வாழ்ந்தனர் இருவரும். அப்போதுதான் மகன் அனாதியனுக்கு பெண் பார்க்க ஆரம்பித்திருந்தனர்.

பணமும் - அந்தஸ்த்தும் - உயர் பதவியும் கொண்டிருந்த அவனுக்கு அதேபோன்ற பல பெண்களை வரனாகப் பார்த்தும் ஏனோ ஒன்றுமே சரியாக அமையவில்லை. ஏதாவது குறை இருந்தது. அப்படியே வந்த வரன்கள் எல்லாம் தட்டிப் போக சாதாரண குடும்பத்துவரன் என தரகர் வேறு யாருக்கோ பார்ப்பதற்காக கொண்டு வந்திருந்த வரன் தற்செயலாக அருணாசலத்தாரின் பார்வையில் பட்டது. ''சாதாரண குடும்பம்னு தரகர் சொல்றார், அதை எதுக்கு பாக்கச்சொல்றீங்க,'' மனைவி தடுத்தபோதும் ''பரவாயில்லை, சும்மா பாக்கிறது தானே,'' என்றார்.

பெண்ணுடைய பெயர் பூவிழி. அனாதியனுக்கும் பூவிழிக்கும் பத்துப் பொருத்தமும் அமோகமாய் பொருந்தியிருந்தது, ஆனால் வீட்டில் அருணாசலத்தாரைத்தவிர யாருக்கும் பிடிக்கவில்லை. அனாதியன் ரொம்பவும் கோபப்பட்டான். ''அப்பா, எனக்கு இப்பிடி ஒரு பெண் மனைவியா? என்னால முடியாது' 'என்றவனிடம் அதிகம் பேசாமல் ''நான் உன் அப்பாடா, உனக்கு நல்லது தான் செய்வன்,'' என்றார்.

மகள், ஆதர்சாவும் ''என்னப்பா நீங்கள், அண்ணாவுக்கு இப்பிடி படிப்பு குறைஞ்ச வசதி இல்லாத பெண்ணைப் பாத்து இருக்கீங்க,'' என்றாள்.

''அப்பா இதுவரைக்கும் உங்களுக்கு ஏதாவது கெடுதல் செய்திருக்கிறனா? இல்லைத் தானே, பிறகு ஏன் இந்த விசயத்தில எல்லோரும் அப்படி நினைக்கிறீங்க, என்னவோ தெரியல, உன் அண்ணாவுக்கு அவதான் ஏற்றவன்னு என் மனசு சொல்லிச்சு, அதுதான்,'' என்றார்.

அப்பாவைத் தவிர வேறு யாருக்கும் விருப்பமில்லை என்றபோதும் வேறு வழியின்றி பூவிழிக்கும் அனாதியனுக்குமான திருமணம் நிச்சயமாகியது. மாமியாரும் மைத்துனியும் ஏன் கணவனாகப்போகிற அனாதியனும்கூட அவ்வளவாக பேசாதது பூவிழியின் மனதிற்குள் சின்ன உறுத்தலாகவே இருந்தது. ஆனாலும் பூவிழியம்மா பூவிழியம்மா என அன்பு பெருக அழைக்கும் மாமனாரைப் பார்க்கும்போது மற்ற எல்லாமே மறைந்துபோனது அவளுக்கு. ஒரு நல்ல நாளில் அனாதியன் - பூவிழி திருமணம் இனிதே நடந்தேறியது. ஒரு மருமகளாக அந்த வீட்டில் கால் பதித்தாள் பூவிழி.

''அம்மா பூவிழி, கொஞ்சம் தண்ணி கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாம்மா'' என்ற மாமனாரிடம் ''இதோ கொண்டு வர்றன் அப்பா'' என்றாள். அவளது அப்பா என்ற வார்த்தையில் ஒரு கணம் சிலிர்த்துப் போன அருணாசலத்தார், ''என்னம்மா சொன்னே?'' என்றார். ''தண்ணி கொண்டு வர்றேன்னு சொன்னேன், ஏன் அப்பா?'' என்றாள். ''ஒண்ணு மில்லை'' என்றார். அந்த நொடி தான் புதிதாய் பிறந்தது போல உணர்ந்தார் அருணசலாத்தார்.

''பூவிழி... பூவிழி... பூவிழி'' என அந்த வீட்டில் ஓயாது அவளது பெயர் உச்சரிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும். முதலில் மாமியாரும் மைத்துனியும் அவளிடம் பாரா முகம் காட்டியதென்னவோ உண்மைதான், ஆனால் இரண்டு நாட்களிலேயே பூவிழியின் அன்பும் பரிவான பேச்சும் அவர்களைச் சரியாக்கிருந்தது. திருமணமான மறுநாளே அவசரமான மருத்துவ கலந்துரையாடல் எனக்கூறி வெளிநாடு சென்றுவிட்ட கணவனைத் தவிர மற்ற அனைவரும் அவளை வேற்றாளாக நினைக்கவில்லை. அவளது அமைதியான ஆளுமையும் அடக்கமான பண்பும் அந்த வீட்டில் இருந்தவர்களை மட்டுமின்றி அவர்களின் உறவுகளையும் அவளின் பால் ஈர்த்திருந்தது.

''நானோ, அண்ணாவோ கூட உங்களை அப்பான்னு சொல்றதில்லை, டாட் ன்னு தான் கூப்பிடுவோம். இந்த பூவிழி மட்டும் உங்களை அப்பா அப்பான்னு வாய் ஓயாம கூப்பிடுறா, நீங்களும் ரொம்பத்தான் உருகுறீங்களே டாட்'' மகளின் கேள்வியில் புன்னகை செய்த அருணாசலத்தார், ''அவளோட அப்பா... என்ற அழைப்பில ஏதாவது கள்ளத்தனம் இருக்கிறதா உனக்குத் தெரியுதா'' என்றார்.

''இல்லப்பா... நான் அப்பிடி சொல்லல, அப்பான்னு அவ சொன்னதும் நீங்க அப்பிடியே உருகிப்போய்டுறீங்க, எங்க இடத்தை அவ பிடிச்சிடுவாளோ என்று பயமா இருக்கு,'' என்ற மகளை அன்பாய் பார்த்தவர் ''அப்பா என்ற வார்த்தை எவ்வளவு அர்த்தம் உள்ளது தெரியுமா, அந்த வார்த்தையைக் கேட்கும் போதெல்லாம் நான் புதுசா பிறக்கிறமாதிரி இருக்கும். அது அனுபவிக்கும் போது மட்டுமே உணரக்கூடிய ஒரு உணர்வு, அதை இப்ப உன்னால புரிஞ்சு கொள்ள முடியாதும்மா, தாய்மை எவ்வளவு உன்னதமோ தந்தைமையும் அந்தளவு உன்னதமானதே. அதுமட்டுமில்லடா, மகன் பிறக்கும்போதும் அப்பா என அழைக்கும் போதும் இருக்கும் ஆனந்தத்தைக் காட்டிலும் மருமகள் வந்து வீட்டில் நடமாடும்போதும் மாமனார் மாமியாரை அப்பா, அம்மா என அழைக்கும் போதும் ஏற்படும் பேரானந்தத்திற்கு அளவேயில்லை'' என்றார்.

அப்பா என்ற உச்சரிப்பின் மகத்துவம் தந்தை சொல்லக் கேட்ட ஆதர்சா தானும் அவரை அப்பா என்று அழைத்திருக்கலாமோ என நினைத்தாள்.

பத்து நாட்களின் பின் வீடு திரும்பிக் கொண்டிருந்த அனாதியனின் கார் விபத்திற்குள்ளானதில் பெரும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். உடைந்து போய்விட்ட மாமனார் மாமியாரைத் தேற்றி மைத்துனிக்கு ஆறுதல் சொல்லி அந்த துயரமான நேரத்தில் எல்லோரையும் பார்த்துக்



கொண்டவள் பூவிழிதான். ''இவமட்டும் எப்பிடி இப்படி கல்லு மாதிரி இருக்கிறாளோ'' எனவும் ''இவ வந்த நேரம் இப்பிடியெல்லாம் ஆகிட்டுது'' என்றும் விதண்டாவாதம் பேசிக்கொண்டவர்களும் உண்டு. அவளது காது கேட்கும்படியாகவே சிலர் பேசியபோதும் எதையும் பொருட்படுத்தாது மௌனமாகவே கடந்துவிட்டாள். மாமியாருக்கு கூட மருமகள் பூவிழி மீது கோபம் இருக்கத்தான் செய்தது. அவள் வந்தநேரம் தான் மகனுக்கு இப்படி ஆகிவிட்டது என எண்ணியவர் அந்த வெறுப்பையும் கோபத்தையும் அவள் மீது காட்டவே செய்தார்.

அந்த விபத்து நடந்து பத்து நாட்கள் ஓடிவிட்டன. அன்றுதான் அனாதியனை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் நடந்தது. வைத்தியசாலையில் இருக்கும் வரை அவளிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை ஆனாதியன். எல்லோரும் சொல்வதுபோல தன்னுடைய பலன் தான் கணவனுக்கு இப்படி ஒரு நிலையைத் தந்திருக்கிறதோ, அதனால்தான் கணவன் பேசவில்லையோ என எண்ணியவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடன் வீட்டிற்குச் செல்ல விரும்பவில்லை.

வைத்தியசாலையில் அவள் இல்லையென்றபோதும் வீட்டிற்குப் போய் விட்டாள் என எண்ணி மற்ற அனைவரும் புறப்பட்டனர். வீட்டிற்கு வந்து பார்த்தால் அங்கே அவள் இல்லை. அந்த நேரத்தில் யாரும் பெரிதாக எண்ணவில்லை. எதற்கும் பூவிழியைக் கூப்பிட்டுப் பழகிவிட்ட அருணாசலத்தார் ''பூவிழியம்மா ... பூவிழியம்மா'' என் பல தடவைகள் அழைத்தும் பதில் இல்லை. இலேசாக பயம் கௌவ்வியது அவரை. மகளை அழைத்துக் கேட்டார்.

''தெரியவில்லையேடாட்'' என்றாள்மகள். மனைவியிடம்கேட்டார். ''தெரியாது'' என்பதே பதிலாகவந்தது. அருணாசலத்தார்கோபத்தின் எல்லையில் இருந்தார். ''உன்னுடைய வார்த்தைகள்தான் அவளைக் காயப்படுத்திவிட்டன, உன் மீது தான் எனக்கு கோபமாக இருக்கிறது,'' என மனைவியிடம் கூறியவர், ''எல்லோரும் ஒரு விசயத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள், இந்த வீட்டில் என் மருமகள் வாழக் கூடாது என்பது உங்களில் யாருக்காவது எண்ணமாக இருந்தால் சொல்லிவிடுங்கள், பரவாயில்லை. அவள் வெளியே போகட்டும், ஆனால் அவளுக்கு அப்பாவாக நானும் அவளுடன் போய்விடுவேன்'' என்றார். கேட்டுக்கொண்டிருந்த மூவருக்கும் அதிர்ச்சி.

மனைவியைக் காணவில்லை என்பதே அனாதியனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது, ஆரம்பத்தில் 'அவள் மீது வெறுப்பு இருந்ததென்னவோ உண்மைதான் ஆனால், இப்போது, அவளது ஒவ்வொருசெயலும் அவனை மாற்றிவிட்டதே, வீட்டிற்கு வந்து முற்றாக குணமாகிய பின்னர், கணவனாகத்தான் அவளோடு பேசவேண்டும் என எண்ணித்தான் அவளிடம் பேசாமல் விட்டது, ஆனால் அவனோடு வாழ அவள்? ''அப்பா'' அவனது புதிய அழைப்பில் திடுக்கிட்டுத் திரும்பினார் அருணாசலத்தார். ''உங்கள மாதிரியே நல்ல அப்பாவா நான் வாழணும், என் மருமகள் அப்பா என்று கூப்பிடும் போது நான் பூரிச்சுப் போகணும், என் பூவிழி எனக்கு வேணும்பா அந்த விபத்துக்கு என்னோட கவனயீனம் தான் காரணம், அவளால இல்லப்பா'' என்றான். மகனின் தலையைத் தடவிவிட்டு நிமிர்ந்தவர் வாசலில் தந்தையுடன் நின்ற மருமகளைக் கண்டதும் பேருவகை அடைந்தார்.

''இந்த வீட்டில சுமையா இருக்கவேணாமே எண்டு நினைச்சுத்தான் எங்க வீட்டுக்குப் போய்ட்டன், என்னை மன்னிச்சிடுங்கோ அப்பா'' என்றாள் அருணாசலத்தாரின் கரங்களைப் பற்றியபடி. ''இங்கு உனக்கு என்ன அசௌகரியம் ஏற்பட்டாலும் இந்த அப்பாவிடம் சொல்லுமா, உன் புருசனானாலும் சரி'' என்றார் மகனைப் பார்த்தபடி.

வெட்கத்தில் சிவந்துபோன பூவிழி மாமி



யாரின் அருகில் சென்று அவரது கரங்களை இறுக்கமாகப் பற்றிக்கொண்டாள். அவளை இறுக்கமாய்அணைத்தகாவேரி, ''எங்களைவிட அப்பா மனசில் உனக்குத்தான் ரொம்ப இடம் இருக்கு, அதனால இந்த வீட்டோட மகாராணி நீதான்'' என்றார்.

அவசரமாய் கணவனை நிமிர்ந்து பார்த்தாள், பெற்றவர்கள் மனதில் இடம் பிடித்துவிட்ட மனைவியை எந்த கணவனுக்குத்தான்பிடிக்காது, கண்களைச்சிமிட்டி வாழ்த்துக்களைக் கூறிய கணவனை நன்றியோடு பார்த்தாள் பூவிழி.

அன்றிலிருந்து பிள்ளைகளும் அருணாசலத்தாரை அப்பா என அழைக்கத் தொடங்கினர். ''அப்பா... அப்பா... அப்பா'' அந்த வார்த்தை வீடு முழுவதும் எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

★★★ ★★★ ★★★ ★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொட்டு அடிக்கும் கிட்டிப்புள்

கிட்டிபுள்ளு எனும் பாரம்பரிய விளையாட்டு கிராமத்து விளையாட்டுக்களில் மிகவும் பிரபலமான ஒன்றாகும்.

இன்றைய சிறுவர், சிறுமியர்களுக்கு கிட்டிபுள்ளு என்னும் வார்த்தையே புதிதாக இருக்கிறது.

கிட்டிபுள்ளு எனும் விளையாட்டானது தமிழ்நாட்டில் கிட்டிதக்கா, கில்லி தாண்டா, குச்சிக்கம்பு, சிங்காங்குச்சி, குச்சி அடித்தல், எனப்பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. சிறுவர்கள், சிறுமியர்கள் என அனைவரும் இவ்விளையாட்டினை விளையாடுவார்கள். இவ்விளையாட்டினை விளையாடுவதற்கு கிட்டிபுள், கிட்டிகோல் என இரு கருவிகளைக் கொண்டு விளையாடுவார்கள். கிட்டிபுள் எனப்படும் குச்சியானது சுமார் மூன்று விரல் கொண்ட பருமனில் 20 சென்ரிமீற்றர் நீளம் கொண்டது.

இதன் இருமுனைகளும் கூராக இருக்கவேண்டும். கிட்டிகோளானது ஒருவிரல் பருமனும் சுமார் 50 சென்ரிமீற்றர் நீளமும் இருக்கவேண்டும். விளையாடுவதற்கு ஏற்ற குச்சியாக வலுவான மரத்திலில் இருந்து வெட்டப்பட்ட குச்சியின் கிளைகளை வைத்தே விளையாடலாம்.

ஆனால் குச்சியானது அடிக்கும்போது உடையாமல் திடமானதாக இருக்கவேண்டும். மண் தரையில் ஒரு சிறிய குழியைத் தோண்டி அதன் மேல் புள்ளு தடியை வைக்கவேண்டும். பின்னர் கிட்டிக் குச்சியை புள்ளுக் குச்சிக்கு அடியில் இருக்குமாறு வைத்து தூக்கி அடிக்க வேண்டும்.

பின்னர்கீழே குனிந்து கிட்டி குச்சியை புள்ளுக்குச்சிக்கு அடியில் இருக்குமாறு வைத்து விரித்த கால்களுக்கு இடையில் உள்ள இடைவெளியின் வழியாக தூக்கி வீச வேண்டும்.



அதனை குழுவில் உள்ளவர்கள் துணியாலோ அல்லது கைகளாலோ பிடிக்கவேண்டும்.

புள்ளு குச்சியைப்பிடித்துவிட்டால் விளையாடிய நபர் வெளியேறி அடுத்த நபர்ஆட்டத்தை தொடரவேண்டும்.

இவ்விளையாட்டை விளையாடுவதற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களும் விளையாடலாம்.

இவ்விளையாட்டின் மூலம் ஊருடன் ஒத்துவாழும் இயல்பு மற்றும் திறமைக்கேற்ற வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை என்பன ஏற்படும்.

நன்றி வலைத்தமிழ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துணர்வு
+
விட்டுக்கொடுப்பு
= இனிய இல்லறம்

நந்தவனப் பூக்கள்

# இனிது இனிது வாழ்க்கை இனிது

திருமதி சந்தியா சந்தோஷ்



ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்பதோடு வாழ்வின் இனிய பயணம் முடிந்துவிடுவதில்லை. இல்லற பந்தத்தில் இணையும் தம்பதிகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் பரிமாறி ரசிக்க எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. இல்லறம் என்பது இனிமையான பந்தம். அதன் ஒவ்வொரு அசைவுகளும் அழகானவை. புரிதல் இருந்தால் இல்லறம் இனிமை, புரியாமல் வாழ்ந்தால் அதுவே கொடிய துயரம். வெட்டவும் முடியாது சேர்க்கவும் முடியாது திரிசங்குநிலையில் வாழ்கின்ற இல்லறங்களே இன்று அதிகமாக உள்ளன.

அன்பான பார்வை, அமைதியான புன்னகை எதிர்பாராத பரிசுகள், இனிமையாகும் மாலைப்பொழுதுகள், பார்த்துப்பார்த்துச்செய்யும் உபசரிப்புகள், மனதைக் குளிர்விக்கும் பாராட்டுகள், தூணாகப் பற்றிக்கொள்ள துணையாக நானிருக்கிறேன் என உற்சாகமூட்டும் நம்பிக்கை வார்த்தைகள், திடீர் பிரயாணங்கள், விட்டுக் கொடுக்காத உன்னதங்கள், உறவுகளுடனான பாசப்பிணைப்புகள் என ஒவ்வொரு கணத்தையும் உணர்ந்து அனுபவித்து வாழும் சந்தர்ப்பங்கள் எமது வாழ்க்கையில் ஏராளம் உண்டு. மாறிவரும் வேக யுகத்தில், பலரும் இனிமையான அத்தருணங்களை தவறவிட்டுவிட்டு வாழ்க்கை கசக்கிறதேஎனப்புலம்புகின்றோம்.

வாழ வேண்டிய தருணங்களை இப்படித் தவறவிட்டு விட்டோமே என்று வருத்தப்படாமல், ஒவ்வொரு நாளையும் முடிந்த அளவுக்கு சந்தோஷமாகவும் திருப்தியாகவும் மாற்றிக்கொள்ள உதவும் உற்சாகமருந்தே மேலே சொல்லப்பட்ட ஆனந்தத்துளிகள்.

மாதவனும் காவ்யாவும் பெற்றவர்கள் பார்த்துச்செய்த இனிமையான இல்லறத்தின் சொந்தக்காரர்கள். திருமணமாகி ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டிருந்தன. ஆனாலும் இப்போதும் இருவரும் மாறாத அன்புடனே வாழ்ந்தனர். கணவன் மனைவி இருவருக்குமான புரிதல் அவர்களின் இல்லறத்தில் நிறைந்துகிடந்தது, வெவ்வேறு கம்பனிகளில் பணிபுரிந்தனர் இருவரும்.

அதிகாலையில் எழுவதில் இருந்து வேலைக்குச் செல்வது வரை அந்த வீட்டில் நடக்கும் அனைத்தையும் ஜன்னல் வழியாகப் பார்த்து ரசித்தபடி தன் வேலைகளைக் கவனிப்பாள் எதிர்வீட்டு பிறேமா.

எதிர்வீட்டில் வாழ்ந்த சுரேஸ்- பிறேமா இருவரினதும் வாழ்க்கை தலைகீழாய் மாறியிருந்தது. திருமணமாகி இரண்டு ஆண்டுகளில் வாழ்க்கை கசக்கத் தொடங்கினால் காலம் எங்கே இருக்கிறது என எண்ணிய பிறேமா, இது பற்றி கணவனிடம் பேசவேண்டும் என எண்ணினாள். எப்போதும் வேலை, பார்ட்டி, என ஓடிக்கொண்டிருக்கும் சுரேஸிற்கு நின்று நிதானித்துப் பேசவே நேரம் இருக்கவில்லை. இதுவே பெரிய விடயமாகி இடைவெளியை அதிகரித்திருந்தது அவர்கள் இருவருக்குள்ளும் அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் எப்படியும் கணவனிடம் பேசிவிடுவது என நினைத்தவள், கணவன் எழுந்து தனது காலை வேலைகளை முடித்துக்கொண்டு வெளியே செல்ல ஆயத்தமாவதைப் பார்த்ததும் கோபம் தலைக்கேற உற்றுப் பார்த்தாள். ''முக்கியமான ஒரு வேலை இருக்கு'' என்றவனிடம் எதுவும் பேசத்தோன்றாது, ''சரி, குடும்ப வாழ்க்கை என்றது சந்தோசமா வாழவேண்டியது, இப்பிடி அர்த்தமே இல்லாம வாழ்றதில அர்த்தமில்லை யோசிச்சு ஒரு முடிவை எடுங்க என்றவள், ஊருக்குப் போகலாம்னு நினைக்கிறேன், ரெண்டு நாளிலை திரும்பி வந்திடுவன்'' என்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு ஏதும் பேசாது செல்வதற்கான ஆயத்தங்களைத் தொடங்கிவிட்டாள்.

இரண்டு நாட்கள் மூன்றாகி ஐந்தானது, போனில் கேட்கும்போது மட்டும் ரெண்டு நாள் இருந்திட்டு வர்றன் என்றவள், உங்களோடு வாழ்ந்த வாழ்க்கைபோதும் என குறுஞ்செய்தி அனுப்பியிருந்தாள். இது பற்றி அவளிடம் பேச தன்மானம் இடம்தராததால் ஜன்னல் வழியாக வெளியே வெறித்தபடி பார்த்துக்கொண்டிருந்தான்சுரேஸ். அப்போது தான் எதிர்வீட்டின் அழகிய இல்லறத்தை அவனும் கண்டான்.

மாலையில், மாதவன் வேலையிலிருந்து வந்துவிட்டதைக் கண்டதும் புறப்பட்டு எதிர்வீட்டிற்குச் சென்றான். முழங்காலில் இருந்தபடி அழகிய பூங்கொத்து ஒன்றை மனைவியிடம் நீட்டிக்கொண்டிருந்த மாதவனைக் கண்டதும் சுரேஸிற்கு ஒரு கணம் பேச்சே நின்று போனது. 'மூன்று வயதில் மகன் இருக்கும்போது இன்னும் இதென்ன விந்தை' என எண்ணியபடி கதவில் சம்பிரதாயமாகத் தட்டினான். இவனைக் கண்டதும் கூச்சத்துடன் உள்ளே விரைந்த மனைவியிடம் ''பார்த்து பார்த்து...'' என்றபடியே ''உள்ள வாங்க'' என இழுத்தான் மாதவன்.

''சுரேஸ்''என்றபடி அமர்ந்து கொண்ட சுரேஸ், எங்கோ வெறித்துப் பார்க்க, ''என்ன ஆச்சு? உங்க நண்பனா நினைச்சு என்கிட்ட தாராளமா பேசலாம்,'' என்ற மாதவனிடம் நடந்த எல்லாவற்றையும் விபரமாகக் கூறினான். அமைதியாகக் கேட்ட மாதவன், ''பொதுவா ஆண்கள் செய்யிற பெரிய தப்பே இதுதான், கல்யாணமான புதுசில ரொம்ப குளோசா இருந்திட்டு மாத ஓட்டத்தில் ரொம்ப விலகிடுறது, வேலை, பார்ட்டி, அது, இது என்டு, அவங்களுக்காக நேரம் ஒதுக்கிறதுக்கே மறந்திடுறம். சில பேர் சண்டை போடுவாங்க, சிலபேர் கேட்டு செய்யவைப்பாங்க, சில பேர் அமைதியா இருந்திடுவாங்க, உங்க மனைவி மாதிரி, என் வாழ்க்கையில என் மனைவிக்கான நேரத்தை நான் எதுக்காகவும் மிஸ்பண்றதே இல்ல, காலையில நான் தான் வேலைக்கு கூட்டிப்போய் விடுவன், ஆனால் மதியம் அவளோட அழைப்போ, மெசேஜ்ஜோ வரலைன்னா ரொம்ப அப்செட் ஆகிடுவன், அவளும் அப்பிடித்தான், சின்னச் சின்ன சந்தோசங்கள்தான் வாழ்க்கையை புதிதா உணரவைக்கிறது'' என்றான்.

ஒரு மணிநேரம் பேசிவிட்டு காவ்யா கொடுத்த தேநீரையும் பருகிவிட்டு தெளிந்த புன்னகையுடன் எழுந்துகொண்ட சுரேஸ், ''நாளைக்கு வந்திடுவா பிறேமா'' என்றான்.

பதிலுக்கு புன்னகைத்த மாதவன் -காவ்யாவிடம் ''இதோ, இப்பவே ஊருக்கு போகப் போறன், வந்ததும் உங்களை மாதிரியே ஒவ்வொரு நொடியையும் புதுசு புதுசா உணர்ந்து ரசித்து வாழப்போகிறோம்'' என்ற சுரேஸிற்கு கைகாட்டி விடைகொடுத்தனர் இல்லறத்தின் இனிமை புரிந்த தம்பதிகளான மாதவன் காவ்யா இருவரும். ★★★★★★★

உதவி 19

## அரசியின் 'உதவும் கரம்'



ஜேர்மனில் வசிக்கும் புலம்பெயர் உறவான செல்வி வைஷ்ணவி குகதாசன் அவர்களின் அகவை நன்நாளில் அவரது பெற்றோர், முல்லைத்தீவில் நிராதரவான நிலையில் வாழும் மாவீரர் குடும்பத்திற்கு 33,000/= பெறுமதியான உதவியை வழங்கியுள்ளனர்.

திரு குகதாசன் குடும்பத்தினர் சென்ற ஆண்டு நடுப்பகுதியில் இங்கு வந்தபோதும் முன்னாள் போராளிகள் இருவருக்கு வாழ்வாதார உதவிக்கென 170,000 (ஒரு இலட்சத்து எழுபதினாயிரம்) ரூபாவினை வழங்கியுதவியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வறுமையின் பக்கங்கள்...

எண்ணங்களில் மட்டுமே
வண்ணங்களைச் சுமந்து
வாழும் வாழ்க்கையில்
குடத்திலுள்ள தண்ணீரை விட
கண்களை நிறைக்கும்
கண்ணீரே அதிகம் அங்கு...
ஆடைகளில் பதுங்கும்
கறையான்களும் மழை
வந்தால் ஓடி ஒளிய
இடமற்றுத் தவிக்கிறது
ஓட்டைகளை அடைக்கும்
ஊசி நூல்களும் அங்கே
தைத்துத் தைத்து
ஓய்ந்திருப்பதால்....
குடிசைக்குள் குடியிருக்கும்
மின்மினிப் பூச்சிகளை
அவர்கள் ரசிப்பதில்லை
இரு கரம் கூப்பி
வணங்குகிறார்கள்
கும்மிருட்டு சூழ்ந்த
அவர்கள் வீட்டை அவை
ஒளி விளக்காய்
மாற்றுவதால்......
பரவிக் கிடக்கும் பசியின்
தட்டுக்களில் தெரியும்
இடைவெளிகளை அங்கே
உணவுகள் நிரப்புவதில்லை
வறுமையின் முகவரியே
அதில் முத்திரை பதித்துச்
செல்கிறது...

-உதயசகி-
யாழ்ப்பாணம்

## பாதை தூரமில்லை

வைகறை புலர்வுகளில்
புதிதாய் பிரசவிக்கிறது
இன்றைய நாளை
இனிதாகச் சூரியன் !
பயணங்கள் அழகாகும்
பரபரப்பும் ஆரம்பமாகும்.
விரைகிறது பாதங்கள்
பாதணிகளை காவியபடி !
பல்வேறு புது முகங்கள்
பற்பல உருவ வேறுபாடுகள்
தனித்துவ மாற்றங்கள்
சில தருணங்களில் புரிந்துணர்வு !
இயற்கையின் இன்பக் கணங்கள்
துன்பம் நிறை கால மாற்றங்கள்
திட்டமிட்டபடி நகர்கின்றன
திருத்தப்பட்ட வாழ்க்கைத் தடங்கள் !
கடந்து செல்லும் நேரம்
கரங்களுக்குள் அகப்படுகிறது
காலத்தை புலப்படுத்தும்
கண்ணாடி அனுபவங்கள் !
வாழ்வின் மகத்துவம்
புலன்களுக்குப் புரிகிறது !
வளைந்த நதியாகி
தொடர்கிறது தேடல்கள் !
பண்பட்ட மனங்களின்
சிந்தனைத் தூறல்களே
பதிவுகளாகப் பூக்கின்றன.
வாழ்க்கைத் தத்துவங்கள் !
போராட்டங்களே வாழ்க்கையை
தீர்மானிக்கும் தீர்க்க தரிசனம் !
கனவுகள் வசப்படும் நேரம்
போகும் பாதை தூரமில்லை !

வேலணையூர் ரஜிந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா...



எதுகை மோனை ஏதுமின்றி
எழுதினேன் பாடல் ஒன்று
தாயே உனை பாட்டில் சேர்க்க
பாடலும் தாலாட்டாய் மாறியதின்று. .
அடைமொழி ஒன்றும் தேவையில்லை
இவள் அன்பை விளக்கிடவே,
அழகியலும் இங்கு தோற்றுப்போகும்
சிறுபார்வை உதிர்த்தாலே
உதிரம் ஊட்டி வளர்த்த
சொந்தம் நீயம்மா
உறவாய் என்றும் என்னுள்
நீயே வாழ்வாயம்மா
பிரிவுகள் வலிகள்
எனைச் சூழ்ந்தால் கூட
உயிராய் உன்னுள்
வாழ்வேன் அம்மா
எனை யாரும் அடித்தால் போதும்
உடனே துடித்திடுவாய்,
உன் ஆருயிர் யாரென
யாரும் கேட்டால்
உனையே முதலாய் சொல்வேன் அம்மா
நீ பசியோடு இருந்தால் கூட
என்னை பசியோடு விட்டதில்லை
என்னுயிர் பிரியும் நொடியில் கூட
உனைநான் கேட்பேன் தாயே!

கே.எஸ்.சாந்தகுமார்
யாழ்.பல்கலைக்கழகம்
விஞ்ஞான பீடம்
இரண்டாம் வருடம்.

# திடம்

சப்தத்தின்
பேராரவாரத்தில்
நிசப்தம் தேடி அலைந்து
பாறை இடுக்கில் அகப்பட்ட
இளந் துளிராகவே....
ஆவி ஒடுங்கி அமிழ்கிறேன்
சற்றே வீசிடும் இதங்காற்று
என் உயிரைத் தழுவிடாது
திசை மாறிச் செல்கிறது....
வாழ்வின் பக்கங்கள்
வன்மமாக கிழிக்கப்பட்டு ....
இறுதியில் இரண்டு
வெற்றுக் காகிதங்களே
எஞ்சியிருக்கின்றன
ஆம்.....
நானும்.....
என் நம்பிக்கையுமே!!

- தமிழ் நிலா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்குரு, பெருந் துன்பத்தில் இருக்கும் ஒரு மனிதர் அதனால் உடைந்து போகலாம் அல்லது அச் சூழ்நிலையிலிருந்து கூடுதல் புத்திசாலித்தனத்துடன் வெளிவரலாம் என்று எங்களிடம் கூறியிருந்தீர்கள். வருத்தம் என்பது எப்படி வளர்ச்சிக்கான ஒரு வழியாக இருக்க முடியும் என்பதை விளக்க முடியுமா?

வாழ்க்கையை அடியோடு புரட்டிப் போடும் துயரங்களை பெரும்பாலான மக்கள் அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால் குறிப்பிட்ட சாராருக்கு, உண்மையிலேயே அவ்வாறு நிகழும்போது, அவர் வருத்தம் உண்டாகும்போது, ஏதோ ஒரு வழியில் உபயோகம் நிறைந்த வேலையைச் செய்வார்கள். வழக்கமாக, தங்கள் வாழ்வில் மாபெரும் கர்மயோகிகளாக இருப்பவர்கள் இந்த மாதிரி காயப்பட்ட மக்களாகவே இருக்கின்றனர்.

இதற்கொரு உதாரணம் கூறுகிறேன். மகாராஷ்ட்ராவில் ஆரம்பப் பள்ளி ஆசிரியராக ஒருவர் இருந்தார். சாகாயத்திரி மலைகளுக்கு சற்று அப்பால் இருந்த ஒரு கிராமத்தில் தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வாழ்ந்தார். ஏதோ ஒரு ஆட்கொல்லி நோய் அவரது மனைவி மற்றும் குழந்தைகளை பலிகொண்டதில், முற்றிலுமாக தனித்து



# சத்குரு பதில்கள்

களது வாழ்வின் ஆதார சுருதிகளாக இருந்த அனைத்தும் பறிக்கப்பட்டு, ஆழமான சோகம் அவர்களுக்குள் தங்கி விடுகிறது. இந்த சோகத்தை மாற்றுவதற்கு அநேக வழிகள் உண்டு.

எந்த ஒரு உணர்ச்சியையும் ஒரு ஆக்கபூர்வமான சக்தியாக ஒருவரால் உருமாற்ற முடியும். அது ஒரு எதிர்மறையான ஆற்றல் அல்ல.

படைப்பில் எதிர்மறையானது என்று எதுவும் இல்லை. சிலர் ஒரு மூலையிலேயே உட்கார்ந்துகொண்டு, மற்றவர்களுக்குத் துன்பம் உருவாக்கியவாறு தங்களையே பைத்தியமாக்கிக் கொள்கின்றனர். வேறுசிலர், அதிக

விடப்பட்ட அந்த மனிதர் நொறுங்கிப் போய்விட்டார். ஏனெனில், அவரது ஒட்டுமொத்த வாழ்வும் அந்த மூன்று நபர்களை சுற்றியே இருந்தது.

புத்தி பேதலித்துப் போகும்நிலையில் இருந்த அவர் எதுவும் செய்யத் தோன்றாதவராக, சாகாயத்திரிமலைகளுக்குள் கால்போன போக்கில் நடந்து சென்று அமர்ந்து விட்டார். அவர் குழந்தையாக இருந்தபோது இந்த மலைகள் இருந்த விதத்தை நினைவு கூர்ந்தார். அப்போது அந்த மலைகள் பசுமையாக, மரங்கள்நிறைந்து காணப்பட்டன. இப்போது, அது தரிசாகி உஷ்ணம் தகிக்க, தாங்க முடியாததாக இருந்தது. பல நாட்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவர் அங்கேயே அமர்ந்துகொண்டு கீழே விழுந்தபழம், கொட்டைகளை எடுத்துச் சாப்பிட்டவாறு சுற்றி அலைந்து கொண்டிருந்தார். சிலகாலம் கழிந்த பிறகு இந்த மலைகள் தரிசாகிவிட்ட காரணத்தினால் தான், காலம்தன் வாழ்க்கையையும் தரிசாக்கிவிட்டது என்று முடிவு செய்தார். அது உண்மையா, இல்லையா என்பது முக்கியமல்ல. இதற்காக ஏதாவது செய்யவேண்டும்என்று உறுதி கொண்டார்.

அவர்அங்கே ஒரு துறவியைப்போல வாழ்ந்து கொண்டு, ஒற்றை மனிதராகவே, எங்கெல்லாம் மரங்களிலிருந்து விதைகள் விழுந்திருக்கின்றன என்று தேடி எடுத்து, எவருடைய துணையும் இல்லாமல், ஏறக்குறைய நான்கு இலட்சம் மரங்களை நட்டு, வளர்த்தெடுத்தார். இருபத்தைந்து வருடங்கள் அவர் அவைகளுக்காக உழைத்தார். இந்த ஒரு மனிதரால் சாகாயத்திரி மலைகளில் இன்றைக்கு நான்கு இலட்சம் மரங்கள் நிற்கின்றன. யாரும் அவருக்கு எந்த யோகாவும் கற்றுத்தரவில்லை என்றாலும், அவர் ஒரு யோகிதான்.

எந்த ஒரு உணர்ச்சியையும், வாழ்வில் ஆக்கபூர்வமான சக்தியாக உருமாற்ற முடியும். அது ஒரு எதிர்மறையானஆற்றல் அல்ல. படைப்பில் எதிர் மறையானது என்று எதுவும் இல்லை. ஏதோ ஒன்று எதிர்மறை என்றும், மற்றொன்று நேர்மறை என்றும் நாம் நினைக்கலாம்.

ஆனால் எதிர்மின்னோட்டமும், நேர் மின்னோட்டமும் இணைவதால் தான் ஒரு விளக்கு ஒளி தருகிறது. எதிர்மறையானது தவிர்ப்பதற்கானதல்ல, அதுவும் நேர்மறை போல முக்கியமானது. உங்களுடைய துயரம் உங்களை முழுமையற்றவராக நினைவுபடுத்தினால் அது நல்லது. உங்கள் வளர்ச்சிக்கு அந்த துயரத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்களுக்குள் சோகம் எழும்போது, நீங்கள் இன்னும் அதிக கருணையுடையவராக, அதிக அக்கறையுள்ளவராக மற்றும் அதிக அன்பு கொள்பவராக மாறினால், உங்களிடம் சிறிதளவு புத்திசாலித்தனம் இருக்கிறது எனலாம். நீங்கள் வருத்தம் கொள்ளும்போது, எரிச்சலாகவும், கோபமாகவும்,ஒட்டுமொத்த உலகமும்தவறாக இருப்பதாகவும் நினைத்தால், நீங்கள் ஒரு முட்டாள்தான். அந்தக் கணத்தில் யாராவது உங்களைத் தொடர்பு கொண்டால், உங்களது வருத்தம் மிக எளிதில் கோபமாக மாறமுடியும்.

ஆகவே துயரத்தை நீங்கள் கோபமாக மாற்றுகிறீர்களா அல்லது அன்பு மற்றும் கருணையாக மாற்றுகிறீர்களா என்பது முக்கியம். நீங்கள் வருத்தமாக இருக்கும் போது,கருணையானவராகஉருமாறுவது மிகவும் எளிது. உங்களுடைய எல்லா உணர்ச்சிகளையும் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தக்கற்றுக்கொள்வது மிகவும் முக்கியமானது. மகிழ்ச்சிகரமாக இருப்பது மட்டும் முக்கியமானதல்ல.

துயரத்தை நீங்கள்அறியவில்லை என்றால், நீங்கள் பக்குவமடைய மாட்டீர்கள். துயரத்தையும், வலியையும் நீங்கள் அறிந்திருந்தால்தான் நீங்கள் ஒரு பக்குவமான நபர். இல்லையென்றால், உங்களுக்குள் நிகழ்வது என்ன என்பதை நீங்கள் ஒருபோதும் புரிந்துகொள்ள மாட்டீர்கள் அல்லது உங்களைச் சுற்றியிருப்பவர்களிடம் என்ன நிகழ்கிறது என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்கள்.

**ஆகவே துயரங்களை ஆக்கபூர்வமாய் மாற்றிக்கொள்ளுங்கள். அதுவே வாழ்க்கையை அர்த்தமுடையதாய் மாற்றும்.**

நன்றி : இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நம்மை நாம் ஆள்வோம்

# நம் நாடும் சிங்கப்பூராகலாம்.

**அனைத்து இலங்கையர்களுக்கும் மிகச் சிறந்த வேண்டுகோள். இந்தத் தகவல்களை சங்கிலித்தொடரைப் போன்று குறைந்தபட்சம் ஐந்து நபர்களுக்கு பகிருமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.**

- சாலைகள் / தெருக்களில் குப்பைகளைப் போடாதீர்கள்.
- சாலைகள் மற்றும் சுவர்களில் எச்சில் உமிழாதீர்கள்.
- சுவர்களில் மற்றும் நாணயத்தாள்களில் எழுத வேண்டாம்
- மற்றவர்களை துஷ்பிரயோகம்செய்யவோ அவமதிக்கவோ வேண்டாம்.
- நீர் மற்றும் மின்சாரம் வீண் விரயமாவதைக் கண்ட உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ஒரு மரம் நடுங்கள்.
- போக்குவரத்து விதிகளைப் பின்பற்றவும்
- உங்கள் பெற்றோரிடமும், அவர்களின் பெற்றோர்களிடமும் கவனமாக இருங்கள், அவர்களுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளுங்கள், அவர்களிடம் எப்போதும் மரியாதை காட்டுங்கள்.
- பெண்களை மதியுங்கள்.
- ஆம்புலன்ஸ் செல்ல வழி கொடுங்கள்
- நாம் பல தடவை நாட்டை மாற்றுவதைவிட ஒரு முறை நம்மை நாமே மாற்றினால் நாடு தானாகவே மாறும்.
- எங்கள் குழந்தைகள் ஒரு சுத்தமான மற்றும் பாதுகாப்பான சூழலில் வாழ விரும்பினால், உங்கள் அன்றாட வாழ்க்கையில் இதைப் பின்பற்றும்படி சொல்லிக் கொடுங்கள்.
- எந்த தலைவராலும் நாட்டை மாற்ற முடியாது, எங்களை நாங்களே மாற்றுவதன் மூலம் நம் நாட்டை அன்பான நாடாக மாற்றிக்கொள்ள முடியும்.

**இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் சிறந்த பலனை அடைவதற்கு ஒவ்வொரு நண்பனுக்கும் அல்லது குழுவுக்கும் இந்த முக்கியமான செய்தியை பரப்பிச் செல்லுங்கள்.**

இத் தகவலை வழங்குபவள்

மகளிர் மாத சஞ்சிகை ஒளிஅரசி இல்லத்தரசிகளின் தோழி
அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வாழ்த்து + பொழுதுபோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காட்டில் நிறைய விலங்குகள் வசித்து வந்தன. அனைத்து விலங்குகளும் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வந்தன. அங்கே வசித்த மயில் மட்டும் எப்போதும் மற்ற பறவைகள் மற்றும் விலங்குகளை பார்த்துப் பொறாமை பட்டுக்கொண்டே இருந்தது.

அது, யானையைப் பார்த்து பெரியதாய் இருக்கிறது என்றும், மானைப் பார்த்து வேகமாக ஓடுகிறது என்றும் பொறாமைப்படும்.

இந்நிலையில் ஒரு மழைக்காலத்தில் அந்த மயில் அழகாக ஆடத் தொடங்கியது. அப்போது பாட ஆரம்பித்த மயில் தன் மோசமான குரலை எண்ணி அழத் தொடங்கியது.

அப்போது அங்கு வந்த மைனா, மயிலைச் சமாதானப்படுத்த அருகில் சென்றது.

# பலவீனத்தை நினைத்துப் பயப்படலாமா?



மயில் தனது வருத்தத்தை மைனாவிடம் கூறியது.

மைனா மயிலிடம், நீமிகவும் அழகாய் இருக்கிறாய், அதை நினைத்து நீ எப்போதாவது மகிழ்ச்சியடைந்திருக்கிறாயா என்று கேட்டது.

மயில் சிறிது நேரம் மௌனமாய் இருந்துவிட்டு, இல்லை என்று பதில் சொன்னது.

இதனைக் கேட்டு சிரித்த மைனா, உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு சிறப்பும் வலிமையையும் இருக்கும், அது எது என்பதைத் தெரிந்து அதை மேம்படுத்த வேண்டுமே தவிர, எது நம்மிடம் இல்லையோ அதை நினைத்து வருத்தப்படவோ, பொறாமைப்படவோ கூடாது என அறிவுரை கூறியது.

தன் தவறை உணர்ந்த மயில் மைனாவிற்கு நன்றி சொன்னது.

நம்மிடம் இருக்கும் பலத்தை பயன்படுத்தி, நமது பலவீனத்தை எதிர்கொள்ள வேண்டுமென்பதை இக்கதையின் வழியாக அறிய முடிகிறது.

நன்றி : முத்துக்கமலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் வேதம் என சிறப்பிக்கப்படும் மகாபாரதம் தமிழில் வில்லி புத்தூராழ்வாரால் இயற்றப்பட்டது. எனவே அது வில்லிபாரதம் என அழைக்கப்படுகின்றது. கம்பரின் கம்பராமாயணத்தைப்போலவே வில்லிபா ரதப் பாடல்களும் சொற் சுவையும், இலக்கிய நயமும் பொருந்தியவை. அவற் றில் ஒரு பாடலில் வெளிப்படும் இலக்கிய நயச் சுவையினை இங்கு காண்போம்.

பாண்டவருக்கும், கௌரவர்க்கும் பாரதப் போரானது நிகழ்வதற்கு முன்னர் பாண்டவர் சார்பில் கௌரவரிடம் தூது சென்றுவர கண்ணபிரானை தருமன் பணிக்கின்றான். அப்போது தருமனின் சமாதானப் போக்கினைக் கண்டு கோபம் கொண்ட வீமன் தருமனைப் பார்த்து பின்வருமாறு உரைத்தான்.

**மலை கண்டதென என் கைம் மறத் தண்டின் வலி**
**கண்டும் மகவான் மைந்தன்**
**சிலை கண்டும் இருவர் பொரும் திறல் கண்டும்**
**எமக்காகத் திருமால் நின்ற**
**நிலை கண்டும் இவள் விரித்த குழல் கண்டும்**
**இமைப்பொழுதில் நேரார்தம்மைக்**
**கொலைகண்டு மகிழாமல் அவன் குடைக் கீழ் உயிர்**
**வாழக் குறிக்கின்றாயே!'**



**கட்டுரையாக்கம்**
**இரா. நிஷாந்தன்**

அதாவது, மலையினைப் போல உறுதியாக எனது கையில் உள்ள வீரம் பொருந்திய கதா யுதத்தின் வலிமையைக் கண்ட பின்பும், இந்திரன் மகனாகிய அர்ச்சுனனின் காண்டீப வில்

# தருமன் நிலை கண்ட வீமன் கோபம்



லின் வலிமை கண்டும், நகுலன் மற்றும் சகா தேவர்களில் பெரும் திறமை கண்டும், இவை எல்லாவற்றையும் விட நமக்காக எம்முடன் திருமாலாகிய கண்ணன் நிற்கின்ற நிலை கண்டும், பாஞ்சாலியின் விரிக்கப்பட்ட கூந்த லைக் கண்ட பின்னரும் கண் இமைக்கும் நேரத்தில் பகைவரான கௌரவர்களைக் கொன்று மகிழ்ச்சியடையாமல், கொடிய துரியோதனனின் குடையின் கீழ் உயிர் பெற்று மகிழ் ச்சியுடன் வாழ விரும்புகின்றாயே, எனக் குமுறினான் வீமன்.

**இங்கு வீமன் தன் வீரத்தையும், அர்ச்சுனன் திறனையும், கண்ணன் தமக்காக நிற்கின்ற தன்மையையும்** அடிப் படையாகக்கொண்டு போரில் வெற்றிபெற முடியும் என்பதை தருமனுக்கு உரைக்கின் றான்.

வீமனின் கதாயுதம் பெரும் வலிமை கொண்டது.

அது போல அர்ச்சுனனின் காண்டீபம் எனும் வில் ஆற்றலுக்கு முன் யாரும் நிலை கொள்ள முடியாது.

இந்திரனையே தன் வில் ஆற்றலால் தோற்கடித்தவன்.

அது மட்டுமின்றி நகுலன், சகாதேவனும் பெரும் திறமை படைத்தவர்களே, இவை தவிர தமக்காக தம் துன்பம் தீர்ப்பதற்காக கண்ணன் தம்முடன் நிற்கின்றான்.

அது ஒன்றே போதும் போரில் வெற்றி பெறுவதற்கு.


ஆனால் இவை அனைத்தையும் கண்ட பின்னரும் சமாதானமாக பகைவருடன் கலந்து வாழ தருமன் விரும்புகின்றானே என் பது வீமனின் கோபத்திற்கு காரணம்.

இவ்வாறாக ஒரு சொல்லைக்கொண்டு பாடல் முழுவதும் ஒரு நயத்தினை வெளிப்படுத்தியிருக்கும் வில்லிபுத்தூராழ் வாரின் கவித்துவம் வியக்கத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய் ஹனுமான்



ஹனுமானை வழிபட்டால் சிவனை வழிபட்டதற்கான பலனையோ மகா விஷ்ணுவை வழிபட்டதற்கான பலனையோ நாம் பெறலாம். மார்கழி மூலத்தில் அவதரித்த ஹனுமானின் பெருமைகள் ஸ்ரீராம பிரானின் அனுக்கிரகத்தால் மிகஉயர்ந்து காணப்படுகிறது.

ராமபிரானின் நாமத்தை யார் உச்சரிக்கிறார்களோ அங்கே ஹனுமான் வந்து அமர்வார்என்பதுஐதீகம். ஸ்ரீராமர்மானுட அவதாரம் பெற்றவர். ஒரு தடவை தன்னுடன் இருந்தவர்களிடம் நான் வைகுந்தம் போகிறேன், என்னுடன்வருபவர்கள்அனைவரும் வைகுந்தம் சேரலாம் என்றாராம். அங்குள்ள அனைவரும் ஸ்ரீராமருடன் வைகுந்தம் செல்ல வருவதாகக் கூறினார்களாம். ஆனால் ஹனுமான் மாத்திரம் ஒன்றும் சொல்லாமல் இருப்பதைப் பார்த்து ராமர் கேட்டாராம், ஏன் மௌனமாய் இருக்கிறாய்? நீ என்னுடன் வைகுந்தம் வரவில்லையா?


அதற்கு ஹனுமான், நான் உங்களுடன் வைகுந்தம் வரவில்லை, ஏனென்றால் அங்கே உங்கள் திருநாமத்தை கேட்கமுடியாது, ஆனால் பூலோகம் எங்கும் உங்கள் நாமம் ஒலிப்பதை கேட்கமுடியும், உங்கள் திருக்கோயில்களைக் காணமுடியும் என்றாராம். ஹனுமனைப் பணிங்கு அருளைப் பெறுவோம்.



திருமதி தேவா மாதவன்,
கொழும்பு.

# கதை மூலம் ஆங்கிலம் கற்போம்

## Butterfly Wings



Nazir had been sitting in the park since morning. He was staring at the flowers, they were in full bloom, a welcome sign of the spell cast by spring. These brightly coloured flowers with their heady fragrance were enticing all the tiny creatures who had made their homes in the shrubs, trees, flowers, and grass. Among these creatures, there were butterflies, all with brightly coloured wings, flitting among the flowers, each trying to outdo the other with their aerial acrobatics.

He had always been fascinated by the sights and smells of the park, here he reminisced about the past where it had seemed that there was peace, love, and prosperity all around. He was particularly attracted to the colourful wings of the butterflies, and from time to time, he actually tried to catch one, but he never succeeded, they were simply too fast and too agile.



தமிழில்
26 ஆம்பக்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் ஆளுமைகளை அடையாளப்படுத்தி ஆவணப்படுத்தும் ஒளி அரசியின் இம்மாத நட்சத்திர இல்லத்தரசியாக ஜொலிப்பவர் இங்கையின் மொழி பெயர்ப்புத்துறையின் முன்னோடி மாதுசிரோன்மணி சரோஜினிதேவி அருணாசலம் அவர்களாகும். ஒரு முதுமாணி பட்டதாரியாக இருந்தபோதிலும் மொழி பெயர்ப்பை தனது தொழிலாகத் தேர்ந்தெடுத்து அத்துறையிலேயே ஊன்றி கால் பதித்து சுமார் ஐந்து தசாப்த காலமாக இத்துறையில் பிரகாசிக்கும் இவர், இதுவரை யாராலும் கண்டுகொள் ளப்படாதஒரு தமிழ் பெண்ணாவார். இலைமறைகாயாக அல்ல கனியாக திகழும் இந்த மாது சிரோன்மணி இலக்கிய மொழிபெயர்ப்புகளுக்காக 'கொடகே' விருது பெற்ற பெருமைக்குரிய பெண்ணாவார்.

இலங்கையின் மொழிபெயர்ப்புத்துறையில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரில் இவர் குறிப்பிடத்தக்க ஒருவராவார். மொழிபெயர்ப்புத்துறையில் தமிழ் பெண்கள் மத்தியில் சிங்கள மொழியில் ஆளுமை பெற்ற ஒரேயொரு பெண் இவர் ஒருவராகத்தான் இருக்கலாம். இலங்கையின் சிங்கள இலக்கியத்துறையில் கொடிகட்டி பறக்கும் பிரபல எழுத்து ஜாம்பவான்களின் நாவல்களை எல்லாம் மொழிபெயர்த்த பெருமையும் இவரையே சாரும். ஆனாலும் சிங்கள அமைப்புகள் எல்லாம் இவரது சேவையை மதித்து கௌரவிக்கும்போது தமிழ் பேசும் நல்லுலகம் இவரை இன்னும் கண்டுகொள்ளவில்லை என பெரிதும் ஆதங்கப்படுகிறார் திருமதி சரோஜினிதேவி அருணாசலம் வாசகர்களுக்காக அவர் பகிர்ந்து கொண்டவை:



**உங்களைப்பற்றிச் சற்றுக் கூறுங்கள் அம்மா?**

நவாலியூர் சோ.நடராஜா என்ற பெயர் பலருக்கு நன்கு தெரிந்த பெயராகும். இவருக்கும் -பரமேஸ்வரி அம்மாவுக்கும் அன்பு மகளாக கொழும்பில் பிறந்தேன். கொழும்பு பம்பலப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன். எனது ஆரம்பக் கல்வியை பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடம் கல்லூரியில் கற்றேன்.

தந்தை நாட்டின் பல பாகங்களில் கல்விப் பணிப்பாளராக கடமை புரிந்ததால் நானும் பல பாடசாலைகளில் கல்வி பயின்று இறுதியாக மீண்டும் திருக்குடும்ப கன்னியர்மடத்தில் உயர்தரம் கற்று சித்தியடைந்தேன். பேராதனை பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி கலைப் பட்டதாரியானேன்.

எனது முதுமாணி பட்டப்படிப்பை களனி பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியில் கற்று பட்டம் பெற்றேன். காப்புறுதி அதிகாரியான ஆள்வையனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணாசலம் என்பவரை மணந்தேன். எனக்கு ஒரேயொரு மகள். பெயர் ஜயந்தினி, திருமணமானவர். அவர் தற்போது அவரது கணவருடன் அவுஸ்ரேலியாவில் வசிக்கிறார்.

**உங்களின் தொழில் அனுபவங்களைப்பற்றி கூறுங்களேன்?**

எனது தந்தை ஒரு மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றினார். எனக்கும் மொழிபெயர்ப்புத்துறையில் ஒரு ஆர்வம் ஏற்பட்டது. எனவே எனது முதல் தொழிலாக நான் மொழிபெயர்ப்பாளராக 1967இல் அரச கருமமொழித் திணைக்களத்தில் இணைந்தேன். பின்னர் மொழிபெயர்ப்பு அதிகாரியாக பதவி உயர்வு பெற்று ஓய்வு பெறும் வரை இத்துறையிலேயே செயற்பட்டேன். நான் நீதி அமைச்சினால் அரச அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளராகவும் உள்ளேன்.

**அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் இன்னும் மொழிபெயர்ப்புத்துறையில் ஓயாது இயங்கிக்கொண்டிருக்கிறீர்களே இதன் இரகசியம் என்ன?**

ஒரு மொழி ஒரு மனிதனுக்குச் சமனானது. எனது தந்தையின் மொழிபெயர்ப்புத்துறை ஆளுமைதான் என்னையும் இத்துறைக்கு இழுத்துச்சென்றது. சிறு வயதிலேயே மும்மொழி; சிறுவர் கதைப்புத்தகங்களை எனக்கு வாசிக்கக் கொண்டுவந்து தருவார். இதனால் வாசிப்பு எனது சுவாசிப்பானது. அதுவே படிப்படியாக இத்துறையில் நுழையச்செய்தது.

**ஒரு முதுமாணிப் பட்டதாரியான நீங்கள் நிர்வாகத்துறையில் உயர் பதவி வகித்திருக்கலாமே? ஏன் மொழிபெயர்ப்பாளரானீர்கள்?**

நாம் கடந்து வந்த கால சூழ்நிலை என்னை இத்துறையிலேயே ஊன்றி கால் பதிக்கச் செய்துவிட்டது. இனக்கலவரம் உச்சக்கட்டத்தை அடைந்த காலமது. மொழிப்பிரச்சினை காரணமாகத்தான் எல்லா இனப்பூசல்களும் ஏற்படுகின்றன. எனவே 'சிங்களவர் தமிழ் மொழியையும் தமிழர் சிங்கள மொழியையும் கட்டாயம் படிக்க வேண்டும். அதன் மூலம் இனப்பூசல்களை ஒழிக்க முடியும். எனவே நீயும் மும்மொழிகளையும் நன்றாகப் படி' என்று எனது தந்தை எனக்கு ஆலோசனை கூறினார். எனவே நான் எனது சிங்கள மொழித்திறனை வாசிப்பால் வளர்த்துக்கொண்டேன். அதுமட்டுமல்ல நான் குழந்தையாய் இருக்கும் போதே சிங்கள மொழியை ரசித்திருக்கிறேன் என்று எனதம்மா சொல்வார். எனக்குத் தாலாட்டுப் பாடிய 'ஆயா' வீட்டுப்பணிப்பெண் ஒரு சிங்களப் பெண்தான். அவர் ஒரு பணிப்பெண் என்பதை விட ஒரு தாயைப்போலவே என்னைப் பராமரித்தார். எனக்கு அவர் தாலாட்டு பாடியதே சிங்கள மொழியில் தானாம். 'தொய் தொய் தொய்ய பபா-பை பை பை பை பய்ய பாபா' என்ற பாடல் கேட்டு தான் நான் கண்ணுறங்கியுள்ளேன் என்றால் எனக்கு சிங்கள மொழியில் அன்றே பற்று ஏற்பட்டது. பாடசாலையில் கல்வி கற்கும் காலங்களில் சிங்கள மாணவிகளுடன்தான் நான் நெருங்கிப் பழகினேன்.

அத்தோடு எனது தந்தை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் முதல் அறிவிப்பாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். அதனையடுத்து அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடமை புரிந்தவர். அதுமட்டுமல்ல அக்காலத்தில் சிறந்த மொழி பெயர்ப்பாளராகவும் திகழ்ந்தார். 'செலலிஹினி சந்தேசய' என்ற நூலை 'பூவை விடு தூது' என்று கவிதை நடையில் மொழிபெயர்ப்புச் செய்தவர் எனது தந்தை. எனது மொழிபெயர்ப்புத்துறையின் பின்னணி இதுதான்.

**நீங்கள் மொழிபெயர்த்த முதலாவது நூல்?**

சிவப்புச்சட்டைக்காரி என்ற சிறுவர் நூலே நான் முதன்முதலில் மொழி பெயர்ப்பு செய்த நூலாகும். தென்னாலிராமன் கதைகளை 2004 ஆம் ஆண்டில் சிங்களத்தில் மொழிபெயர்த்து 'தெனாலிராமன் கதா' என்ற பெயரில் வெளியிட்டேன்.

**சிங்களமொழியில்சாகித்தியமண்டலபரிசுபெற்றபலநாவல்களைதமிழில்மொழிபெயர்ப்புச் செய்துள்ளீர்கள் இதுபற்றி ...?**

சிங்கள இலக்கியத்தில் சிறந்து விளங்கும் குமாரதுங்க முனிதாசவின் 'மங்குல் கேம' (கலியாணச்சாப்பாடு ) என்ற நூலையும் 'ஹத்பண ' (செத்துப் பிழைத்த சின்னசாமி) என்ற நூலையும் எனது தந்தை கொண்டு வந்தார். அதனை நான் 1972ஆம் ஆண்டு மொழிபெயர்த்தேன். அதனையடுத்து குமாரதுங்க முனிதாசவின 'ஹீன்செரே' (மெலியார் மிடுக்கு) என்ற சிறுவர் இலக்கிய நூலை 1973ஆம் ஆண்டு மொழி பெயர்த்தேன் பிரபல இலக்கிய கர்த்தாவான டி.பி.இலங்கரத்னாவின் பிரபல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலான 'அம்ப யாலுவோ' (இணை பிரியாத நண்பர்கள்) என்ற நூலையும் 1973ஆம் ஆண்டில் மொழிபெயர்த்தேன். 1971ஆம் ஆண்டு சாகித்திய மண்டல பரிசு பெற்ற நாவலான ஆர்.ஆர்.சமரகோனின் 'கே குருல்லோ'(சிட்டுக்குருவிகள்)' என்ற நாவலை 1992ஆம் ஆண்டில் மொழிபெயர்த்தேன்.

பிரபல நாவலாசிரியையான அனுலா விஜேரத்ன மெனிக்கேயின் சாகித்திய மண்டல பரிசு பெற்ற 'வடவாகின்ன' (வடவா முகாக்கினி ) என்ற நாவல் என்னால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

சோமா ஜயக்கொடியின் 'சிதுஹத் யசோதரா' (சித்தார்த்த யசோதரா) என்ற சிங்கள சரித்த நாவல் 2008ஆம் பேராசிரியர் சிறி குணவர்தனாவின் 'ஹெவனெல்ல' (நிழல் ) என்ற நாவல் 2006ஆம் ஆண்டும் சிபில் வெத்தசிங்கவின் 2009 ஆம் ஆண்டு அரச இலக்கிய விருது பெற்ற 'வெனியங் கலு வெனியங்'- (சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு) என்ற பெயரிலான சிறுவர் நூல் என்பன என்னால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டவை.

**மொழிபெயர்ப்புக்கான நூல்களை நீங்கள் எவ்வாறு பெற்றுக்கொள்கிறீர்கள்?**

ஆரம்ப காலத்தில் எனது தந்தைதான் அவற்றை தேடிக்கொண்டு வந்து தருவார். தந்தையின் மறைவையடுத்து எனது கணவர் எனது மொழிபெயர்ப்புப் பணிகளுக்கு உதவினார். தற்சமயம் இந்த இருவரையும் நான் இழந்து தவிக்கிறேன்.

**இந்த நூல்களின் மொழிபெயர்ப்புக்காக உங்களுக்கு கொடுப்பனவுகள் ஏதும் வழங்கப்படுகின்றனவா?**

விருதுகள் பெறும்போது கிடைக்கும் பணத்தொகை மட்டுமே எனக்கு காசாக கிடைப்பவை. அதுதவிர எனது மொழிபெயர்ப்பு பணிகளுக்காக குறித்த நூலாசிரியரிடமிருந்தோ நூலை வெளியிடும் வெளியீட்டார்களிடமிருந்தோ எவ்வித கொடுப்பனவும் எனக்கு கிடைப்பதில்லை.

**நீங்கள் அரச அங்கீகாரம் பெற்ற ஒரு மொழிபெயர்ப்பாளர். எனவே பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபத்துக்கிணங்க மொழிபெயர்ப்புக்கான கொடுப்பனவுகளை பெறலாமே?**

கொடுப்பனவுகளை கேட்டால் மீண்டும் என்னிடம் நூல்களை தர மாட்டார்களோ என்ற அச்சம் என்னை ஆட்கொள்கிறது. நான் பெறும் ஓய்வூதியக்கொடுப்பனவு எனது மருந்துச்செலவுக்கே சரியாகிவிடும். எனக்கு வேறு வருமானங்களுமில்லை. எனினும் பழக்க தோசமாகவே நான் இந்தப் பணியை செய்து வருகிறேன்.

**மொழிபெயர்ப்புத்துறையில் பெண்களின் பங்களிப்பு எப்படி இருக்கிறது?**

என்னைப்பொறுத்தவரை விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே இத்துறையில் உள்ளனர். தமிழ் பெண்கள் என்று கூறும் போது எனக்கு தெரிந்தவரை மொழிபெயர்ப்புத்துறையில் என்னைப்போல இவ்வளவு தூரம் பயணித்த வேறு பெண்கள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

**இந்த மொழிபெயர்ப்புத்துறையில் உங்களது பங்களிப்புக்காக அரச மட்டத்தில் பல விருதுகள் வழங்கப்பட்டனவே?**

ஆமாம்! 2009ஆம் ஆண்டின் சிறுவர் இலக்கியத்துக்காக கலாசார அலுவல்கள் அமைச்சினால் அரச இலக்கிய விருது கிடைத்தது. 2007ஆம் ஆண்டு நிழல்கள் என்ற நாவல் மொழிபெயர்ப்புக்காகவும் அரச இலக்கிய விருது. 2013ஆம் ஆண்டு களுத்துறை மத்துகமை சீ.டப்.கன்னங்கரா தேசிய கல்லூரியில் நடைபெற்ற அரச தேசிய கலாசார விழாவின் போது 'தேச நேத்ரு' என்ற பட்டம். கடந்த ஆண்டு கொடகே நிறுவனம் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்துடன் இணைந்து நடத்திய கொடகே விருது வழங்கும் விழாவின் போது விருதும் பொற்கிழியும் வழங்கப்பட்டன. ஆனால் எனக்கு உடல் நலக்குறைவினால் அந்த விழாவில் கலந்துக்கொள்ள முடியவில்லை. கொடகே நிறுவனத்தின் அதிபதியான உயர்ந்த உள்ளம் கொண்ட சிறி சுமன கொடகே அவர்கள் தம்பி மேமன்கவியுடன் எனது இல்லம் தேடி வந்து இந்த விருதினை எனக்கு கையளித்து என்னை கௌரவப்படுத்தி நெஞ்சம் நெகிழச்செய்த இந்த நிகழ்வை என் வாழ்நாளில் என்றும் மறக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்த விருதுகளை பெறும் போது உங்களது மனநிலை எப்படி இருந்தது?**

உண்மையிலேயே எனக்கு எனது தந்தையைத்தான் நினைவுக்கு வந்தது. மொழிபெயர்ப்புத்துறையில் என்னை ஈடுபடுத்தியதே என் தந்தைதானே. இன்று இந்த வெற்றிகளைக் காண அவரில்லையே என்ற ஏக்கம்தான். எனவே எனக்கு கிடைத்த அனைத்து விருதுகளையும் எனது தந்தைக்கே சமர்ப்பணம் செய்கின்றேன். அத்தோடு நான் கொடகே நிறுவனத்துக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். வீடுதேடி வந்து விருது வழங்கி கௌரவித்தமை என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வாகும். இந்த பெருந்தகைகளுக்கு நான் என்றும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.



**தற்சமயம் மொழி பெயர்த்துக் கொண்டிருக்கும் நாவல் எது ?**

சிங்கள இலக்கிய உலகில் பிரபல பன்னூலாசிரியரான ஜயசேன ஜயகொடியின் 'அமாவெஸ்ஸ' (அமுதமழை') என்ற நாவலைத்தான் நான் இறுதியாக மொழிபெயர்த்துள்ளேன். இந்த நாவல் புத்தரின் கதையாகும். இந்த நாவலாசிரியர் மிகவும் அற்புதமாக அந்த நாவலை எழுதியுள்ளார். எனவே நான் விரும்பி ரசித்து மொழிபெயர்த்த நாவல் இது.

**உங்களது வாழ்வில் நிகழ்ந்த இனிப்பான கசப்பான இரு நிகழ்வுகள் பற்றி?**

இனிப்பான சம்பவம் என்றால் எனது ஒரே மகளுக்கு ஒரு மகள் பிறந்துள்ளார். எனக்கு பேர்த்தி ஒன்று கிடைத்திருப்பது இனிப்பான செய்திதான் . ஆனால் எனது ..வாழ்க்கைத்துணைவர் 1999ஆம் ஆண்டு என்னை விட்டுப்பிரிந்தது எனது வாழ்வில் கசப்பான நிகழ்வுதானே

**மொழிபெயர்ப்புத்துறையில் பிரவேசிக்கும் புதியவர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை?**

ஒரு மொழிபெயர்ப்பாளருக்கு தாம் மொழிபெயர்க்கின்ற மொழியிலும் மூல மொழியிலும் நல்ல தேர்ச்சி இருக்க வேண்டும். அந்தந்த கலாசார விழுமியங்களையும் தெரிந்திருக்க வேண்டும். கருத்துச்சிதைவுகள் ஏற்படக்கூடாது. திரிவுபடுத்தலும்கூடாது. உள்ளதை உள்ளவாறே உரைக்கும் பக்குவமும் வேண்டும்.

புன்னகையோடு உரையாடி தனது உள்ளக்கிடக்கைகளைப் பகிர்ந்துகொண்ட அவருக்கு ஒளிஅரசியின் சார்பில் நன்றி கூறி விடைபெற்றோம்.

**நேர்கண்டவர்:**

**கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்**



'ஒளிஅரசியின்' நட்சத்திர இல்லத்தரசியாக மகுடம் சூட்டப்பட்ட கொழும்பு கைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபரான திருமதி நஸீரா ஹசனாருக்கு ஒளிஅரசி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தது. ஒளிஅரசியின் பிரதம ஆசிரியரின் சார்பில் ஆசிரிய பீட ஆலோசகரான கலாபூஷணம் திருமதி நூருல்அயின் நஜ்முல் ஹுசைன் இந்த நினைவுச்சின்னத்தை கல்லூரி அதிபர் திருமதி நஸீரா ஹசனாரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியம்

# தங்கமான செம்பருத்தி



கடுமையான முடி உதிர்வு, தலையில் சொட்டை, பொடுகுத்தொல்லை இது போன்ற பிரச்சினைகளுக்கு, செம்பருத்தி எண்ணெய் சிறந்த தீர்வு தருகிறது.

தேவையானவை: செம்பருத்தி பூ - 5 இதழ்கள், செம்பருத்தி இலை - 5, தேங்காய் எண்ணெய் - 100 மி.லி.

செய்முறை: தேங்காய் எண்ணெய்யை எடுத்துக் கொள்ளுங்கள். செம்பருத்தி இதழ்களையும் இலைகளையும் கழுவி, ஈரமில்லாமல் அரைத்துக் கொள்ளுங்கள். நீர் விடக்கூடாது. நன்றாக மைய அரைத்துக் கொள்ளவும். எண்ணெயை அடுப்பில் சூடுபடுத்தி அதில், செம்பருத்தி பேஸ்ட்டைப் போடவும். ஒரு சிறிய கரண்டிவெந்தயப் பொடியை சேர்க்கவும். நுரை அடங்கியதும் இறக்கி ஆற விடுங்கள். பின்னர் வடிகட்டி, இந்த எண்ணெயை போத்தலில் சேகரித்து வைத்துப் பயன்படுத்தலாம். இதனை தினமும் உபயோக்கிக்கலாம். முடியின் வேர்கால்களைத் தூண்டும்படி தேய்த்து வாருங்கள். முடியின் வேர்ப்பகுதியில் மட்டும் தடவுவதால் பிசுபிசுப்பு இருக்காது.

இவ்வாறு செய்து வந்தால், வேர்கால்கள் வலுப்பெற்று, மிருதுவான, மின்னும் கூந்தல் கிடைக்கும். கூந்தல் உதிர்வது நின்றுவிடும். பொடுகையும் விரட்டலாம்.

## 21 ⟶ வண்ணத்துப்பூச்சியின் இறகுகள்

நஸீர் காலை தொட்டு பூங்காவிலேயே இருக்கிறான். அங்குள்ள மரங்களில் பூத்துக் குலுங்கி நிற்கின்ற மலர்களைக் கண்வெட்டது பார்த்துக் கொண்டிருக்கிறான். காலை வசந்த காலத்தை வரவேற்பதில் மனமகிழ்ந்து கிடப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. அங்குள்ள மரங்களிலே வாழுகின்ற சின்னஞ்சிறிய ஜீவராசிகள் எல்லாம் இந்த மலர்களின் வாசனைகளில் தம்மை மறந்து போகின்றன. இத்தகைய ஜீவராசிகளுள் வண்ணத்துப்பூச்சியும் ஒன்று. இந்த வண்ணத்துப்பூச்சியின் இறகுகள் எல்லாம் அங்குள்ள மலர்களை போன்று அழகாக வர்ணங்களில் அழகாகக் காட்சி தருகின்றன.

நஸீர் எப்பொழுதும் அந்த பூக்களின் அழகினாலும் நறுமணத்தினாலும் ஈர்க்கப்பட்டிருக்கிறான். அவன் அங்கு நிறைந்திருக்கின்ற அமைதியானலும், அன்பாலும், நல் எழுச்சியினாலும் எப்போதும் ஈர்க்கப்பட்டவனாக இருக்கிறான்.



இருந்தும் அவனை மிகவும் கவர்ந்தவையாக அங்கு நிறைந்திருக்கின்ற வண்ணத்துப்பூச்சிகள் காணப்படுகின்றன. அவ்வப்போது அவன் அந்த வண்ணத்துப்பூச்சிகளை பிடித்து கையில் வைத்துபார்க்க விரும்புகிறான். ஆனால் ஒவ்வொரு தடவையும் அவன் எடுக்கின்ற முயற்சியில் தோற்றுப்போகிறான்.

ஏனெனில் வண்ணத்துப்பூச்சிகள் அவனை விட வேகமானவையாகவும் சுறுசுறுப்புள்ளவையாகவும் இருப்பதே காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்பவையும் தொலைப்பவையும்.

**சொத்துக்கள் தொலைந்துவிடும் என்று கதவடைப்புச் செய்து எமது சுகத்தை தொலைத்து...**



தமிழ் எங்கள் மூச்சு என்று பேசிக் கொண்டிருக்கின்றோம். இதிலிருந்து மூச்சு எவ்வளவு முக்கியமான தென்பது எமக்கு தெரிந்திருக்கிறது. சுவாசம் எமது சுகத்துடன் பின்னிப்பிணைந்தது. சுவாசம்சுத்தமானதாக இருக்க வேண்டும். அப்போதுதான் நாம் சுகத் துடன் வாழமுடியும்.

வீடுகள், கட்டடங்கள் கட்டப்படும் பொழுது எவ்வளவு பெரிய ஜன்னல்கள்கதவுகள்இருக்க வேண்டும் என சட்ட விதிகள் இருக்கின்றன. இவை வீடுகளில் போதுமானளவு காற் றோட்டத்தை பேணி மக்களைச் சுகத்துடன் பாதுகாக்கும் நோக்கத்திற்காகவே ஏற்படுத்தப் பட்டவையாகும்.

இவ்வாறு அமைக்கப்பட்ட ஜன்னல்களை யும் கதவுகளையும் திருடர்களிற்கும் நுளம்பு களிற்கும் பயந்து மூடி வைத்துவிட்டு அத னுள்ளே ஒளிந்து வாழ்ந்து வருகின்றோம். இதனால் நோய் வாய்ப்படுகின்றோம். சுத்த மான காற்றில் 20 வீதம் ஒட்சிசன் இருக் கின்றது. இது மனிதனின் சுக வாழ்விற்கு முக் கியமானது. மனிதன் சுவாசிக்கும்பொழுது இந்த ஒட்சிசன் உள்ளெடுக்கப்பட்டு காபனீ ரொக்சைட்டு என்ற வாயு வெளிப்படுகின்றது. எனவே பூட்டிய அறையினுள் நாம் உறங்கும் பொழுது காற்றில் ஒட்சிசன் அளவு குறை வடைந்து காபனீரொக்சைட்டின் அளவு அதிகரிக்கின்றது.

இவ்வாறு அசுத்தமடைந்த காற்றை நாம் மீண்டும் மீண்டும் சுவாசிப்பது ஆபத்தான தாகும். இந்த அசுத்தக் காற்றை மின் விசிறி போட்டு சுற்ற வைப்பதில் எந்தப் பயனும் இல்லை. இதனுள் நுளம்புச் சுருளும் கொளுத்திவைக்கப்படின் நிலைமை இன்னும் மோசமானதாக இருக்கும்.

இவ்வாறாக அடைக்கப்பட்ட வீட்டி னுள் நாம் அடைந்திருக்கும் பொழுது எமக்கு பல்வேறுபட்ட நோய்கள் ஏற் படும் ஆபத்து இருக்கிறது. தலையிடி முட்டு, நித்திரைக்குறைவு இலகுவில் கோபம் அடைதல் கல்வி கற்றலில் கஷ் டம் வாழ்க்கையில் பிரச்சினைகள் வேறுபட்ட நுரையீரல் சம்பந்தமான நோய்கள் கிருமி தொற்றுகை போன்றவை யாகும்.

எமது சொத்துக்கள் தொலைந்து விடும் என்று கதவடைப்புச் செய்து எமது சுகத்தை தொலைத்து விடுகின்றோம். சொத்தை பாது காக்க எமது சுகத்தை தியாகம் செய்ய துணிந்து நிற்கின்றோம்.

திருடர்கள் எமது உடைமைகளை திருடு கிறார்களோ இல்லையோ எமது உடற்சுகத்தை திருடிக்கொள்கிறாள்கள்.பூட்டிய வீட்டினுள் நுளம்பு சுருள்கள் நுளம்புகள் இரத்தத்தைக் குடிப்பதைக் குறைக்கின்றனவோ இல் லையோ மனிதனின் வாழ் நாளைக் குடித்து விடுகின்றது.

நாம் ஏன் இந்தகதவடைப்புபோரை கைவி டக்கூடாது. ஜன்னல்களில் மாட்டக்கூடிய நுளம்பு வலைகளை தயார் செய்து அவற்றை யன்னலில் மாட்டி யன்னல் கதவுகளைத் திறந்து வைப்போம். வீடும் அறைகளும் காற் றோட்டம் உள்ளதாக இருப்பதை உறுதி செய்து கொள்வோம்.

வீட்டின் உட்புறத்தை தூசிகள் படியா தவாறு சுத்தமாக வைத்திருப்போம். நோய்கள் வரும் வரை காத்திருக்காது நோய் வரும் முன் எம்மை காத்துக்கொள்வோம்.

Dr.எஸ்.சிவன்சுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருமுன் காப்போம்





இன்றைய நவீன கால விஞ்ஞான வளர்ச்சி, சிந்தனைத்திறன் வளர்ச்சி, நவநாகரிக வளர்ச்சி
பாலியல் ரீதியான துன்புறுத்தல் என்பதும் நவீனத்துவ வடிவங்களை நோக்கி நகர்வது
வேண்டிய கட்டாய நிலை சமுதாயத்தில் ஏற்பட்டுள்ளதை மறுப்பதற்கில்லை.
ஓடும் புகையிரத்தில் , பேருந்தில், நடைபாதைகளில், அலுவலகங்களில் , பாடசாலைகளில் என
செல்ல பெண்களுக்கு தற்காப்புக் கலை அத்தியாவசியமானது. பாலியல் தொந்தரவை மேற்
தெரிவதெல்லாம் பெண் அங்கங்களும் அவற்றை நுகரும் அலாதி வேட்கையுமே. இவ்வாறான
வயது வேறுபாடின்றி தற்காப்புக் கலையைக் கற்றுக்கொள்வது அவசியமானதே.
பெண்கள் மென்மையானவர்கள், பதுமைகள், பாவைகள் என்றெல்லாம் வர்ணிக்கும் காலத்தை
வழிகாட்டிகள் திறனான பாதையை வரைந்து தந்துள்ளார்கள். அதை இலாவகமாக்கிப் பறக்க
தடையாக ஆண்களின் கண்களை பெண்களின் உடலங்கங்கள் தான் உறுத்துமாக இருந்தால்
தற்காப்புக் கலை மிகவும் அத்தியாவசியமானது.இந்தவகையில் கடந்த மே மாதம் பன்னிர
என்ற பயிற்சி வட்டுக்கோட்டை உதயவாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் இணைப்ப
நெறிப்படுத்தலில் வழங்கப்பட்டது.
வலி.மேற்குபிரதேசசபையின்கேட்போர்கூடத்தில்நடைபெற்றஇந்நிகழ்விற்குசரவணபவன்அறக்க
பிரதம அதிதியாக கௌரவ பராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்கள் கலந்து சிற
பிரதேசசபை தவிசாளர் திரு.த. நடனேந்திரன், மகளிர் அபிவிருத்தி அலுவலர் திருமதி துளசி
ஆகியோருடன் வசந்தம் அறக்கட்டளை வளவாளர்களும் பங்கு பற்றியிருந்தனர். நூற்றுக்கு
பெண்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தற்காப்புக் கலை முழுமையான வடி
குதலை வழங்கி தப்பிச் செல்ல தற்காப்புக் கலை அவசியமானது. இதைவிட பெண்களின் பற்
தில் கொள்ளவேண்டும். எப்படியான தருணத்தில் எப்படியான உத்திகளைக் கையான்
இப்பயிற்சி நெறி அமைந்திருந்தது. இந்தக் கூட்டு முயற்சியும் வழிகாட்டலும் ஆரோக்
இந்தப் பணி பல்வேறிடங்களுக்கும் பரவிப் பலன் கொடுக்க வேண்டும் என்பதே ஆவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய ரீதியான திருத்தல் சேவையுடன் தரம் -05 மாணவர்களின் (2018) பரீட்சைப் பெறுபேற்று அடைவை அறிந்துகொள்வதற்கு ஒளிஅரசி நடத்தும் தனித்துவப் பரீட்சை

# சிங்கள மொழிபெயர்ப்பு வினாத்தாள் - 2018

கொழும்பிலிருந்து வெளிவரும் பிரபல சிங்கள பத்திரிகையில் வெளிவந்த வினாத்தாள் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு எமது ஆசிரியர் குழுவால் மேற்பார்வை செய்யப்பட்டு இங்கு வெளியிடப்படுகின்றது.

இவ்வினாத்தாளை நேரம் கணித்து சுயமாக எழுதச்செய்து இல 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி என்ற முகவரிக்கு அனுப்பினால் எமது பரீட்சைக் குழுவினரால் அவ்வினாத் தாள் திருத்தப்பட்டு புள்ளியிடப்பட்டு மீண்டும் உங்கள் முகவரிக்கு 10 நாட்களுக்குள் தபாலிடப்படும். (முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட மேலதிக கடித உறை ஒன்றையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

## ஒளிஅரசி பரீட்சைத் தொடர் - 08(மே)

**தரம் 5**

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2018

## தபால் மூல பரீட்சை செயற்றிட்டம்

முழுப்பெயர்: - ..........................................................................................

பாடசாலை: - ..........................................................................................

வீட்டின் சரியான தபால் முகவரி - ..........................................................................................

..........................................................................................

தொ.பே. இல. .......................................... பிறந்த திகதி. ..........................................

வினாத்தாள் -I
புள்ளிப் பதிவு

வினாத்தாள் -II
புள்ளிப் பதிவு

மொத்தப்புள்ளிகள்

### முக்கிய குறிப்பு

கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் புள்ளி விபரமும், விடைகளும் அடுத்த ஒளி அரசியில் வெளிவரும்.

பிரதம ஆசிரியர்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 சிங்கள மொழி பெயர்ப்பு வினாத்தாள்

வினாத்தாள் I **2018** நேரம் : 45 நிமிடங்கள்

★ **மிக நெருங்கிய சம்பந்தமுள்ள உருவச் சோடியுள்ள பெட்டியைத் தெரிவு செய்க.**

**01)** 01.  02.  03. 

**02)** 01.  02.  03. 

**03)** 1டசின் பொம்மைகளின் விலை ரூ. 300.00 எனின் 3 பொம்மைகளின் விலை யாது?
1. ரூபா 75.00 2. ரூபா 60.00 3. ரூபா 65.00

**04)** செழித்துவளர்ந்தநெற்பயிர்கள்.....................விரித்ததுபோலகாணப்பட்டது?
1. பச்சைக்கம்பளம் 2. செங்கம்பளம் 3. வெண்மை

**05)** பசுவின் கழுத்திலிருந்த சலங்கை ஒலி ......................... என ஒலித்தது?
1. மடமட 2. சல் சல் 3. பட பட

**06)** ஒரு பெட்டியில் 6 கறுப்புநிற மாபிள்களும் 4 நீலநிற மாபிள்களும் உள்ளன எனின்பெட்டியைப்பார்க்காதுநீலநிறமாபிள் ஒன்றுகிடைக்கவேண்டுமெனின் எடுக்கவேண்டிய மாபிள்கள் எத்தனை?
1. 5 2. 6 3. 7

**07)** ஒரு கிணற்றை 7பேர் 6 நாட்களில் வெட்டிமுடித்தனர் எனின் 3 பேர் எத்தனை நாட்களில் வெட்டிமுடிப்பர்?
1. 12 2. 14 3. 15

**08)** கனிகா இப்படி கூறினாள், எனது அண்ணனின் திருமணம் நடந்து இன்றோடு 8 நாட்கள் ஆயிற்று. இன்று 22ம் திகதி எனின் திருமணம் நடந்த திகதி யாது?
1. 14 2. 15 3. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09) தர்மிகா 2 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை 5 மி.லீ மருந்து எடுக்கின்றாள் எனின் நாளொன்றில் அவள் உள்ளெடுக்கும் மருந்தின்அளவு யாது?
1. 60 மி.லீ 2. 65 மி.லீ 3. 70 மி.லீ

10) 2016ஆம் ஆண்டு தைமாதம் 1ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். அதன்படி 2016 முடிவடையும் தினமும் 2017 தைமாதம் ஆரம்பிக்கும் தினமும் என்ன கிழமைகளாகும்?
1. வியாழன் - வெள்ளி 2. வெள்ளி - சனி 3. புதன் - வியாழன்

11) இரண்டு கடிகாரங்கள் மணியொலிப்பது முறையே 30 நிமிடங்களுக்கு மற்றும் 1 மணித்தியாலத்திற்கு ஒரு முறையாகும். இரண்டு கடிகாரங்களும் காலை 6.30க்கு மணியெழுப்பினால் மீண்டும் அவை இரண்டும் ஒரே நேரத்தில் மணியெழுப்பும் நேரம் யாது?
1. 7.30 2. 8.00 3. 8.30

12) மெழுகுதிரி ஒன்று எரிந்து அணைய எடுக்கும்நேரம் 12நிமிடங்கள் எனின் ஒரே நேரத்தில் எரியூட்டப்பட்ட 5 மெழுகுதிரிகளும் எரிந்து அணைய எடுக்கும் நேரம் யாது?
1. 12 நிமிடங்கள் 2. 60 நிமிடங்கள் 3. 30 நிமிடங்கள்

★ **13, 14ஆம் வினாக்களுக்கு வாக்கியத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ள மரபுத் தொடரை விபரிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.**

13) நிஷார் இக்கட்டான வேளையில் நண்பனுக்கு தோள் கொடுத்தான். தோள் கொடுத்தல் என்பது?
1. உதவிசெய்தல் 2. கைகொடுத்தல் 3. வெட்டி விடுதல்

14) தாயின் தாலாட்டில் குழந்தை கண் வளர்ந்தது, கண்வளர்தல் என்பது,
1. நித்திரை செய்தல் 2. அலங்காரம் செய்பவன் 3. சோம்பாலனவன்

15) சர்மினி வடக்கு நோக்கி 20m முன்னால் சென்று தனது வலது பக்கமாக திரும்பி 20m சென்று மீண்டும் வலது பக்கம் திரும்பி 40m சென்று நின்றாள். எனின், தற்போது அவள் நிற்கும் இடம் அவளது ஆரம்ப இடத்திலிருந்து எத்திசையாகும்?
1. வடக்கு 2. வடமேற்கு 3. தென்கிழக்கு

16) சிபானி 200m தூரம் ஓட எடுக்கும் நேரத்தில் சவானி 100m தூரம் ஓடுவாள். சிபானி 100m தூரம் ஓடும் நேரத்தில் கரிணி 50m தூரம் ஓடுவாள். எனின் 400m தூரம் ஓடுவதற்கு ஆகக்கூடிய நேரம் எடுப்பவர் யார்?
1. சிபானி 2. சவானி 3. கரிணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) பின்வரும் வசனங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக?

a. காட்டு யானைகள் ஊருக்குள் படையெடுத்தன.

b. அந்தக் கிராமம் வனக்கரையோரம் உள்ளது.

c. காட்டு யானைகள் தொல்லை அதிகரித்தது.

d. பாதுகாப்பிற்காக கிராமத்தினைச்சுற்றி மின்கம்பி வேலி அமைக்கப்பட்டது.

1.b, c, a, d  2.c, b, a, d  3.a, c, b, d

★ **இடைவெளிகளில் வரவேண்டிய இலக்கத்தை தெரிவு செய்க.**

18)

| | | | | |
|---|---|---|---|---|
| 42 | 54 | 76 | 108 | ..... |

1. 150  2. 160  3. 165

19)

| | | | | |
|---|---|---|---|---|
| 99 | 77 | 55 | 33 | ..... |

1. 11  2. 22  3. 33


20) சுரேன் வெளியே புறப்பட்டுச் செல்கையில் அவனுடைய நிழல் ''அவனுக்கு வலது பக்கமாக விழுந்தது'' அவன் புறப்பட்டுச் சென்றதிசை யாது?

1. வடக்கு திசை  2. தெற்குதிசை  3. மேற்குதிசை

21) சதுரக்காணி ஒன்றின் ஒரு பக்க நீளம் 30m ஆகும். அக் காணியைச் சுற்றி 3m இடைவெளியில் கம்பம் நடுவதற்கு தேவையான கம்பங்கள் எத்தனை?

1. 36  2. 40  3. 44

22)




எனின்,  இன் நிறை யாது?

1.110g  2. 130g  3. 150g

23) 800 இன் அரைவாசியின் 1/5 பங்குடன் 12ஐ கூட்டினால் என்ன பெறுமானம் கிடைக்கும்?

1. 92  2. 96  3. 98

24) கூட்டில் உள்ள மைனாக்கள் 6 இனதும், பூனைக்குட்டிகள் சிலவற்றினதும் கால்களின் எண்ணிக்கை 40 ஆகும் எனின், அங்கு உள்ள பூனைக் குட்டிகளின் எண்ணிக்கை யாது?

1. 5  2.6  3. 7

25) இலங்கை நேரம் இங்கிலாந்து நேரத்திலும் விட 5மணி 30 நிமிடங்கள் கூடுதலானதாகும். எனின், இங்கிலாந்தில் இரவு 11.00 மணி எனின், இலங்கை நேரம் யாது?

1. மறுநாள் மு.ப 4.30  2. மறுநாள் பி.ப 2.30

3. மறுநாள் பி.ப 1.30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26)** ஒரே வேகத்தில் பயணம் செய்யும் 4பேர், 64km தூரம் பயணம் செய்ய எடுக்கும் நேரம் 8 மணித்தியாலங்களாகும். அதன்படி ஒரு மனிதன் 30 நிமிடங்கள் பயணம் செய்த தூரம்,

1. 2km 2. 4km 3. 6km

★ **பின்வரும் தரவுகளின் அடிப்படையில் 27, 28ஆம் வினாக்களுக்கான விடையைத் தெரிவு செய்க.**

| கிழங்கு 1kg + வெங்காயம் 2kg | பருப்பு 3kg + அரிசி 2kg |
|---|---|
| ரூபா 156.00 | ரூபா 540.00 |

**27)** மேற்குறிப்பிட்டதன்படி பருப்பு 1kg 500g மற்றும் அரிசி 1kg இன் விலை யாது?

1. ரூபா. 270.00 2. ரூபா. 330.00 3. ரூபா. 470.00

**28)** கிழங்கு 500g மற்றும் வெங்காயம் 1kg இன் விலை யாது?

1. ரூபா. 62.00 2. ரூபா. 78.00 3. ரூபா. 92.00

★ **கீழ்உள்ள பந்தியில் உள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

மழை பெய்ததால் மண் **(29)** ................... (குளிர்ந்தது/ வெளுத்தது) புயற் காற்று வீசியதால் மரங்கள் **(30)** ................... (முறிந்தன / அசைந்தன )

**31)** புராதன பொருட்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள இடம்,

1. நூல்நிலையம் 2. அருங்காட்சியகம் 3. காட்சிமண்டபம்

**32)** தோட்டத்தில் விவசாயி 2/5 பகுதியளவில் தேயிலை பயிரிட்டார். அவர் அவ்வாறு தேயிலை பயிரிட்ட அளவு 32 ஏக்கர் எனின், பயிரிடப் படாத தோட்டத்தின் அளவு ஏக்கரில் யாது?

1. 16 2. 32 3. 48

**33)** தேசினி ஒரு புகைப்படத்தைப் பார்த்து இவ்வாறு கூறினாள். இங்கு இருக்கும் பெண்ணின் தாயார், எனது அன்னையின் தாயாராவார். எனின், புகைப்படத்தலிருக்கும் பெண் தேசினிக்கு என்ன முறை?

1. அத்தை 2. சித்தி 3. பாட்டி

**34)** சரியான வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1. இலங்கை ஐரோப்பா கண்டத்தில் அமைந்துள்ளது.
2. இலங்கை இந்துசமுத்திரத்தின் முத்து.
3. இலங்கை ஒரு தீபகற்பமாகும்.

PERIODICAL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35) புதுவருடத்தினை முன்னிட்டு 9 நண்பர்கள் தமக்கிடையே வாழ்த்து அட்டைகளைப் பரிமாறிக்கொண்டனர். அவர்கள் பரிமாறிய வாழ்த்துஅட்டைகளின் எண்ணிக்கை யாது?

1. 72 2. 81 3. 63


36) அவதாரம் என்னும் சொல்லின் பொருள் யாது?

1. மறைதல் 2. தோன்றுதல் 3. எடுத்தல்

37) நீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை என சமஎண்ணிக்கை நிறப் பேனாக்கள் 12 பெட்டியில் போடப்பட்டுள்ளது. எழுமாற்றாக நீல நிறப்பேனையை எடுக்க வேண்டுமாயின், தவைப்படும் தடவைகள் எத்தனை?

1. 8 2. 9 3. 10

★ **கீழே காட்டப்பட்டுள்ள படத்தை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவு செய்க.**




38) தமிழை மட்டும் விரும்புபவர் யார்?

1. மதி 2. கவின் 3. அபி

39) எல்லாப் பாடங்களிலும் விருப்பமுடையவர் யார்?

1. கேம் 2. அபி 3. கவின்

40) சுற்றாடல் மற்றும் கணிதத்தை மட்டும் விரும்புபவர் யார்?

1. மதி 2. அமாகி 3. கவின்

**விடா முயற்சி விஸ்வரூப வெற்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 சிங்கள மொழி பெயர்ப்பு வினாத்தாள் 2018

நேரம் : 1 மணி 15 நிமிடங்கள்

**01) பின்வரும் பந்தியை வாசித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

வாசீசன், அருண், குருபரன் மூவரும் கல்லாறு அன்னை குடியிருப்பில் வசிக்கின்றனர். அருணும், குருபரனும் இரண்டாம் தளத்திலும், வாகீசன் அடித்தளத்திலும் வசிக்கின்றனர். வாகீசனின் சகோதரி வாமினி நான்காம் தரத்தில் படிக்கின்றார்.

1. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்பால் ஒருமைப் பெயர்கள் இரண்டு எழுதுக.

   ............................................. .............................................

2. இடப்பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

   .............................................

3. பெண்பால் ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.

   .............................................

4. நிகழ்காலம் ஒருமை வினைச்சொல் ஒன்று எழுதுக.

   .............................................

5. அடுக்கு மாடிக்குடியிருப்பின் பெயர் என்ன?

   .............................................

**02) ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுக.**

1. அன்பு : .................................. 2. அடைக்கலம் : ..........................

3. கீர்த்தி : .................................. 4. தயவு : ..................................

**03) எதிர்கருத்துள்ள சொற்களை எழுதுக.**

1. அழகு : ......................... 2. அமைதி : ..........................

3. விரோதி : ......................... 4. வள்ளல் : ..........................

**04) கீழ்வரும் வாக்கியங்களிற்குப் பொருத்தமான தனி சொல்லினை எழுதுக.**

1. தன்னைப்பற்றி மட்டும் சிந்தித்து செயல் புரிபவர் : ..........................
2. பழைய பொருட்களைச் சேகரித்து பாதுகாக்குமிடம் : ..........................
3. மனைவியை இழந்த ஆண் : ..........................
4. தாய் நாட்டினை நேசிப்பவன் : ..........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**05) அடைப்புக்குள் இருந்து சரியான சொல்லைத் தெரிந்து எழுதுக.**

1. அள்ளஅள்ளக் குறையாதது ..........................
(அமுதசுரபி / அமுதசுறவி)

2. நேற்று மாணவர்கள் விளையாட்டுத் திடலில் ..........................
(ஒன்றுகூடினார் / ஒன்றுகூடிவர்)

3. வாசிப்பை நேசித்தால் வாழ்வு வளம்...................... (பெறும் / பெற்றது)

4. ஓட்டப்பந்தயத்தில் வீரர்கள் ........................ (ஒடினார்கள் / ஓட்டினான்)

**06) பின்வருவனவற்றின் விரிவாக்கத்தை எழுதுக.**

1. சி.க.கூ.ச: ..........................................................................

2. க.பொ.த.சா.த : ....................................................................

**07) பின்வரும் வாக்கியங்களை எழுத்து பிழையின்றி எழுதுக.**

1. நாங்கள் பட்டம் பறக்க விட்டம்.
..........................................................................

2. மாடு குடியிருப்பு மேல மேல போனது.
..........................................................................

3. நான் காசு சேர்த்து வைச்சுருக்கிறன்.
..........................................................................

4. நான் பள்ளிக்குடம் போக மட்டன்.
..........................................................................


5. நான் கடவுளுக்குப் பூசை செய்கிறன்.
..........................................................................


**08) கீழ்வரும் ஆங்கிலச் சொற்களின் பொருளை தமிழில் எழுதுக.**


1. Please be quiet ..........................................................


2. See the book ..........................................................

**09) படங்களுக்குப் பொருத்தமான சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. 

2. 

3. 


4. 

................ ................ ................ ................




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10) இவற்றின் பொருளை சிங்களத்தில் எழுதுக.**

1. தேநீர் குடியுங்கள் : ..................................................................

2. கடைக்குப் போகிறேன் : ..................................................................

**கொலன்னாவ ஆரம்ப பாடசாலை 5ஆம் தர வகுப்பு மாணவர்கள் உணவு உண்டமை தொடர்பான ஒரு வாரத்திற்கான வரைபு கீழ் வருமாறு.**




**11)** செவ்வாய் புதன்கிழமைகளில் சாப்பிட்ட மாணவர்களின் தொகை யாது?

..................................................

**12)** வகுப்பில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 50 ஆகும். வெள்ளிக்கிழமை 15 மாணவர்கள் சாப்பிடவில்லை எனின், அன்று சாப்பிட்ட மாணவர்களின் தொகையினை வரைபடத்தில் வரைந்து காட்டுக.

**13)** செவ்வாய்க்கிழமை வந்த மாணவர்களிற்கு ஒருவரிற்கு 5 வீதம் சொக்லேட் வழங்கப்பட்டால் எத்தனை சொக்லேட்டுக்கள் தேவைப்பட்டது?

..................................................


**14)** தர்வினிடம் 10 ரூபா நாணயங்கள் 20ம், 5 ரூபா நாணயங்கள் 92ம், 2 ரூபா நாணயங்கள் 56ம் காணப்பட்டால் நாணயங்களின் பெறுமதி யாது?

..................................................

**15)** 15kg தேயிலையில் 125g பக்கற்றுகள் வீதம் எத்தனை பக்கற்றுகள் தயாரிக்க முடியும்?

..................................................

**16)** தரப்பட்டுள்ள உருவிலுள்ள சிறிய பெட்டிகளின் நீளம் மற்றும் அகலம் 4cm எனின், நிறந்தீட்டப்பட்ட பகுதியின் சுற்றளவைக்காண்க. ..................................



**17)** ரூபா 492.00 பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்துவிட்டு ரூபா 1000.00ஐக் கொடுத்தால், கிடைக்கும் மிகுதிப்பணம் எவ்வளவு?

..................................................

**18)** சதுரத்தில் அடங்கும் செங்கோணங்கள் எத்தனை?

..................................................

**19)** வியாபார வெற்றி ஒன்றினைக் கொண்டாடிய 15 நண்பர்கள் தமக்கிடையே ஒருவருக்கொருவர் கைலாகு கொடுத்துக்கொண்டனர். அவர்களிடையே பரிமாறப்பட்ட கைலாகின் எண்ணிக்கை யாது?

..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20)** 1500 மிலீ தொட்டி ஒன்றினை 250 மி லீ வாளியினால் நிரப்புவதற்கு 30 நிமிடங்கள் எடுக்கும் எனின் 2500 மி லீ தொட்டியினை அதே வாளியினால் நிரப்ப எடுக்கும் நேரம் யாது?

.............................................

**21)** எனது அப்பாவின் வயது எனது வயதின் நான்கு மடங்கிலும் நான்கு கூடுதலாகும். எனது அண்ணாவின் வயது அப்பாவின் வயதின் அரைவாசி யாகும். அண்ணாவின் வயது 26 எனின் எனது வயது யாது?

.............................................

**22)** சேகரும் நாதனும் ஒரு தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து சேகர் 2/5பங்கையும் நாதன் 1/5 பங்கையும் செய்கை பண்ணத்தொடங்கினர். மீதியாக இருந்த காணியின் பரப்பளவு 12 ஏக்கர் எனின் மொத்த காணியின் அளவுயாது?

.............................................

**23)** பெரிய கூடையில் 45பூக்களும், சிறிய கூடையில் 55 பூக்களும் உள்ளன. இரண்டு கூடைகளிலுமுள்ள பூக்களை சம அளவு ஆக்கவேண்டுமாயின், பெரிய கூடையிலிருந்து எடுத்து சிறிய கூடைக்குள் போடவேண்டிய பூக்களின் எண்ணிக்கை யாது?

.............................................

**24)** **கீழ்வரும் விலைப்பட்டியலை அவானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| சீனி | 1kg | 50. 00 |
| தேயிலை | 100g | 40. 00 |
| பருப்பு | 1kg | 80. 00 |
| கிழங்கு | 500kg | 60. 00 |
| தேங்காய் எண்ணெய் | 1l | 160. 00 |

1. 250g சீனியின் விலை யாது?

.............................................

2. தானத்துக்காக 4kg பருப்பு வாங் கினால் ஏற்படும் செலவு எவ்வளவு?

.............................................

3. 1kg கிழங்கும் 4l தேங்காய் எண்ணையும் வாங்கினால், மொத்த செலவு யாது?

.............................................

**25)** இரண்டு ரயில்கள் ஒரே இடத்திலிருந்து புறப்பட்டு எதிர்த்திசைகளில் பயணம் செய்தன. ஒரே நேரத்தில் புறப்பட்ட இரண்டு ரயில்களும் மணிக்கு 50km வேகத்தில் பயணம் செய்தன. இரண்டு மணித்தியாலங்களின் பின் இரண்டு ரயில்களும் தரித்து நின்றன. தற்போது இரண்டு ரயில்களிற்குமிடையிலான தூரம் எவ்வளவு?

.............................................

**26)** மணிக்கு 60km வேகத்தில் செல்லும் மோட்டார் வாகனம் ஒன்று 45 நிமிடங் களில் சென்றடையும் தூரம் எவ்வளவு?

.............................................

**27)** ஒருவனுக்கு ஒரு வேலையைச் செய்ய 3 நாட்கள் தேவைப்பட்டது. அவ் வாறான ஒரு வேலையை 3பேர்கள் செய்ய எத்தனை நாட்கள் தேவை?

**28)** மு.ப 9.45க்கு ஆரம்பமாக வேண்டிய நாடகம் 1மணி 40 நிமிடங்கள் தாமதமாக ஆரம்பமானது ஆயின் அது ஆரம்பமான நேரம் யாது?

.............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

**29)** பொது வாகனம் அல்லாதது,

1. பஸ் 2. படகு 3. விமானம் 4. மோட்டார் சைக்கிள்

**30)** விவசாயியின் நண்பன் எனக் கூறக்கூடியது,

1. மண்புழு 2. நத்தை 3. மயிர்கொட்டி 4. முயல்

**31)** நுளம்பு கடிப்பதைத் தவிர்த்துக்கொள்வதற்காகப் பூசப்படும் எண்ணெய்,

1. தேங்காய்எண்ணெய் 2. நல்லெண்ணெய்

3. சித்திரநெல்லா எண்ணெய் 4. மண்ணெண்ணெய்

**32)** பூக்களில் மகரந்தச் சேர்க்கையை ஏற்படுத்த ஏதுவான உயிரினம்,

1. குழவி 2. இலையான் 3. கரப்பொத்தான் 4. வண்ணத்துப்பூச்சி

**33)** மரப்பலகை மற்றும் சருகுகள் என்பன உக்குவதற்குக் காரணமான உயிரினம் பின்வருவனவற்றுள் எது?

1. முதலை 2. அரணை 3. கறையான் 4. மண்புழு

**34)** எருதுகளின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய மிக முக்கியமான பயன் எது?

1. சவாரி செய்தல் 2. சூடு மிதித்தல்

3. ஏர் உழுதல் 4. பால் கறத்தல்

**35)** வயல்களில் சேதத்தை ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கும் உயிரினம்,

1. நீர்க்காகம் 2. பன்றி 3. கானான்கோழி 4. ஆந்தை

**36)** மண் செழிப்பாவதற்கு உதவும் உயிரினம் எது?

1. உடும்பு 2. முதலை 3. மண்புழு 4. ஓணான்

**37)** இலங்கைக்கு வடக்கே அமைந்திருப்பது,

1. தாய்லாந்து 2. ஆபிரிக்கநாடுகள் 3. இந்தியா 4. மலேசியா

**38)** இலங்கை அமைந்துள்ள கண்டமாவது,

1. ஆபிரிக்கா 2. ஐரோப்பா 3. ஆசியா 4. அவுஸ்ரேலியா

**39)** இலங்கைக்கு அண்மையில் அமைந்துள்ள நாடு,

1. நேபாளம் 2. பிரித்தானியா 3. இந்தியா 4. பாகிஸ்தான்

**41)** பூச்செடிகளின் அடிப்பாத்திரத்திற்கு போடுவதற்கு உகந்தது,

1. மணல் 2. சிறுகற்கள் 3. செங்கல்துண்கள் 4. களிமண்

**42)** தாவரத்தண்டு இல்லாத கொடிவகை யாது?

1. கொடித்தோடை 2. பாகல் 3. பாக்கு 4. குறிஞ்சா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**43)** சத்துணவினைக் குறிக்கும் குறியீடு யாது?


   

**44)** 

படத்தில் இருப்பது பயிர்களிற்கு ஊறு விளைவிக்கும் உயிரினம் ஆகும். அந்த உயிரினமாவது?

1. நத்தை   2. பூச்சி   3. கூட்டுப்புழு   4. பழப்புழு

**45)** படத்தில் குறிப்பிட்டுள்ள அடிப்படை தையல் முறை ஆனது,



1. சங்கிலித்தையல்   2. விஸ்பம் தையல்
3. விளிம்புத்தையல்   4. ஊசித் தையல்

**46)** கீழே உள்ளவற்றில் கழுகின் தலை எது?

1.    2.    3. 

**47)** பலவகையில் துளையிடப் பயன்படும் உபகரணம் எது?

1. உளி   2. துறப்பணம்   3. நீர்மட்டம்   4. வாச்சி

**48)** ஆடையில் பட்ட மைக்கறையை அகற்ற பயன்படுத்துவது.

1. மண்ணெண்ணெய்   2. அசற்றோன்   3. சலவைத்தூள்   4. தண்ணீர்

**49)** ''சூரிய உதயத்தின் அழகு'' என்னும் தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலை தொடர்பு இருப்பதோடு ஐந்து சொற்களுக்கு குறையாமல் அமைய வேண்டும்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ன் சமூக மறுமலர்ச்சியும் முன்னோக்கி நகரும் இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கான
ரு ஆரோக்கியமான விடயமல்ல. இந்த நிலையிலிருந்து பெண் தன்னைக் காத்துக்கொள்ள

பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி வருகிறார்கள். எனவே இந்த நிலையைக் கடந்து
ள்வோருக்கு சிறுமி, யுவதி, வயோதிபம் என்ற பாகுபாடிருப்பதில்லை. அவர்கள் கண்ணுக்குத்
கொடுங்கோல் மனதுடையோரை உடைக்க வேண்டாமா? அவ்வாறானால் நிச்சயமாக பெண்கள்

தோற்கடித்து ஆண்களுக்கு நிகரான ஆற்றல் மிகு காலத்தை நோக்கி நகர எமது முன்னைய பெண்
ண்டிய தேவை பெண்களாகிய எம் ஒவ்வொருவரது கடமையும் உரிமையுமாகும். பறப்பதற்கு
அதை பிடுங்கி வெயிலில் காயவிட பாரதியின் அக்கினிக் குஞ்சுகளாக பெண்கள் பறப்பதற்கு
டாம் திகதி(12.05.2018) அன்று ''பெண்களுக்கான வலுவூட்டலும் தற்காப்புப் பயிற்சியும்''
ரும் ஒளியரசி சஞ்சிகையின் துணை ஆசிரியருமான திருமதி சூரியா சிவரூபன் அவர்களின்

ளையும்வசந்தம்அறக்கட்டளையைச்சேர்ந்தோரும்கூட்டுமுயற்சியாககரம்கொடுத்தனர். நிகழ்வின்
த்ததுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார். வலி.மேற்குப்
சரவணபவன் அறக்கட்டளைச் செயலாளர் திரு. பிரதாப் , சுயாதீன ஊடகவியலாளர் S.k. லதா
ட்ட பெண் பிள்ளைகள் இப் பயிற்சி நெறியில் ஆர்வத்தோடு பங்குபற்றிப் பயனடைந்தனர்.
லாக அமைந்துவிடப் போவதில்லை. ஆயினும் தகுந்த தருணத்தில் எதிரிக்கு திகைப்புத் தாக்
ளும் நகங்களும் குரலும் இயற்கைப் படைப்பில் கிடைத்த வரப்பிரசாதம் என்பதையும் ஞாபகத்
தப்பித்து ஓடுவது பற்றி செய்முறைப் பயிற்சியுடன்
மான பெண்சமூகப் பாதுகாப்பிற்கு அத்திவாரமாகும்.

வன்னிமகள் எஸ்.கே. சஞ்சிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மொழிபெயர்ப்பு சிறுகதை

# பேய்க்கிழக்கு

குளிர்கால இரவு. ஒரு வீட்டில்மட்டும் வரவேற்பறை விளக்குகள் எரிந்தன. ஜன்னல்கள் இழுத்துவிடப்பட்டு கணப்பு கனன்று கொண்டிருந்தது. வயதான அப்பா வைட்டும் இளைஞனான மகன் ஹர்பெர்ட்டும் சதுரங்கம் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அருகே வெண்ணிறமான தலைமயிர்கொண்ட அம்மா பின்னல்வேலைசெய்துகொண்டிருந்தாள். அது அவர்கள் மூவர் மட்டும் கொண்ட சிறிய குடும்பம்.

இந்தமாதிரி காற்றும் பனியும் கொட்டுகிறதே அவர் வருவாரா?என்று மகன் சந்தேகப்பட்டான். பார்ப்போம் என்றான். அப்போது வண்டிவந்து நிற்கும் ஒலி கேட்டது. கனத்த காலடி ஓசைகள் கேட்டன. வந்துவிட்டார் என்றார் வைட். அவர் ஆவலாக எழுந்து சென்று வந்தவரை வரவேற்று கொண்டுவந்தார். அவரது மனைவி வந்தவரைக் கவனித்தாள். உயரமான களைத்துப்போன தோற்றம் கொண்ட ஒரு நடுவயதினர்.

சார்ஜண்ட் மேஜர் மோரீஸ் என்று அவர் தன்னை அறிமுகம்செய்துகொண்டார். அவர் அனைவருடனும் கைகுலுக்கிக் கொண்டு கணப்பருகே ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு ஒரு கோப்பை மதுவை ஊற்றிக் கொண்டார். அமைதியாகக் குடித்தார். பேசும் பழக்கம் குறைவு போல பட்டது. ஒருமாதிரி உடைந்துபோன மனிதன்போல இருந்தார்.

மூன்றாவது கோப்பை மது உள்ளே சென்றபோது அவரது கண்களில் ஒளிவந்தது. அவர் மெல்லமெல்ல பேச ஆரம்பித்தார். நிறைய அனுபவங்கள். பேசப்பேச அவரே அதில் ஒழுகிச்செல்ல ஆரம்பித்தார். விசித்திரமான கீழை நிலங்கள், போர்கள், கொள்ளை நோய்கள், அழிவுகள் இருபத்தொரு வருடங்கள் என்றார் வைட். அப்போது சின்னப்பயலாக இருந்திருப்பான். இப்போது எப்படி இருக்கிறான் பார். ஏன் நன்றாகத்தானே இருக்கிறார் என்று கிழவி சும்மா ஆறுதலுக்காகச் சொன்னாள். எனக்கும் இந்தியா செல்ல ஆசை என்றார் கிழவர் சும்மாதான்..ஒரு சுற்று சுற்றிவந்தால் நல்லது என்றுதான் ஆனால் மேஜர் எங்கேயும் போகவேண்டாம் இருந்த இடத்திலேயே இருப்பதுதான் நல்லது என்றார்.

நான் அங்கேபோய் பழைய கோயில்கள் பக்கிரிகள் பிச்சைக்காரர்கள் எல்லாரையும் பார்க்க ஆசைப்படுகிறேன் என்றார். கிழவர் போன தடவை ஏதோ குரங்கின் கை பற்றிச் சொன்னாயே அது என்ன அது? ஒன்றுமில்லை என்றார்சார்ஜண்ட்மேஜர்மோரீஸ் அதெல்லாம் சும்மா. ஒன்றுமில்லை.

கிழவிக்கு ஆர்வம் ஏறியது என்னது குரங்கின்பாதமா? அது ஒரு சின்ன மந்திரசமாச்சாரம் என்றார் சார்ஜண்ட் மேஜர் மோரீஸ். பார்த்தால் அது ஒரு சாதாரண குரங்குப்பாதம் தான். உலரவைத்து மம்மியாக ஆக்கிய துண்டிக்கப்பட்ட பாதம். தன் சடைப்பையிலிருந்து அதை எடுத்து நீட்டினார். கிழவி அருவருப்புடன் பின்னகர்ந்தாள். ஆனால் அவள் மகன் அதை வாங்கி கூர்ந்து பார்த்தான் இதிலே என்ன விசேஷம்?என்றாள் கிழவி.

மோரீஸ் இதிலே ஒரு வயோதிப பக்கிரி தன்னுடைய சாபத்தை பொறித்திருக்கிறான். அவர் ஒரு பெரிய புனிதர். மனிதர்களை விதிதான் ஆட்சிசெய்கிறது என்று காட்டுவதற்காக இதை அவர் செய்திருக்கிறார். விதியை மீற விரும்புகிறவர்கள் பேராசைக்காரர்கள். அவர்களுக்கு துக்கம்தான் வருமாம். இந்த குரங்குப்பாதத்தை கையிலே வைத்துக்கொண்டு ஒருவர் மூன்று முறை தனக்கு வேண்டியதைக் கேட்கலாம். மூன்று ஆசைகளும் நிறைவேறுமாம். என்றார்.

மூவரும் சிரித்துவிட்டார்கள் கிழவர் சரி நீங்கள் ஏன் மூன்று ஆசைகளைக் கேட்கவில்லை?என்றார். நான் கேட்டுவிட்டேனே என்றார் மேஜர் மோரீஸ் அப்படியா மூன்று ஆசைகளையா? ஆமாம் கிழவருக்கு வேடிக்கையாக இருந்தது. வேறு யாராவது அபப்டி ஆசைகளை தெரிவித்திருக்கிறார்களா? மேஜர் மோரீஸ் சொன்னார் ஆமாம். பலர் கேட்டிருக்கிறார்கள்.. ஒருவன் இரண்டு ஆசைகளைக் கேட்டான். மூன்றாவது ஆசையைக் கேட்பதற்குள் செத்துப்போனான்.அதனால்தான் இந்த குரங்குப்பாதம் என் கைக்கே வந்தது

அவர் சொன்னவிதம் வேடிக்கையாக இல்லை. கணப்பைப் பார்த்தபடியே இருந்த சட்டென்று மேஜர் மோரீஸ் உணர்ச்சிவசப்பட்டு சாபமிட்டபடி அந்த குரங்குப்பாதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீயிலே எறியப்போனார். ஆனால் வைட் அதை தாவித்தடுத்து அந்த குரங்குப்பாதத்தை தன் கைகளில் பிடுங்கிக்கொண்டார். அதை தீயிலே போட்டுவிடலாம்..அதுதான் நல்லது என்று கோபமும் ஆத்திரமுமாக மேஜர் மோரீஸ் கூவினார். அதை எனக்கே கொடுத்துவிடு மேஜர்மோரீஸ். எனக்கு அது வேண்டும்என்றார் வைட். நான் அதை தீயிலே எறியத்தான் போனேன். கேட்டு வாங்கியது நீங்கள். என்னை கடைசியில் குறைசொல்லக்கூடாது என்றார் மேஜர்மோரீஸ். இல்லை என்று சொல்லிசிரித்தா வைட் இதை எப்படிக் கேட்பது? என்றார் வைட்.

ஒன்றுமில்லை..சும்மா கையிலே வைத்துக் கொண்டு உரக்க என்னவேண்டுமோ அதைச் சொன்னால்போதும் என்றார் மேஜர் மோரீஸ் அரேபியக்கதை போல் இருக்கிறது என்று கிழவிசிரித்தாள். மேஜர் மோரீஸ் சட்டென்று கிழவரின் தோளைப்பிடித்தபடி கேட் பதாக இருந்தால் கொஞ்சம் விவேகமான எதை யாவது கேளுங்கள்என்றார். வைட் புன்னகைத்த படி அதை தன் சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டார்.

விருந்தாளி போனதும் ஹெர்பெர்ட் தந்தையிடம் நீங்கள் அதை எப்படி எடுத்துக் கொண்டீர்கள் அப்பா?என்றான்.விளையாட் டாகத்தான். ஆனால் அவர் விளையாட்டாக சொல்லவில்லை என்று தோன்றியது என்றார் வைட். அப்படியானால் நீங்கள் அதை நம்பு கிறீர்கள்.. ஆஹா அப்பா ஏராளமான பணம் கேளுங்கள். நாம் சக்கரவர்த்திகளாக ஆகப் போகிறோம் அட அட அட! மூன்று ஆசைகள்! வைட் அதை பையில் இருந்து எடுத்து கையில் வைத்துக் கொண்டார். என்ன ஆசைப்படுவதென்றே தெரிய வில்லை என்றார் எனக்கு எல் லாமே இருக்கிறதே வீட்டைப் பழுதுபார்க்க வேண்டும் என்று சொன்னீர் களேஎன்றாள் கிழவி. ஆமாம் என்றபின் கிழவர் எனக்கு இருநூறு பவுண்ட் பணம் வேண்டும் என்று உரக்கச் சொன்னார். உடனே ஆ! என்று அலறியபடி கையை உதறினார்.

என்ன? என்ன ? என்றான் ஹெர்பெர்ட் அது என் கையில் இருந்து நெளிந்தது, பாம்பு போல என்றார் கிழவர். சரிதான் பணம் எங்கே? அவ்வளவுதானா? என்று ஹெர்பெர்ட் சொன் னான். நீங்கள் பயந்துபோய்விட்டீர்கள் அப்பா.எல்லாம் உங்கள் கற்பனை.அவர்கள் மேலும் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந் தார்கள். ஹெர்பெர்ட் அப்பவை கிண்டல் செய்தான் படுக்கையருகே ஒரு பையை கட்டி தொங்கவிடுங்கள் அப்பா பணம் வரப் போகிறது. ஆனால் கிழவர் கொஞ்சம் நிலை குலைந்துபோயிருந்தார். அதை குரங்குப் பாதத்தை அவர்கணப்படுகே ஒரு பெட்டிக்குள் போட்டார்.

மறுநாள்மாலைகிழவரும்கிழவியும்மகனுக் காக காத்திருந்தார்கள். பேச்சு மேஜர் மோரீஸ் பற்றித்தான். அந்த ஆள் ஒரு கிராக்கு. படைவீரர்கள் அப்படி ஆகிவிடுகிறார்கள். தங்கள் அனுபவங்களை மிகைப்படுத்தும் போதுதான் அவர்களுக்கு வாழ்க்கையே இருக் கிறது என்றார்வைட். ஹெர்பெர்ட் இதைபெரிய நகைச்சுவையாக ஆக்கிவிடுவான் என்று கிழவி சொன்னாள். ஒரு ஆசாமி அவர்கள் வீட்டு முன் முன்னும்பின்னும் நடப்பதை கிழவி கவனித்தாள். பார்த்தால் நல்ல உடை யணிந்தவராக தோன்றினார். அந்த ஆசாமி மனதை தயார் செய்துகொண்டு உள்ளே வந்தார்.

என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். நான் மா ஆண்ட் மக்கின்ஸ் கம்பெனிக்காக வந்திருக்கிறேன் அது ஹெர்பெர்ட் வேலை செய்யும் இடம். ஏன் என்ன ஆச்சு?என்று கிழவி பதற ஆரம்பித்தாள். இருடீ என்றார் கிழவர் நீங் கள் ஒன்றும் கெட்டசெய்தியுடன் வரவில்லையே? என்னை மன்னியுங்கள்என்றார் வந்தவர்.அவ னுக்கு அடியா?என்றாள் அம்மா. அவர் எந்திரத்தில் மாட்டிக் கொண்டுவிட்டார் அதைச்சொன்ன விதமே காட்டிக் கொடுத்து கொடுத்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு அவனில்லாமல் யாருமே இல்லையே என்று அம்மா பெருங்கதறலை எழுப்பினாள். கிழவர் நடுங்கினார். வந்தவர் கிழவரிடம் நீங்கள் என்னை புரிந்துகொள்ள வேண்டும். நான் வேலைக்காரன் மட்டுந்தான். உண்மையில் மொத்த தப்பும் உங்கள் மகன்மேல்தான். ஆனாலும் எங்கள் நிறுவனத்தின் ஆழமான அனுதாபத்தையும் உதவியையும் நான் உங்களுக்கு தெரிவிக்க வேண்டும். இந்த நஷ்டம் மிகப்பெரியது. ஆனால் நாங்கள் எங்களால் முடிந்த தொகையைத்தான் உங்களுக்கு தர முடியும். அவர் ஒரு பணப்பையை நீட்டினார் இதில் கொஞ்சம் பணம் இருக்கிறது.

ஏனோ கிழவர் கேட்டார் எவ்வளவு? இருநூறு பவுண்ட்என்றார் வந்தவர். அதைக் கேட்டதுமே கிரீச்சிட்டு அலறியபடி கிழவி மயங்கிவிழுந்தாள். மூன்று மைல் தள்ளியிருந்த சிமித்தேரியில் மகனை கிழ தம்பதிகள் புதைத்தார்கள். அந்த இழப்பு அவர்களின் வயோதிபமனத்துக்கு மிகப்பயங்கரமான அடியாக இருந்தது. வேறு எண்ணமே ஓடவில்லை. ஒவ்வொரு கணமும் அவனையே எண்ணி அழுது அழுது நாட்களை நீக்கினார்கள்.

குளிர்ந்த இரவில் கிழவி ஜன்னலை திறந்து மழையைப் பார்த்து நின்றாள். உள்ளே வா குளிரடிக்கிறது என்றார் கிழவர். என் மகன் அங்கே குளிரில் கிடக்கிறானேஎன்றாள் கிழவி. சட்டென்று அவள் கூவினாள் அந்த குரங்குப் பாதம்! என்ன? என்றார் கிழவர். அந்த குரங்குப் பாதம் அதை எடுங்கள் எங்கே அது? கணப்பு அருகே பெட்டியில் இருக்கிறது. எடுங்கள் அதை இன்னும் மிச்சம் இரு கோரிக்கைகள் இருக்கின்றன.

போதும் இதுவே போதும்என்றார் கிழவர். இல்லை முதல் கோரிக்கை நடந்தது.ஆகவே இரண்டாம் கோரிக்கையும் நடக்கும். அவனை திருப்பிக் கூப்பிடுங்கள். என் மகனை கூப்பிடுங்கள். அவன் திரும்பி வரட்டும். முட்டாள் தனமாகப் பேசாதே..அவன் எப்படி வர முடியும்? அது ஒரு தற்செயல் இல்லை அவன் வருவான்.கூப்பிடுங்கள்அவனைக் கூப்பிடுங்கள். இல்லாவிட்டால் நான் செத்துப்போய் விடுவேன். கிழவிக்கு வெறி பிடித்துவிட்டது. கிழவருக்கு வேறு வழியே தெரியவில்லை. அவர் கீழே போய் அந்த குரங்குப்பாதத்தை எடுத்துவந்தார். கேளுங்கள் என்று கிழவி கதறினாள். இது கிறுக்குத்தனம் தீய விருப்பம்என்றார் கிழவர் கேளுங்கள் என்று கிழவி கத்தினாள். என் மகன் திரும்பி வரட்டும்என்றார் கிழவர் இம்முறையும் குரங்குப்பாதம் நெளிந்தது. அவர் கையை உதற அது தரையில் விழுந்துக் கிடந்தது. கிழவருக்குஅச்சமாகஇருந்தது. வெளியே மழை பெய்துகொண்டிருந்தது. ஒருசொல்கூட பேசாமல் இரவெல்லாம் அவர்கள் காத்திருந்தார்கள். ஒன்றும் நிகழவில்லை. மெழுகு வர்த்திகள் அணைந்து இருட்டு பரவியது. அப்போது கீழே ஒரு தடல் ஒலி கேட்டது. கதவில். அது என்ன?என்றாள் கிழவி பாய்ந்து எழுந்து. ஒன்றுமிலை, எலி! என்றார் கிழவர். அவரது மனமும் துடித்தது.

மீண்டும் தட்டும் ஓசை ஆ! அது ஹெர்பெர்ட்! என்று கிழவி கூவினாள். அது என் மகன் ஹெர்பெர்ட்கிழவர் அவள் கையைப்பிடித்தார். எங்கே போகிறாய்? என் மகன் வந்துவிட்டான் அதை உள்ளேவிடாதே இல்லை நம் மகன்தான் அவன் இடுகாட்டில் இருந்து இரண்டு மைல் நடந்து வந்திருக்கிறான்.அதுதான் இத்தனை நேரம். அவன்தான் அது! கிழவி திமிறினாள். கடவுளை நினைத்துச் சொல்கிறேன், கதவைத்திறக்காதேஎன்றார் கிழவர் வேண்டாம்.. சொன்னதைக்கேள் வேண்டாம்!.

ஆனால் கிழவி கூவினாள் சொந்த மகனைப்பார்த்தா பயப்படுகிறீர்கள்? கீழே கதவு மீண்டும்தட்டப்பட்டது. இம்முறை ஹெர்பெர்ட்டின் குரலும் கேட்டது அம்மா! அம்மா! கிழவி பாய்ந்துசென்று கதவை எட்டினாள். ஆனால் கீழே செல்லும் கதவை அவளால் திறக்க முடியவில்லை. அதன் தாழ் இறுக்கமாக இருந்தது. அதை அவள் இழுத்தாள். வெறியுடன் அதைப்போட்டு அசைத்தாள் கிழவர் இருட்டில் துழாவி அந்த குரங்குப்பாதத்தை எடுத்தார். தன் கையில் அதை பிடித்தபடி மூன்றாவது ஆசையைச் சொன்னார்.


பின்னர் அவர் கதவைத்திறந்து வெளியே சென்று பார்த்தார். இருண்ட பாதையில் தொலைதூரத்தில் ஒரு உருவம் திரும்பிச் செல்வது மழைப்படலத்தினூடாகத் தெரிந்தது.

சுருக்கமான மொழியாக்கம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



வடமராட்சி, கரணவாய் தெற்கு,
கரவெட்டியைச் சேர்ந்த

# கந்தையா சற்குணம்

சமாதான நீதிவானாக
பருத்தித்துறை மாவட்ட நீதிபதி
**திரு.பெ.சிவகுமார்**
முன்னிலையில் சத்தியப்பிரமாணம்
செய்துகொண்டார்.

இவர் வீரகேசரி , தினக்குரல் பத்திரிகைகளின் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் விளம்பரம் - விநியோகப் பகுதியில் கடமையாற்றி, பின்னர் தினக்குரல் பத்திரிகையின் விநியோக முகாமையாளராக நியமனம் பெற்று, சிறப்பாக பணியாற்றி, தற்போது உதயன் குழுமத்தின் நெல்லியடி அலுவலகத்தில் பொறுப்பாளராகக் கடமைபுரிகின்றார்.

கரணவாய் தெற்கு, விபுலானந்தர், சனசமூக நிலையம், முன்பள்ளி ஆகியவற்றின் முன்னாள் தலைவராகவும், தென்கருணையம்பதி முருகன் ஆலய முன்னாள் பொருளாளராகவும், சிவில் பாதுகாப்பு குழுத் தலைவராகவும் கிராமிய உட்கட்டமைப்பு வேலைகளுக்கான அபிவிருத்திக்குழுத் தலைவராகவும், செயற்பட்டு வருகின்றார்.

யா/கரணவாய் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரும், பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவருமாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவரைத் தின்னும் வேர்கள்.

ஜனநாயகி

**வளர்மதியும் கனிமொழியும் பாடசாலையில் நடைபெற இருக்கும் ஒன்றுகூடலிற்குச் செல்வதற்காக புறப்பட்டனர். கால்நடையாக சென்று கொண் டிருக்கும் அவர்கள் இருவருக்கும் நடந்த உரையாடல் எம் வாசகர்களுக்காக.**



**கனிமொழி :** வளர், நேற்றைக்கு பேப்பர் பாத்தனியே,

**வளர்மதி :** இல்லையடி, நேற்று ஒரே வேலை, அதால பேப்பர் பாக்க நேரமும் கிடைக் கேல்ல, ஏன் என்ன புதினம்?

**கனிமொழி :** எனக்கெண்டால் சமைச்சு சாப்பாடு குடுத்த கையோட ஒருக்கா சாய் மனைக் கதிரையில சாய்ஞ்சு பேப்பர் பாக்காட்டி சரியே வராது,

**வளர்மதி :** நானும் முந்தி அப்பிடித்தான், ஆனால் இப்ப என்ன செய்யிறது, பிள்ளை யளின்ர அலுவல் பாக்கவே நேரம் சரியாக் கிடக்கு.

**கனிமொழி :** அப்பிடிச் சொல்லாத, நாங்க ளும் எங்கட பார்வையை விசாலப் படுத்தவேணும், அன்றாடம் பேப்பர் பாத்தா தான் நாட்டு நடப்புகள் தெரியும், நாலு பேரோட நாலு விசயத்தைப்பற்றி கதைக்கலாம்.

**வளர்மதி :** நீ சொல்லுறது சரிதான், இப்ப என்ன விசயம் எண்டு சொல்லு.

**கனிமொழி :** கையில கத்தியோட வந்த ரெண்டு றவுடியள் வீடு புகுந்து ரீச்சரையும் தாயையும் கத்தியால குத்திப்போட்டாங்களாம் எண்டு ஒரு செய்தி கிடந்தது.

**வளர்மதி :** அடக்கடவுளே! இதென்ன அநியாயம், பாரன் இப்பத்தைய பெடியளின்ர வேலையை, கூட்டா சேந்து றேப் பண்ணுதுகள், இப்பிடி சோடி சேந்து வெட்டப்போகுதுகள்.

**கனிமொழி :** இப்பத்தைய பெடியள் எண்டு நீ ஏன் எல்லாரையும் சொல்லுறாய், சில கழிச டையள் தான் இப்பிடி நடக்குதுகள்.

**வளர்மதி :** ஏனாம்? என்ன பிரச்சனையாம்?

**கனிமொழி :** அந்த ரீச்சரின்ர தங்கச்சி வெளிநாட்டு மாப்பிளையை கலியாணம் செய்த வாவாம். அவனுக்கு அங்க ஏற்கனவே முதல் மனிசி இருக்குப்போல, அவள் தான் காசு குடுத்து இப்பிடிச் செய்யச்சொன்னவளாம், ஆனால் வெட்டுப்பட்டது தமக்கையும் தாயும், அந்தப் பிள்ளை ஒளிச்சிட்டுதாம்.

**வளர்மதி :** பாத்தியே, ஒரு பொம்பிளைதான் ஏவி விட்டிருக்கிறாள் போல, வெளிநாட்டு மாப்பிள்ளை எண்டதும் வாயைப்பிளக்கிற எங்கட சனத்தைச் சொல்லவேணும், அவனைப்பற்றி தீர விசாரிக்கிறதில்லை, காசைப்பாத்த உடனே கட்டிக்குடுத்திடுறது. பிறகு உப்பிடியான பிரச்சி னையள் தானே வரும்.

**கனிமொழி :** உந்தப்பெடியளைப் பாத்தியோ, சரியான வளர்ப்பு இல்லாதது தான் காரணம், படங்களையும் கண்ட காட்சிகளையும் பாத்து பெடியள் கெட்டுப்போச்சுதுகள்.

**வளர்மதி :** உண்மைதான், பிள்ளையளை ஆன்மீகப் பற்றோட வளர்க்கவேணும், இல்லாட்டி இந்தக்காலம் கஷ்ரம் தான்.

**கனிமொழி :** நீ சொல்லுறது சரிதான், பெற்றோரின்ர பாசமும் ஆன்மீக ஈடுபாடும் தான் நல்ல வழியில நடத்தும்.

**வளர்மதி :** சரி சரி பள்ளிக்கூடம் வந்திட்டுது, வா, உள்ள போவம்.

(விரைந்து நடந்தனர் இருவரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மரத்தில் உள்ள
சொற்களை ஒழுங்குபடுத்தி
அதற்குள் ஒளிந்திருக்கும்
தத்துவத்தை தமிழ், ஆங்கிலம்
இரு மொழிகளிலும்
கண்டுபிடிக்கவும்.

இரண்டு படத்திற்கும் இடையே
உள்ள 6 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்...



**அப்பாவின் கைப்பிடித்து நடக்கும் அனுபவம்
கோடி ரூபாய்க்கும் ஈடாகாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லாசிரியர்களுக்கு ஒரு சமர்ப்பணம்

அக்கறைகொண்ட எம் சமுதாயமே!

மாணவன் தவறு செய்தால் அடிக்கக்கூடாது, திட்டவும்கூடாது, மனம் புண்படும்படி பேசவும் கூடாது... எனில்... படிக்குமாறு அறிவுறுத்தக்கூடாது, ஒழுக்கத்தை வலியுறுத்தக்கூடாது, இது எதுவுமே மாணவனுக்கு பிடிக்காது, மாணவன் மனம் புண்படும்..

எனில் ஆசிரியரின்( பெற்றோரின் ) வேலை தான் என்ன...?

பண்படுத்துவது என்பது புண்படுத்துதல் அல்ல... கற்களை சேதப்படுத்தக் கூடாது என்று சொன்னால் - இங்கு சிற்பங்கள் எப்படி கிடைக்கும்...? நிலங்களை சேதப்படுத்தக்கூடாது என்று சொன்னால் - இங்கு விளைச்சல் எப்படி கிடைக்கும்...? தங்கத்தை நெருப்பில் இடாதே என்று சொன்னால் - தங்க ஆபரணங்கள் எப்படி கிடைக்கும்...?

புரிதல் வேண்டும்...

பண்படுத்துவது என்பது - புண்படுத்துவது அல்ல என்ற புரிதல் மாணவர்களுக்கு மட்டுமல்ல - மற்றவர்களுக்கும் வேண்டும்...! ஒரு பச்சிளம் குழந்தைக்கு ஊசி போடுகிறார் மருத்துவர்... குழந்தைக்கு வலிக்கும் இது தவறு என்று அவரிடம் சொன்னால் குழந்தை நலமுடன் வாழ்வது எப்படி...? ஒரு வீட்டில் குழந்தையின் கைகளை தந்தை பிடிக்க, கால்களை மாமா பிடிக்க.. தலையை அசைக்காமல் பாட்டி அழுத்தி பிடிக்க, குழந்தைக்கு பிடிக்காத கசப்பு மருந்தை தாய் தருகிறாள்... குழந்தையின் மீது செலுத்தப்படும் எவ்வளவு மோசமான வன்முறை இது... அவர்களுக்கான தண்டனை என்ன...?

குழந்தையின் நலன்கள் இரண்டு..

உடல்நலன்...உளநலன்... உடல்நலனுக்காகஇயங்கும்மருத்துவத்துறையின் கைகளை...''ஊசி குழந்தைக்கு வலிக்கும், மருந்து குழந்தைக்கு கசக்கும், அறுவை சிகிச்சை அதை விட வலிக்கும்... எனவே எல்லாவற்றையும் தவிர்த்து குழந்தைக்கு மனம் நோகாமல் அறிவுரை மட்டும் கூறி அனுப்புங்கள்'' என்று சொல்வீர்களா...? மருத்துவத் துறையின் கைகள் கட்டப்பட்டால், உடல் நலன் ஒழிந்தது என்று அர்த்தம்...

புரிதல் வேண்டும்...

அதேபோல... உள நலனுக்கானது தான் - கல்விக்கூடங்கள்... அது கூடாது, இதுகூடாது என்று இங்கே கற்பிப்பவரின் கையும், சுய சிந்தனை உணர்வும் கட்டப்பட்டுவிட்டன... விளைவு - நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஒரு கல்விக்கூடம் மூடப்பட்டால் - அது நூறு சிறைச்சாலைகள் திறப்பதற்கு சமம். மூடும் அளவிற்கு அதிக சிரமம் வேண்டாம்...

ஆசிரியரின் உடலும், உள்ளமும், கைகளும் கட்டப்பட்டாலே போதும்...

மாணவன் ஆசிரியரால் திருத்தப்படாவிட்டால்,காவலர்களின் அடியால் திருந்த வேண்டும் அல்லது சிறைச்சாலைக்குத்தான் செல்ல வேண்டும்.

சிந்தியுங்கள் பெற்றோர்களே..!

**மனம் நொந்திருக்கும் ஆசிரிய சமுதாயம் சார்பாக இந்த வேண்டுகோள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பக்ககதை

# மறக்கவியலாத மன்னிப்பு

''எக்சியூஸ்மி'' இந்தக்குரல்... மறக்க வியலுமா அவனால்? தேன்மொழி! அவன்நாடி நரம்புகள் சிலிர்த்து அடங்கியது ஒரு முறை. கையிலிருந்த பொருட்களடங்கிய பைகளை தவறவிட்டு அவசரமாய்த்திரும்பினான் ரகு.

கடுகளவேனும் கம்பீரம் கலையாதவளாய் நிமிர்ந்து நோக்கினாள் தேன்மொழி. ''ஹாய் ரகு நல்லா இருக்கிறீங்களா? எப்போ லண்டன்ல இருந்து வந்தீங்க? தீபா, பிள்ளைகள் நல்லா இருக்கினமா?'' என்று கேள்விக்கணைகளைத் தொடுத்தவளை இமைக்க மறந்து பார்த்தான் ரகு. எப்படி முடிகிறது இவளால் தனக்கு துரோ கமிழைத்தவன் குடும்பம் வரைக்கும் நலம் விசாரிக்க? அந்தநொடி மனதளவில் குறுகிப் போனான் ரகு. ''நல்...நல்லா இருக்கன் தேனு, நீஎப்பிடி இருக்கிறாய்? எந்த ஸ்கூல்ல படிப்பிக் கிறாய்? அம்மா என்ன செய்யிறா? அப்பா தவறிட்டார் என்று நிரஞ்சன் சொன்னவன், சொறி தேனு வரேலாம போச்சு'' அங்கலாய்ப் போடு வார்த்தைகளை உதிர்த்தான்.

கயூரி
புவிராசா



''ம்... பரவாயில்லை ரகு, மத்திய கல்லூரில தான் படிப்பிக்கிறன். அம்மா இருக்கிறா. அப் பாவே உலகமெண்டு வாழ்ந்த மனுசி, உடைஞ்சு போட்டுது'' என்றவளைபார்த்த ரகுவின்விழிகள் அதிர்ச்சியை உள்வாங்கிகொண்டது. இரு வில்லின் மத்தியிலிருந்த கருஞ்சாந்துப் பொட்டு அவள் இன்னும் தேன்மொழி சிதம்பரநாதன் என்று கட்டியம் கூறிற்று.

''தேனு நீ?'' அவனால்கேட்கமுடியவில்லை. அதற்கும் ஒருபடி மேலே போய், ''இல்லை ரகு அம்மாவுக்கு நான் மட்டுந்தானே, எவ்வளவோ கட்டாயப்படுத்தினாங்க, ஆனா எனக்கு விருப்பமில்லை,'' என்றாள்.

மறந்தும் உனக்காய் என் மனதில் மொட்டு விட்ட நேசம் மாற்றானுக்காய் மலராதென கூற வில்லை அவள். ''சரி ரகு, ஒரு நாளைக்கு வீட்ட வா, நான் வாறன்'' என்றபடி நகர்ந்த வளுக்கு கலங்கிய விழிகளை மறைக்க வியலாமல் தலையசைத்தான் ரகுநந்தன்.

ஒரு காலத்தில எப்பிடி இருந்தவள், என் தேவதை, ஐயோ இண்டைக்கு வாடின கொடி போல வெறுமை படர்ந்த கண்களோட, கட வுளே, நான் எவ்வளவு சுயநலமா இருந் திருக்கிறன். என் விழி தீண்டையில் சிவப் பவளை உயிரோட கொண்றிருக்கிறேனே, என் னால தானே அவள் வாழ்க்கை இப்பிடி, அந்த நொடி தன்னை முழுவதும் வெறுத்தான் ரகு.

''டாடி'' என்ற பிஞ்சுக்குரலில் நடப்புக்கு திரும்பியவன் பைகளை தூக்கியபடி ''இதோ வந்துட்டன் கண்ணா'' என்றபடி விரைந்தான் கவுண்டருக்கு.

மன்னித்துவிடடி என் தேவதையே
எனை ஆணிவேராய் கொண்ட
என்னவளையும்
என் கண்மணிகளையும் பிரிதல்
சாத்தியமாகாவொன்று
வரும் ஜென்மத்திலாவது உன்
காதல் மொத்தமும் பெறும்
வரம் பெற்று ஜனிக்க வேண்டுமடி
உன்னுயிரானவனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லிசையாய் வசமானாய்

**முன்கதைச்சுருக்கம்:**

**சில வருடங்களாக லண்டனில் வசித்து வரும் துர்க்கா, திருமண வரவேற் பொன்றில் சயந்தன் என்பவனைச் சந்திக் கிறாள்.**

**குழந்தையோடு இருப்பவனிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்ளவும் நினைக்கி றாள். அவனோ, முதலில் துர்க்காவின் அன்னை, அம்மம்மாவோடு கதைத்துவிட்டு துர்க்காவை**




**எதிர்கொள்கிறான். ஆனாலும், ஒருவர் மற்ற வருடன் கதைத்துக்கொள்ளும் சூழல் அவ்வ ளவாக அமையவில்லை. திருமண வரவேற் பிலிருந்து வீடு திரும்பும் துர்க்காவின் மனதில் அவளின் பாடசாலை நாட்கள்! அதில், சயந் தனும் வந்து போகிறான்.**

நடுஇரவு! கும்மிருட்டு! போட்டிருந்த கம் பளி ஆடையும்தாண்டிச்சென்று சுளீரென்றுகுத் தும் பனிக்குளிர்! மென்பனித்தூவலின் செல் லத் தீண்டல்! இவை எதையும் பொருட் படுத் தாமல், அச்சிறு சதுரவடிவிலான பால் கனி யின் இரும்புக்கிரிலில் பட்டும்படாமலும் நின் றிருந்தான் சயந்தன். கரமிரண்டையும் மார் புக்குக் குறுக்கே இறுகக் கட்டியிருந்தான். தொலைதூரமாக இருளைத் துழாவிய விழி களில் ஒருவிதமயக்கம் கலந்த மலர்ச்சி! மனமோ, தன்னுள் குடியிருந்தவளைச் சற்றும் எதிர்பாராது கண்டுகொண்டதினால் பூரித்துக் கிடந்தது. நம்பிக்கை என்பது துளியுமின்றி அழிந்துவிட்ட நிலையில், நடப்பதைக்கண்டு கொள்வோம்! என்றிருந்தவனாச்சே! இத்தனை நாட்களும் ஒருவலியோடு தொட்டு வரும் கடந்தகால நினைவுகளின் நிழலில், இன்றோ, ஆசையாக ஒதுங்கிக்கொண்டது அவனுள்ளம்.

அன்று, பாடசாலையிலிருந்து தங்கை அஞ் சனாவை அழைத்துவரச்சென்றிருந்தான் இவன். பாடசாலை விட்டதும் முதல் ஆளாக வந்தாள்போல! அவசரம் அவசரமாக வெளியே வந்த வேகத்தில், ''அண்ணா போவோம் கெதியா எடுங்க!'' என்றவள், அவன் மோட்டார் சைக் கிளை இயக்க முதலே ஏறியமர்ந்துவிட்டாள். அவளது செய்கைதந்த வியப்பில், பைக்கை இயக்கிவிட்டு, பாதையில் செலுத்தாது தங்கையைத் திரும்பிப் பார்த்தான் சயந்தன். ''என்னஅஞ்சு? அவசரமாக எங்காவது போக வேண்டுமா? அல்லது...'' என, அவன் முடிக்க முதல் குறுக்கிட்டவள், ''அப்படியெல்லாம் இல் லையண்ணா. நீங்க எடுங்கோவன். போற வழியில் கதைப்போம்!'' படபடத்தளின் பார்வை பாடசாலையின் பிரதானவாயிலில்! ம்ம்சரி தான். பைக்கைச் செலுத்தத் தொடங்கிய வேகத் தில், காதுகளில் வந்துவிழுந்த உரத்த அழைப் புக்குரலில் நிதானித்து நின்றுவிட்டான் அவன்.

''அஞ்சு! கொஞ்சம் நில்லடி!'' என்று ஓடி வரும் துர்க்காவையும் அவள் கையில் படபடக் கும் காகிதத்தையும் தமையனையும் பார்த்த அஞ்சனாவின் நெஞ்சத்தில் படீர்... படீர்! ''போவோம்ணா...நிற்பாட்டவேணாம்!'' ''இல்ல அஞ்சு, அங்கபார். உன்ப்ரெண்ட் போல!''

''பரவயில்லை, நீங்க போங்க. அவளுக்கு இன்றைக்கு விசர்பிடிச்சிட்டு!'' இவள் சொல் லிக் கொண்டிருக்கையிலேயே அவர்களை நெருங்கியிருந்தாள் துர்க்கா. மற்ற இரு தோழி களும் பாடசாலை வாசலில் நின்று வேடிக்கை பார்க்க, வந்த வேகத்தில் அஞ்சனாவின் முதுகில் ஒரு தொம் போட்டுவிட்டு பைக்கின் முன்னால் சென்று, நின்றுகொண்டாள்.

''அம்மாடி! நிற்காமல் போயிருவீங்க என்று நினைத்தேன், எவ்வளவு தடவைகள் கூப் பிடுகிறேன், பேசாமல் போறீங்களே! காது என்னடியம்மாஅவுட்டா?'' நேருக்குநேராகவே சயந்தனைப் பார்த்துக் கேட்டவள், சட்டென்று அவன் விழிகளில் தோன்றிய ஆச்சரியத்தைக் கடினம் மேவுவதைப் பார்த்துவிட்டு, தோழியிடம் சீறுவதுபோல் நன்றாகவே பாசாங்கு செய்தாள்.

''இங்கபார் துர்க்கா, வேண்டாம்டி சொல் லிட்டன்!'' அதட்டுவது போல் ஆரம்பித்த அஞ்ச னா, ''ப்ளீஸ்செல்லம்...பேசாமல்போயிரு!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஞ்சலாக முணுமுணுத்தது, சயந்தனின் செவிகளை எட்டவே செய்தது. தங்கையைத் திரும்பிப் பார்த்துவிட்டு, முன்னால்நிற்பவளை யும் அவள் கையிலுள்ள வெள்ளைக் காகிதத் தையும் பார்த்து நெற்றி சுருக்கினான் அவன். துர்க்காவின் விழிகளோ, குறும்பில் தெப்பலாக நனைந்து கிடந்தன! அதிலும், அஞ்சனாவின் தவிப்பைப் பார்த்தவளுள் உவகைபொங்க, அவளை இன்னுமின்னும் திண்டாட வைக்க வேண்டும் போலுணர்த்தி நின்றது.

''இந்தா...ங்..க'' கையிலிருந்த காகிதத்தை அவர்கள்புறம் நீட்ட முதலே, பைக்கிலிருந்து குதித்திறங்கிய அஞ்சனா, தோழியின் கரத்தை இறுகப் பற்றிக்கொண்டாள். அஞ்சனாவின் செய்கையும் பதற்றமும் துர்க்காவினுள் நகைப் பைப் பொங்கவைத்தாலும் அதட்டி அடக்கி விட்டு அவளையே முறைத்தாள். ''பச்சரும! ஏன்டிகையை முறுக்கி உடைக்கப்பார்க்கிறாய்? அப்படி உனக்கு என்ன கெட்டது செய்து விட்டேன்?'' தோழியிடம் சீறலாகக் கேட் டவளின் குறும்புவிழிகள் சயந்தனையும் விட்டு விடவில்லை.

அவன், தம்மையே பார்ப்பதைப் பார்த்து விட்டு, ''பாவமென்று பின்னால் கலைத்துக் கொண்டுவந்ததுக்கு இதுதேவைதான். வெறும் பேப்பரை ஏதோ சாக்லேட்போல பறந்து பிடிக்கிறாயே!'' சீண்டினாள்.

''யார்? நான் பறக்கிறேனா?'' முறைத் தாள்அஞ்சனா.

''பின்ன நானா? ஹா..ஹா..உனக்கும் நினைப்புத்தான்!'' கண்ணடித்தவள், ''ஏய் அஞ்சு, இப்படிக் கசக்கினால் கிழிந்துபோகும். பிறகு என்னட்டவரக்கூடாது.'' எச்சரிக்கை வேறு செய்தாள்.

அஞ்சனாவுக்கோ நல்ல கோபம். ''இங்கபார் துர்க்கா, இப்படியென்றால் இனிமேல் உன்னோடு கதைக்கவே மாட்டேன். மரியாதையாக போய் விடடி!'' என்றவள் விழிகளில் கோபத்தைக் கடந்து கண்ணீர் கசியமுனைய, மறுநொடி, கடதாசியைப் பிடித்திருந்த கரமிரண்டையும் விலக்கிக்கொண்டாள் துர்க்கா. அஞ்சனாவின் விழிகளோ தன்கைக்கு வந்துவிட்ட அந்தக் காகிதத்தில்! இப்படியும் அப்படியும் புரட்டிப் பார்த்துவிட்டு குழப்பமும் முறைப்புமாகத் தோழியை ஏறிட, அவளோ, உதடுகளில் விஷம முறுவலும் விழிகளிகளில், எப்படி மச் சாள்எப்படி? நல்லாஏமாந்தாயா? அப்பட் டமான கேலியுமாக நின்றாள்.

''என்னடிஇது?'' கேட்டும்விட்டாள்அஞ்சனா. தமையனுக்கு எதையோ எழுதிக்கொண்டு வந்துவிட்டாள் என்றல்லவா பயந்திருந்தாள்.

அதில்லையோ! ''என்னடி என்றால்? கண்ணைத் திறந்து நல்லாப்பாரேன்.'' இதைத் தரத்தான் வந்தேன்.

''நீதானே எரும நம்மோடு படித்துவிட்டு கொழும்புக்குப்போன தர்சியின் போன் நம்பர் கேட்டாய். அதுதான் இதில இருக்கு.'' மீண்டும் கண்ணடித்தாள் துர்க்கா. ஸ்கூலில்வச்சு தரமறந்திட்டன். உதடுகளில் குறுநகையோடு மீண்டும் ஒருதரம் சயந்தனைப் பார்த்துவிட்டு, ''போயிட்டுவாடி, நாளைக்குச்சந்திப்போம்!'' என்று விட்டு நகர்ந்தவள், ''அத்தையை அன்பாகக் கேட்டேன் என்று சொல்லிவிடு!'' என்றபடிதான் அவ்விடம் விட்டகன்றாள்.

'அடிப்பாவி! இதை எழுதி வைத்துக் கொண்டா இன்றைக்கு முழுதும் என்னை அந் தப் பாடுபடுத்தினாய்? பன்றிக்குட்டி!

உனக்கு நாளைக்குத் தாரேன்டி!' வாய் விட்டே சொல்லிக்கொண்டு ஏறிய தங்கையை ஒருபார்வை பார்த்துவிட்டு, மோட்டாரை இயக் கியவன் கேட்டகேள்வியே, ''இந்தப்பிள்ளை நமக்குச் சொந்தமாஅஞ்சு?'' என்பதுதான். ''இல் லையே! ஏன்ணா?''

''அத்தை என்று நம்ம அம்மாவைத்தானே சொல்லிட்டுப்போறா?'' ''அம்மாவைத்தான். ஆனால் அது...'' இழுத்தாள் அஞ்சு. ''அவளின் அத்தையைப் போலவே நம்ம அம்மா இருக் கிறாவாம், என்று அப்படிக் கூப்பிடுறவள்.'' என்று, தங்கை சமாளித்த சமாளிப்பை அப் போது கேட்டுக்கொண்டான் அவன். காரணம், சத்தமாக கதைத்துச் சிரித்தவள் முகம் சுளிக்க வைத்திருந்தாலும் அவ்வளவாக அவள் பற்றி யோசிக்கவில்லை இவன். அப்படித் தான் எண்ணியிருந்தான். அது உண்மையும் தான். ஆனாலும், வெள்ளைச்சீருடை, இருபுறத் தோள்களாலும் வழிந்த இரட்டைப்பின்னல்கள், அதில் அழகாகக் கட்டியிருந்த சிவப்பு ரிபன், வெள்ளைச்சப்பாத்து, தெரிந்தும் தெரியாமலும் வெள்ளைசொக்ஸ். அதுமட்டுமா? முகம்கொள் ளாக்குறும்பு, அதிலும் அந்தவிழிகள், விஷம மும் குறும்பும் கலந்து பளபளத்தபடி!

முதல்முதல் அவளைக்கண்ட அந்த உரு வம் இப்போதும் அவனுள் அழியா அழ கோவியமாய்! ''ஹா..ஹா...'' வாய்விட்டே சிரித்துவிட்டான் சயந்தன். பின்தான், அடுத்த அறையில் உறங்கும் தங்கை குடும்பத்துக்கு கேட்டுவிட் டால் என்றநினைவில் கப்பென்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கிக்கொண்டாலும், உள்ளத்தில் ததும்பிய நகைப்பும் மகிழ்வும் சற்றும் அடங்க மறுத்து.

அவள் நினைவுகளையே அசைபோடத் துணிந்தது. முதல் சந்திப்பைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் போகும் போதெல்லாம் அவள் அவன் பார்வையில் பட்டாள்.

காரணம், அஞ்சனாவோடு மிக நெருக்கமான தோழியாகியிருந்தாள். இதுவும் என்வீடு தான்என்றளவில்இவன்வீட்டில்சுயாதீனமாகத் திரிந்தாள். இவன் கண்ணில்படும் போதெல்



லாம் அதேசீண்டலையும் குறும்பையும் காட்டி நின்றாள். பகிடிபகிடியாக எதையாவது சொல்லி எரிச்சல் ஏற்படுத்தினாள்.

''உன் ப்ரெண்டுக்கு என்ன மறை கழன்று போச்சுதா அஞ்சு?சரியான லொட லொட! அதுமட்டுமா? தன்னைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்றில்லாது வாயைத்திறந்தால் மூடுவதே இல்ல. உனக்கு நேரெதிர். எப்படி ஒத்துப்போகுதோ!'' தங்கையிடம்தன்அதிருப்தியையும்வெளிப்படுத்தியிருந்தான். ''அவள்கதைப்பதெல்லாம் பகிடிக்கு அண்ணா. அதைக்கேட்டு நாங்கள் சிரிப்பதால் இன்னும் கொஞ்சம் அதிகமாகச் செய்வாள். மற்றும்படி, அவள் அருமையான பிள்ளை தெரியுமா?'' தோழிக்கு வக்காலத்து வாங்குவாள் அஞ்சு.

''என்னவோ செய்! எனக்கு முன்னுக்கு மட்டும் கூட்டிக்கொண்டுவராதே! எந்தநாளும் அமைதியாகப் போகமாட்டேன்!'' என்றும் சொல்லியிருக்கிறான். அப்படியிருக்கையில், அன்று நடந்ததுதான் என்ன? இப்போது யோசித்துப் பார்த்தால்அஞ்சனாசொல்வதுபோலகேலியும் கிண்டலுமாக அதைக் கடந்திருக்கலாம். எனக்கு அன்றைக்கு ஏன் அப்படிக் கோபம் வந்தது? முணு முணுத்தான்.

''அவள் என்னை என்றில்லை அண்ணா, அண்ணாமார் இருக்கிற பிள்ளைகள் எல்லாரையும்மச்சாள்என்றுதான்சொல்லுவாள். அதெல்லாம் உண்மையாகுமா? ஒருஜாலிக்கு அண்ணா! அவள்மட்டுமில்ல, எங்க குரூப்பில எல்லாரும்தான்.'' என்றது ஏனோ அவன் மனதில் எரிச்சலைச் சுரக்கச் செய்திருந்தது.

''அப்போ நீயும் இப்படியா கதைப்பாய்?'' தங்கைக்குநீளமாக அறிவுரை! ''பார்க்கிறவன் எல்லாரையும் தன்னோடு சேர்த்துக் கதைப்பதில் என்ன ஜாலியிருக்கு!'' விழிகளிடுங்க தமையன் கேட்டவிதத்தில் பயந்து போனாள் அஞ்சனா. ''ஐயோண்ணா!'' அப்படியெல்லாம் இல்லவே இல்ல. என்று எவ்வளவு கெஞ்சிக் கூத்தாடி சமாதானம் செய்திருந்தாள். ஆனாலும், இந்த விடயமாக அவன் மனதில் திரண்டிருந்த எரிச்சல் முழுதும் சந்தர்ப்பம் வாய்த்ததும் வார்த்தைகளால் அவளைத்தாக்கி விட்டனவே! இப்படி, கடந்துவிட்டநாட்களை, அதில் துர்க்காவைச் சந்தித்த தருணங்களை எண்ணி நின்றவனை, ''சயந்தன் அண்ணா! இதென்ன குளிருக்குள்ள நிக்கிறீங்க?! அதுவும் எத்தனை மணி தெரியுமா?'' நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தாள் அவன் ஒன்றுவிட்ட தங்கை. ''இல்ல, தூக்கம் வரஇல்ல.'' அவளைச் சமாளித்தபடி உள்ளே வந்தான் சயந்தன்.


தொடரும்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் சாப்பிட வேண்டிய ஆரோக்கிய உணவுகள்

**இரவு நேரத்தில், சத்தான, கலோரிகள் குறைவான உணவுகளைச் சாப்பிட வேண்டியது அவசியம்.**



இரவு நேரத்தில், சத்தான, கலோரிகள் குறைவான உணவுகளைச் சாப்பிட வேண்டியது அவசியம். முக்கியமாக எண்ணெய் உணவுகள் மற்றும் கொழுப்பு அதிகமான உணவுகளை அறவே ஒதுக்க வேண்டும்....

இரவு ஒன்று அல்லது இரண்டு வாழைப்பழம் மட்டும் சாப்பிட்டு வந்தால் உங்கள் உடல் எடையில் நல்ல மாற்றம் காணலாம். மற்றும் உங்கள் உடலுக்குத் தேவையான கலோரிகள் மொத்தமும் அந்த ஓர் வாழைப்பழத்திலேயே இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இரவு நேரத்தில் இரண்டு அல்லது மூன்று வேகவைத்த முட்டைகள் சாப்பிடலாம். வெள்ளைக் கரு மட்டும். வயிறு நிறையாவிட்டாலும், உடலுக்குத் தேவையான சத்து மொத்தமும் இதில் இருக்கிறது.

இரவு ஒரு டம்ளர் கொழுப்பு நீக்கப்பட்ட பால் குடித்து வந்தால் ஒரு மாதத்திற்குள் உங்கள் உடல் எடையில் நல்ல மாற்றத்தைக் காண இயலும்.

இரவு நேரத்தில்... முழுச் சாப்பாடு, அதிகப்படியான உணவுகளைத் தவிர்க்க வேண்டியது அவசியம். இது உங்கள் உடல் எடையை மிக விரைவாக அதிகரிக்கச் செய்யும் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

இரவு நேரத்தில் மது அருந்துவது தான் உடல் எடை அதிகரிக்க முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, இரவு நேரத்தில் மது அருந்துவதை முற்றிலுமாக தவிர்த்துவிடுவது மிகவும் நல்லது.

சிலருக்கு கோப்பி இல்லாத இரவும், பகலும் சாத்தியமற்றது. இத்தகையவர்கள் சாப்பிட்டு முடித்தவுடன் கோப்பி குடித்தால் தான் சாப்பிட்ட உணர்வே இருக்கும். ஆனால் இரவு தூங்கச்செல்வதற்கு முன்பு கோப்பியைக் குடிக்ககூடாது. இரவில் கோப்பி குடிப்பதால், உங்களால் காலையில் விரைவாக எழ முடியாது.

**நன்றி : இணையம்**

**பெற்றெடுத்த பிள்ளையைச் சீராட்டி வளர்த்து**
**நல்லொழுக்கம் கற்பித்துக் கல்வியைப் போதித்து**
**தன்னைவிடச் சிறந்தவனாய் உயர வேண்டுமென**
**நினைப்பவர் தந்தை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகம் எதனால் இயங்கு கின்றது? எது இயக்கி ஒழுங்கு படுத்தி நகர்த்திச் செல்கின்றது? என்று கேட்டுப்பாருங்கள் ஒவ் வொருவரும் ஒவ்வொன்றைச் சொல் வார்கள்... இந்த உலகையே இயக்குவது அன்பு.

அது இல்லை என்றால் எதுவும் இயங் காது என்றனர் பலர், இல்லை இல்லை நம்பிக்கை, உண்மை, நேர்மை, துணிவு, ஒற்றுமை இப்படி இன்னும் பலதைச் சொன் னார்கள் சிலர்... ஆனால் இதுவரை நான் கேட்டதில், பலர் பலதைச் சொன்னார்கள். எப்படி? என்று பலருக்கு கேள்வி எழலாம். ஆம்! பயமேதான். அது எப்படி..? இங்கேதான் நீங்கள் நுட்பமாக கவனிக்க வேண்டும். சில உதாரணங்கள் சொல்லிச் சொன்னால்தான் அதன் பொருளும் இயக்கமும் நன்கு புரிந்து கொள்ளக்கூடியதாய் இருக்கும் என்ற எண்ணத் தில் சிலவற்றை எடுத்துக்காட்டி ஆரம்பிக் கின்றேன்.

மனிதவாழ்க்கை எங்கிருந்து ஆரம்பிக் கின்றது? குடும்பத்தில் இருந்து வாழ்வு ஆரம்பிக்கின்றது என்று வைத்துக்கொள் வோமே, (சிலரைத்தவிர) ஒருவனோ ஒருத் தியோ தனக்கென ஒரு துணை தேடுகின் றனர். அப்போது அழகு, அறிவு, நல்ல குணம்,

# பயம் என்பதே பயம். பயத்தின் பயம் பயமறியும் !

கண்ணன்கண்ணராசன்



ஆனால் ஒருவர்கூட நான் எண்ணியதையோ என் சிந்தையில் சிதறியதையோ சொல்ல வில்லை ... ஆமாம் அது எது தெரியுமா ? இந்த உலகை என்ன, சகல உயிரினங்களையும் ஆட்டுவித்து வழிநடத்தி ஒழுங்கமைத்து கூட்டிச்செல்வது வேறு எதுவும் இல்லை,



பயம் தான்.

ஆமாம் பயமேதான். என்ன அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக இருக்கின்றதா, உண்மை தான். அப்படித்தான் இருக்கும். காரணம் பயம் என்றாலே எதுக்கும் உதவாத ஒன்றாக வும் அது வாழ்வில் வந்தாலே எதுவும் இல் லாது போய்விடும் என்பதும் பலரின் ஏன் அனைவரினதும் எண்ணம் என்று கூட சொல்லலாம். பயமா? அது இப்படி இன்னும் சில அம்சங்களோடு தானே தேடுகின்றோம். இதற்குள் எத்தனை பயங்கள் இருக்கின்றது தெரியுமா ? ஆமாம், அழகு இல்லாவிட்டால், என்னடா இப்படி ஒருவரை எப்படித்தான் தேர்ந்தெடுத்தார் என்று பார்க் கிறவர்கள் ஏதும் சொல்வார்களே என்ற பயம், அறிவு குணம் இல்லாவிடில் அதற்கும் ஏதா வது சொல்வார்கள். எல்லாவற்றிற்கும் எவ ராச்சும் ஏதும் சொல்லி விடுவார்களோ என்ற பயம். சரி எல்லாம் இருந்தும் நல்ல குணம் இல்லாட்டில் வாழ்க்கை தலைகீழாகி விடு மோ என்ற பயம் சரி இப்போ இது வெல் லாம் கிடைத்துவிட்டால் முடிந்து விட்டதா இல்லவே இல்லை, குழந்தைகள் பிறந் தவுடன் அவர்களை ஒரு நல்ல பாடசா லையில் சேர்ப்பதில் இருந்து கல்லூரிவரை பயம் எங்கே நன்கு கல்வி கற்காமல் நாளை எங்கள் பிள்ளைகள் வாழமுடியாமல் தவிப்பார்களோ என்ற பயம் அதன்பின் வேலை கல்வி சரியான இடத்தில் அமையாது விட்டால் வாழ்க்கைத்தரம் என்னாகுமோ என்ற பயம் இப்படி எல்லாத்திலும் பயந்து பயந்துதான் வாழ்க்கையே ஓடுது அதுமட்டுமா குடும்ப வாழ்க்கை உள்ளே எத்தனை இன்னல்கள் வெறுமைகள் ஏன் பிடிமானம் இல்லா வெறுப்புக்கள்கூட இருந்தும் சுற்றம் சூழல் என்ன சொல்லுமோ என்று எதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிக்கொள்ளாது உள்ளே புளுங்கி வெளியே சிரித்து பிரிவுகளை தவித்து நடைபோட வைப்பதும் பயமே. எங்கள் எல்லோருக்கும் என்ன என்னவெல்லாம் பிடிக்கும் இந்த உண்மையை யாரும் மறுக்கவும் முடியாது இருந்தும் விரும்பியது எல்லாம் நிறைவேற்ற முடியுமா முடியாது ஏன் என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்ற மரியாதை கௌரவத்தின் மேல் இருக்கும் பயம் ஏன் மனசுக்கு பிடித்த ஒரு சாப்பாட்டைக் கூட விருப்பத்தோடு சாப்பிட முடியுதா இல்லையே உடலுக்கு ஏதும் ஆகி நோய்வாய் பட்டுவிடுவமோ என்ற பயம் தான்,,,.. இப்படி எதை எடுத்துப்பார்த்தாலும் கணவன் மனைவி தாய் தந்தை மகன் மகள் அக்கம் பக்கம் இப்படி அவர் அவர்கள் கடமையில் இருக்காது தங்கள் எண்ணப்படி வாழ்கிறார்களா இல்லையே எல்லாம் ஒன்றோடு ஒன்றுகூடிய பயம் இந்த பயம் தான் உலக நாடுகளுக்கு இடையில் நடக்கும் போர்களுக்கும் காரணம். விட்டால் யார் கை ஓங்குமோ என்ற பயம் ஒருபுறம் தங்களை வல்லமையில்ல நாடுகளோடு இணைத்துவிடுவார்களோ வறுமையான நாடு என்று சொல்லிவிடுவார்களோ என்ற பயத்தினால் தான் எங்கும் எதுவும் ஒழுங்கில்லாது எல்லாமே ஒன்றை ஒன்று பிடித்து விழுங்குகின்றார்கள். அதிலும் கூட தங்களை கெட்டவர்கள் என்று சொல்லி விடுவார்களோ என்றும் இன்னொரு புறம் சமதானம் போர் நிறுத்தம் என்றும் ஒரு நாடகங்கள் இவற்றுக்கெல்லாம் என்ன காரணம் தங்களை நல்லவர்களாகக் காட்டிக்கொள்லாமல் விட்டிடுவமோ என்ற பயம் பயம் பயமே... இதை விட வேடிக்கையானது இன்னொன்று இருக்கின்றது அது என்ன தெரியுமா? நாம் அடிக்கடி ஏதும் பிரச்சினை என்று வந்ததும் உடனே சொல்லுவது என்னை மற்றவர்கள் போல் பயந்தவன் என்று நினைத்திடாதே நான் பயப்பட மாட்டேன் என்ன வந்தாலும் என்னை என்ன என்று நினைத்தாய் என்று, ஆமாம் எங்கே நம்மை பயந்தவன் என்று மற்றவர்கள் நினைத்துவிடுவார்களோ என்ற பயம் தான் நாம் பயமில்லாதவர்கள் என்று மற்றவர்களிடம் பயத்தை மறைக்க சொல்லும் சொல்லே பயம் பயம் பயம் !

★★★★★★★★★★★★★★★★

**சென்றமாத ஆங்கில சிறுகதையின் மொழிபெயர்ப்பு**

## SHEBA AND THE MONKEY.

அம்மாவின் அன்புக்கு ஈடிணைதான் ஏது?

காட்டு இராணி ஷேபாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளை ஆசை. ஒரு முறை ஷேபா, காட்டு மிருகங்களை தங்கள் குழந்தைகளை அவளிடம் கொண்டுவந்து காட்டும்படி பணித்தாள். மிக அழகிய குழந்தைக்கு பரிசளிப்பேன் என்றும் அறிவித்தாள்.

இப்படி, அனைத்து மிருகங்களும் தம் குட்டிகளை அங்கே கொண்டுவந்தன. இராணி ஷேபா குரங்கின் குட்டியைப் பார்த்தபோது, அழகேயில்லாத குட்டி இது. உனக்குப் பரிசு இல்லை என்று தாய்க்குரங்கிடம் சொல்லி, அதன் மனதை வருத்தினாள்.

குட்டிக் குரங்கோ இதைக் கேட்டு அழுதது. தாய்க்குரங்கு குட்டியை வாஞ்சையோடு அணைத்து,

இராணி ஒரு முட்டாள். இவள் பரிசு யாருக்கு வேண்டும்? நீதான் என் பொக்கிஷம். உலகிலேயே ஈடிணையில்லாத செல்வம் நீதான் என்று சொல்லி, குட்டியை வாரியணைத்து கொஞ்சியது தாய்க்குரங்கு.

அம்மாவின் அன்புக்கு ஈடிணைதான் ஏது?

தந்தை என்பவர் ஒரு குடும்பத்தைக் கட்டி எழுப்புகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வராது போவேனோ?

வராது போவேனோ?
விசும்பிடம் கூட சௌக்கியம்
விசாரித்த
உன் வாஞ்சை மனத்தை
கண்டு வியந்திருக்கிறேன்
நீல வண்ணக் குருவிகளிடம்
சங்கேதம் பேசுமுன் நேசம் பார்த்து
பிரிய மணற் குவியல்களை இதய வெளியில்
குவிக்கத் தொடங்கியிருந்தேன்
நிலா காய்ந்த
பொழுதொன்றில் விண்மீன்களை
தரைக்கழைத்து
விருந்து வைப்பதாய்
நீ புனைந்த கதைகளோ பேரழகு..
என் பிடியிலிருந்து நைச்சியமாய்
நழுவிப் போய்
இதழ்களில் விரல் வைத்து
பழிப்பு காட்டும் உன்
குழந்தைமையில் தான்
எத்தனை லாவண்யம்!
பிறிதொரு நாளொன்றில் தான்
அந்த சூறைக்காற்று தள்ளிய
ஆலத்தோடு விழுந்து
வேரோடு சாய்ந்துப் போனாய்
நான் முந்திக் கொண்டதாய்
கடையிதழ் புன்னகையோடு
விடைப்பெற்றாயே
ஏன் மித்ரா?
பின்னால் வரவில்லை என்பதற்காய்
பிந்தியாவது வராமலா போய் விடுவேன்

பதுளை அருள்

ஓங்கி வளர்ந்து, தழைத்து, காயோடும் கனியோடும் காட்சிதரும் ஒரு விருட்சத்தைத் தாங்கி நிற்பது அதன் ஆணிவேர்தான். அதுபோல் ஒரு குடும்பத்தின் தலைவனாக இருந்து, அக்குடும்பத்தைச் சீரான முறையில் நடத்தி வருபவன் தந்தை எனும் பொறுப்பில் உள்ளவன்தான்.

பிள்ளைகள் துவண்ட போதும், 'நான் இருக்கிறேன், எதற்கும் கவலைப்படாதே' என்னும் நம்பிக்கையை தோற்றுவித்து. தன் பிள்ளையின் நிழலாகவே இருப்பார். தந்தை தனது குழந்தைக்கு பிரச்னைகளை எதிர்கொண்டு போராடும் எதிர்நீச்சலை கற்றுத் தருகிறார்.

வாழ்க்கைச் சக்கரத்தில் நாம்
வசதியாக வாழ்வதற்காக,
ஓயாமல் சுழலும் அன்பு சக்கரம்.
நாம் எழுமுன் வேலைக்கு சென்று,
நாம் தூங்கிய பின்பு வீடு திரும்பும்
தன்னலமில்லா உள்ளம்
அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்தில் முத்தொன்று ...



பா.ஜயிலா

வீட்டை ஆளும் மகா உன்னத பணியோடு பிறிதொரு பணியையும் கருத்தோடு ஆற்றிவரும் மங்கையர் தம் மாண்புறு பணியை போற்றுதல் சிறப்பாமே. பெண்களின் ஆற்றல்சார் பயணங்கள் பலவேறு துறைகளில் முன்னெடுக்கப்படும் இவ்வேளையில் அவர்களின் பயணங்கள் பாராட்டுடன் வெளிப்படுத்தப்படவேண்டிய ஒன்றாகும். அந்த வகையில் நட்சத்திரஇல்லத்தரசி எனவும் இம்மாதமங்கை எனவும் மங்கையர் சாதனைகள் அடையாளப்படுத்துகின்றாள் ஒளிஅரசி.

உயிரினை உலகிற்கு படைக்கும் அன்னை முதல் அதிசயம். சான்றோனாக்கி உலகிற்கு அர்ப்பணிக்கும் தந்தை இரண்டாம் அதிசயம். உலகை ஆளஉருவாக்கும் பள்ளிச்சாலையில், சொல்லாலும், எழுத்தாலும் என்றும் நம்முன் நிற்கும்ஆச்சர்யமும், அதிசயமும்தான் ஆசிரியர்கள். தோள்மீதும், மடிமீதும் தவழ்ந்த குழந்தைக்கு, புதிய ஒரு உலகினைக் காட்டும் வித்தகர்கள் ஆசிரியர்கள். நாவில் வசப்படாத வார்த்தைகளை ஒழுங்குபடுத்தி, விரல்களுக்குள் அகப்படாத எழுதுகோலினை கைகளில் அமிழ்த்தி, மிரண்டு பார்க்கும் உலகினை எளிதாய்ப் புரியவைத்த அற்புதங்கள் ஆசிரியர்கள்.

உடைகளை நேர்த்தியாக்கி, கலையும் தலைமுடியை அன்புக்கரங்களால்கோதி, மழலை சொற்களின் மழையில் மகிழ்ந்து வாழ்பவர்கள். ஆதலால்தான் சின்னக் குழந்தைகளின் ஒவ்வொரு குறும்பும் அவர்களின் பார்வைக்கு விளையாட்டாகவே தெரிகிறது. வீட்டிற்குள் குறும்பு காட்டும் குழந்தையும் ஆசிரியர் வாய்மீது விரல்வைக்கும் தருணத்தில் அமைதியாகிவிடுகிறது. அத்தகைய ஆரம்பக்கல்வி ஆசிரியப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஒருவரே இம்மாத மங்கையாக ஜொலிக்கிறார்.

இம்மாத மங்கையாக அடையாளப்படுத்தப்படுபவர் திருமதி றஞ்சினி தர்மலிங்கம் அவர்கள். இவர் நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் இருந்து ஓய்வுபெற்றுள்ளார். முப்பத்தெட்டு வருடகால கல்விச்சேவையை ஆற்றி ஆசிரியத்தின் மகத்துவம் போற்றி இனிதே தனது ஆசிரியப்பயணத்திலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

ஆசிரிய சேவையில் உழைப்பும் அர்ப்பணிப்பும் இன்றியமையாதவையாகும். மாணவர்கள் உயரச்செல்ல ஏணியாக விளங்கும் ஆசான்கள் ஒவ்வொரு மாணவரின் மனதிலும் தந்தை தாய்க்கு நிகராக பூஜிக்கப்படுபவர்கள். அந்த வகையில் ஆசிரியர் றஞ்சினி அவர்களும் நேர்மை, உண்மை, இனிமை, போன்ற நற்பண்புகளோடு அனைவருடனும் அன்புடன் பழகும் விருந்தோம்பல் பண்பினையும் தன்னகத்தே கொண்டிருந்தார். நிர்வாகம் மற்றும் செயற்படுத்தல் என அவசியமான அனைத்து துறைகளிலும் ஒரு முக்கிய பங்காளராக இருந்து கடமைபுரிந்தவர் என்பதை அதிபர் திரு.ந. தேவராஜா அவர்களின் பாராட்டிலிருந்து அறிந்துகொண்டோம்.

பாடசாலையாயினும் சரி, வகுப்பறையாயினும் சரி, மாணவர்களாயினும் சரி அனைத்திலும் சுத்தம் பேணப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து மாணவர்களின் ஒழுக்கத்தின் சிறப்பிற்கு வழிகாட்டிய இவர், நீண்டகாலமாக தொகுக்கப்படாதிருந்த அப்பாடசாலையின் வரலாற்றினை தொகுப்பதற்கும் உறுதுணையாக இருந்துள்ளார். வடமராட்சிப்பிரதேசத்தின்

சிறந்தபாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் இப்பாடசாலை மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் திறன் விருத்திக்கு ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்து தன்னாலான முழுப் பணியையும் ஆற்றியுள்ள இவர் பாடசாலையின் அனைத்துத் துறைகளிலும் தனது பங்களிப் பினை நல்கியுள்ளார்.

இன்றைய சூழலில், மாணவர்களுக்கு உலகைப் புரிந்து கொள்ளும் அறிவியல் கல்வி,உறவினர்களோடும், நண்பர்களுடனும் நடந்து கொள்ள வேண்டிய பண்புகள், உள் ளத்தை தெளிவாக்கும் ஆன்மிகம், போட்டி பரீட்சைகளைவெல்லபொது அறிவு எனபன் முகத்தன்மை கொண்ட வகுப்பறையை ஒரு ஆசிரியர் அமைத்துத் தந்தால் அம்மாண வன் எதிர்காலத்தில் சிறந்த சிற்பியால் செதுக்கப்பட்ட சிற்பம் போல மிளிர்வான் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறான பண்புகளைத் தன்னகத்தே கொண்டு பல அறிவாளிகளை உருவாக்கும் இப்பாடசாலையின் வளர்ச்சி மேலும் சிறப்புற வாழ்த்துவதுடன், இந்த ஆசிரியரின் ஓய்வு காலம் சிறப்புறவும் ஒளிஅரசியின் வாழ்த் துக்கள் உரித்தாகட்டும்.

இவரது விருந்தோம்பும் பண்பினை ஒளி அரசியின்பணியாளர்களாகியநாமும்நன்கறி வோம். பல சந்தர்ப்பங்களில் இப்பாடசா லைக்கு சென்ற போது எம்மை அன்புடன் வரவேற்று உபசரித்து வழியனுப்பிய பாங்கி னைக் கண்டு நெகிழ்ந்திருக்கின்றோம்.

எம்முடனான பகிர்விற்கு நேரத்தினை ஒதுக்கிய பாடசாலைச் சமூகத்திற்கு நன்றி கூறி விடைபெற்றோம்.

★★★★★★★★★★★★★★

---



## கொஞ்சம் சிரிக்க...

பொண்ணு வீட்டில் என்ன சொல் றாங்க தரகரே!

பையனை அவங்க குடும்ப வாட்ஸ் அப் குரூப்பில் சேர்த்துப் பாங்களாம், ஒரு மாதம் பெர்ஃபா மென்ஸ் பார்த்துட்டு முடிவை சொல்லுவாங்களாம்!

பஸ் ஸ்டாண்ட்ல பஸ் நிக்கும் .

ஆட்டோ ஸ்டாண்ட்ல ஆட்டோ நிக்கும் ..
சைக்கிள் ஸ்டாண்ட்ல சைக்கிள் நிக்கும் . ஆனா...

கொசுவத்தி ஸ்டாண்ட்ல கொசு நிக்குமா ??

யோசிக்கணும்............ ...!!

வாத்தியார் : இங்குள்ள முட்டாள்கள்
எல்லாம் எழுந்து நில்லுங்கள்...
சிறிது நேரம் யாரும்
எழுந்திருக்கவில்லை.
பிறகு ஒரே ஒரு மாணவன்
எழுந்து நின்றான்.

வாத்தியார் : அவனைப்
பார்த்து ஏளனமாகச்
சிரித்து கொண்டே நீ முட்டாள்
என்று உனக்கு எப்படி தெரியும்?

மாணவன் : அப்படியெல்லாம்
ஒன்றுமில்லை. நீங்க தனியாக
நிக்கறதை பார்க்க பாவமாக
இருந்தது. அதனால் தான் நானும்
எழுந்து நின்றேன்
வாத்தியார் ???????

கணவன்: கலெண்டர்ல என்னப் பாக்குற?
மனைவி: பல்லி விழும் பலன்...
கணவன்: கொண்டா.. நான் பாக்குறேன்...
அது சரி... பல்லி எங்க விழுந்தது?
மனைவி: நீங்க சாப்பிட்ட சாம்பார்ல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்ராவிற்குப் போய்தாஜ்மகாலில்காதலின் முகம் பார்த்துப் பரவசமடைகிறோம். இறந்த காலத்துள் இழுத்துச் செல்லும் எகிப்திய பிரமிட் கண்டு வியக்கிறோம். கனடாவின் நயாகரா நீர்வீழ்ச்சி பொங்கிப் பிரவகிக்கும் அழகிலிருந்து விழிகளை மீட்க முடியாமல் பிரமிக்கிறோம்.

இலங்கையின் சிகிரியா ஓவியத்தில் கலையின் வண்ணம் காண்கிறோம். ஆனால், உலகமெங்கும் தீரா வியப்பு ஒன்று இருந்து கொண்டே இருக்கிறது. அதை நாம் சென்று பார்க்கவேண்டியதில்லை. நமது வாழ்விலிருந்து பிரித்துவிடமுடியாத, எங்களோடு கூடவே இருக்கிற அதிசயம் அது.

அதாவது, ஆண்-பெண்ணுக்கு இடையிலான பாரபட்சங்கள். நினைத்துப்பார்க்கும் போது இது எப்படி நிகழ்ந்திருக்க முடியும்? என்னும் கேள்வி ஊடுருவுகிறது.

மனித குலத்திற்குள் ஒரு பாலாரின் மீது மற்றையவர் ஆதிக்கம் செலுத்துவதென்பது இயல்பேபோல நம்மில் பலர் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த மனோபாவத்தின் மீது கேள்விகள் எழுப்ப அஞ்சுகிறோம். அவ்வாறு கேள்வி எழுப்புவதையே மரபுமீறலாகக் கொள்கிறோம்.

மிருகங்களைப்போல என்று பலர் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். அதிலுள்ள அபத்தத்தைப் பாருங்கள். ஏனைய மிருகங்களைக் காட்டிலும் பலமுள்ள சிங்கம் எப்படிக் காட்டின் ராஜா ஆனதுவோ அவ்வாறே மனிதனும் தன்னைவிட பலமற்ற உயிர் என்று கருதப்படும் (பெண் ஆணைவிட உடல் வலிமையில் குறைந்தவள் என்பது அறிவியல்ரீதியாக இன்னும் நிரூபிக்கப்படவில்லை) பெண்ணைத் தனது கட்டுக்குள் வைத்திருப்பதில் நிறைவு காண்கிறான்.

வீடு என்பது வாழும் இடமாக மட்டும் பார்க்கப்படுவதில்லை. ஆண் ஆசுவாசம் செய்துகொள்வதற்கான அமைதிக்கூடமாக, கட்டற்ற அதிகாரத்தைப் பிரயோகிக்கக்கூடிய இடமாக, அவன் என்றென்றைக்கும் தலைவனாக இருக்கக்கூடிய ஒரு சாம்ராஜ்ஜியமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும் புகை பிடிப்பது, மது அருந்துவது இன்னோரன்ன பழக்கவழக்கங்கள் கூட ஆண்களுடைய ஏகபோக (பெரிய சொத்துடமை பாருங்கள்) உரிமையெனவே கொள்ளப்படுகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், மது அருந்தியபின் பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறைக்கும் கூட ஆண் பொறுப்பாக மாட்டான் என்பதுதான். தீமை பயக்கும் பழக்கவழக்கங்களுக்கே ஏகபோக உரிமை கொண்டாடும் ஆண், சமூகத்தை வழிநடத்தும் அறிவியல், கலை, இலக்கியம், அரசியல் இவற்றில் எவ்விதம் நடந்துகொள்வான் என்பது கண்கூடு.

# காத்திருக்கும் காலங்கள்

எவருக்கும் எவருடைய உடல் மீதும் உரிமையில்லை என்றும் சுதந்திரம் என்பது அடுத்தவன் மூக்குநுனி வரைதான் என்றும் பேசிக் கொள்கிறோம்.

ஆனால், வீட்டில் வன்முறை என்பது அகற்றப்படமுடியாத ஒரு பூதமாக இருந்து கொண்டுதானிருக்கிறது. கணவனிடம் அடி வாங்கும் பெண்ணின் உடற்காயங்கள் நாளடைவில் ஆறிவிடக்கூடும். ஆன்மாவின் மீது விழும் அடிக்கு மருந்திடுவது யார்? இழிவுபடுத்தப்பட்டதை அவளால் எப்படி மறக்க இயலும்? வீட்டின் மூலைகளில் கரப்பான் பூச்சிகளைப்போன்று விரட்டி விரட்டி தாக்கப்படும்போது பெண் என்பவள் சக உயிர் என்ற நினைவு முற்றிலும் அழிக்கப்படுகிறது.

அவர் எனக்கு எல்லாவிதமான சுதந்திரங்களையும்தந்திருக்கிறார். என்று சில பெண்கள் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். எல்லாவிதமான என்பதற்கும் எல்லைகள் உண்டு. அதற்குவேறு விதமாக அர்த்தம் கொள்ளலாம். அதாவது ஆணுடைய குறிப்பிட்ட எல்லைக்கு வெளியேதான் பெண்ணுடைய சுதந்திரவெளி இருக்கிறது. அந்த வட்டத்திற்குள் பிரவேசிக்க பெண்ணுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. மீறிப்பிரவேசித்தால் உங்களையெல்லாம் வைக்கவேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடத்தில் வைக்க வேணும் என்று சும்மாவா சொன்னார் கள்? என்று வெகுண் டெழு தல் நிகழும்.

வைக்கவேண்டிய இடம் என்பதற்கான பொருளை விளக்கப் போனால் பெண்ணடிமை எனப் பதில் வருதல் சாத்தியம்.

சமையலில் தொடங்கி பிள்ளைகளின் திருமணம் வரை ஆணின் அதிகார நிழல் நீண்டு படர்ந்துள்ளது. முக்கியமான முடிவுகள் அவனாலேயே எடுக்கப் படுகின்ற றன என்பதை தண்டோராக்காரன் என்ற கவிதை சொல்லிப்போகிறது.

<u>பெண்ணாதிக்கம் பெருகிவிட்டது</u>
**போகிறான்**
**வேண்டுகோள்களைக் கையேந்தி**
**தீர்மானங்களுக்காகக் காத்திருக்கும்**
**பெண் வாழும் தெருவால்**
**அறிவார்ந்த சபைகளில்**
**பரிமாறும் பணி மட்டும் விதிக்கப்பட்ட**
**அவளைக் கடந்து**
**அதிர்ந்தொலித்துப் போகிறது பறை.**

பூமியென பெண் உவமிக்கப்படுகிறாள். ஆண் பெரும்பாலும் புயலோடு ஒப்பிடப் படுகிறான். பெரும் காற்றாய் வந்து மரங்களைச் சாய்த்து, கூரைகளைப் பிய்த்தெறிந்து,

எதிர்ப்படுவனவெல்லாவற்றையும் துவம்சம் செய்து சுழன்றடித்துப் போய் விடுகிறது புயல். பூமி இருக்கிறது துக்கித்து. அதனால் பெயர்ந்து செல்லவியலாது. பெண் ணும் இருக்கிறாள் செயலற்று. குழந்தை களின் அடைக்கலமாக, வீட்டை அடைகாப் பவளாக, சமூகத்தால் சூட்டப்படும் ஒடுகாலி என்றபட்டத்தைச்சுமக்கத்திராணியற்றவளாக வீட்டோடு அவளைக் கட்டிவைத்திருக்கிறது ஒரு மாயக்கயிறு.

பாட்டும், சத்தமும் என தன்னியல்பாக இருக்கும் வீடு ஒரு ஆணின் வருகையால் எப்படி ஒடுங்குகிறது என நாம் பார்க்கிறோம். ஓசைகள் ஒரு செருப்பொலியில் உறிஞ்சப்பட மௌனப்பந்தாய் கட்டிலுக்கடியில் ஒளிந்து கொள்கிறது மகிழ்ச்சி. (இதற்கு விதிவிலக் கான வீடுகள் உண்டு. ஆனால், எத்தனை வீதம்?)

அப்பா வாறார் ஓடிப்போய் படியுங்கோ! செருப்பெல்லாம் இப்பிடிச் சிதறிக் கிடந்தால் அவருக்குப் பிடிக்காது அவருக்கு மச்சமில்லாட்டில் சரிவராது அவரால், அவருக்காகவே இயங்கும் வீட்டில் பெண்ணின் இடம் எது?

வேலைக்குப் போகும் பெண்ணாக இருந்தாலும் அவளுடைய வீட்டு வேலை அட்டவணையில் ஏதேனும் மாற்றங் கள் ஏற்பட்டிருக்கின்றனவா? என்ற கேள் விக்கு பெரும்பாலும் இல்லைஎன்றே பதில ளிப்பர்.

சமைப்பது, துணி துவைப்பது, வீட்டைச் சுத்தப்படுத்துவது, பிள்ளைகளைப் பராம ரிப்பது, இன்முகத்துடன் இருப்பது இவையே நல்ல பெண்ணுக்குரிய அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. அதிலிருந்து பிறழ்பவள் நீலிஎன்றும் அடங்காப்பிடாரிஎன்றும் அடை மொழிகளால் சுட்டப்படுகிறாள்.

பெண் இரண்டாம் பிரஜைதான் என்று, எம்மால் கொண்டாடப்படும் இதிகாசங்களும் புராணங்களும் சொல்லிவைத்துவிட்டுப் போயிருக்கின்றன.

**சீதைக்குக் கோடு**
**நளாயினிக்குக் கூடை**
**கண்ணகிக்கு பத்தினிப் பட்டம்**
**அருந்ததிக்கு வானம்**
**புராணம் படி! புரிந்துகொள்!**
**நீ அகாலத்தில் இறந்தால்**
**புன்னகை உறைந்த**
**உன் புகைப்படத்திற்கு**
**மாலை போட**
**மூன்றே மாதங்களில் மற்றொருத்தி!**

மாதவியின் மீது கொண்ட மயக்கம் தீர்ந்து திரும்பிவந்த கோவலனை குற்றம் சொல்லா மல் ஏற்றுக்கொண்ட கண்ணகி கற்புத் தெய்வம். வயதான கணவனை கூடையில் வைத்து பரத்தை வீட்டிற்குத் தூக்கிச்சென்ற நளாயினி போற்றுதற்குரியவள். கல்லிலும் முள்ளிலும் கணவனை நிழலெனத் தொடர்ந்த சீதையின் மீது சந்தேகித்த இராமன் கடவுள். தோற்ற மயக்கத்தால் இந்திரனோடு கூடிய அகலிகை கல்லாய் சபிக்கத்தக்கவள். கோபி யரோடு கூடிக்களித்த கிருஷ்ணன் வணங்கத் தக்கவன்.


நினைத்துப் பாருங்கள் கிருஷ்ணனைப் போன்று ஒரு பெண் (அவள் தெய்வமே யானாலும்) யாதவர்களோடு கூடிக்களித் திருந்தால் அவளை வணங்கியிருப்போமா என்று. இந்த புராணங்கள், இதிகாசங்கள் வாழ் வியல் நீதியைப் போதித்திருக்கின்றன என்பது ஒரு பக்கம்தான். மறுபக்கம் பெண்ணைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்மைப்படுத்தவும் செய்திருக்கின்றன.

புராணங்கள்தான் இப்படியென்றால் நம் பொழுதுபோக்குச் சாதனங்களுள் முதலிடம் வகிக்கும் சினிமாவைப் பாருங்கள். ஆணை முதன்மைப்படுத்தும்கதைகள்! நேர்மையான வனாக, பத்துப் பேரை பந்தாடும் பலம்



பொருந்தியவனாக, இலட்சியவாதியாக, இரக்க முள்ளவனாக சற்றேறக்குறைய கடவுளாக கதாநாயகன் சித்திரிக்கப் படுகிறான்.

பெண் அவனைச் சார்ந்தவளாக, அரை குறை ஆடைகளோடு வெண்ணிற மேகங் களுக்கிடையில் மிதந்து மிதந்து நடனமாடுபவளாகவே பெரும்பாலான திரைப்படங்களில் காண்பிக்கப்படுகிறாள். அதாவது கதாநாயகன் விருந்தின்போது தொட்டுக்கொள்ளும் ஊறுகாய் மட்டுந்தான் அவள் பெண்கள் மீதான அநீதி என்பது காலகாலங்களுக்கும் தொடரும் ஒன்றாகவே இருந்துவந்துள்ளது.

போரில் வெற்றிவாகை சூடிய தரப்பின் முதற் பார்வை விழுந்த இடமாக அந்தப் புரங்கள் இருந்திருக்கின்றன. கைப்பற் றப்பட்ட நிலத்திற்குரிய பெண்ணை இழிவுசெய்வது அந்த நிலத்தைச் சார்ந்த ஆண்களை இழிவுசெய்வதற் கொப்பான தாகக்கருதப்பட்டது. நிலத்தைப்போல, ஆநிரைகளைப் போல பெண்ணும் ஆணின் உடமை. அவளைக் கவர்ந்து அவள் உடலையும் ஆன்மாவையும் சிதைப்பது ஆண்மை யாம். அதை நாம் இன்று எமது நாட்டிலேயே கண்கூடாகக் காண்கிறோம்.

மேலும், ஓசைநயம் என்பது காதுக்கு இனிமையான விடயமே. ஆனால், அந்த ஓசை நயத்தை பழமொழிகளை இயற்றியவர்கள் எப்படி நாசம் செய்திருக் கிறார்கள் என்று பார்த்தீர்களானால் தலையிலடித்துக்கொள்ளத் தோன்றும்.

கல்லானாலும் கணவன்-புல்லானாலும் புருசன்கணவனே கண்கண்ட தெய்வம்பொம்பிளை சிரிச்சாப் போச்சு புகையிலை விரிச்சாப் போச்சு!சிரிப்பிற்கும் சிறை! 21ஆம் நூற்றாண்டிற்கூட இத்தகைய பழமொழிகள் பிர யோகத்தில் இருக்கின்றன என்பது இன்னும் வேதனையான விடயம்.

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்று பலரும் பேசக் கேட்டிருக்கிறோம். அந்தக் காலக்கண்ணாடியைப் படைக்கும் சிருஷ்டிகர்த்தாக்கள் எழுத்தாளர்கள். சமூகத்தில் ஏனைய எல்லோரையும் விட ஆழ்ந்து சிந்திப்பவர்களாக, உணர்வுகளை வாசிப்ப வர்களாக, அறிவுஜீவிகளாகப் போற்றப்படு பவர்கள். துரதிர்ஷ்டவசமாக இந்தத்துறையும் ஆண்களின் உலகமாகவே இருக்கிறது. அந்த உலகத்திற்குள் எப்போதாவது வந்துபோகும் பாக்கியம் பெற்றவர்களாக பெண்கள் இருக் கிறார்கள். வீட்டில், வேலைத்தளங்களில், அரசியலில், அறிவியலில், கலையுலகத்தில் ஆதிக்கம் செலுத்திய பழக்கதோஷம் விட வில்லை. அண்மைக்காலங்களில் பெண் எழுத்தாளர்களின், கவிஞர்களின் மொழியை வரையறுப்பவர்களாகவும் இருக்க ஆசை கொண்டிருக்கிறார்கள். இந்த வார்த்தையை நீ எப்படிப் பிரயோகிக்கலாம்என ஆவேசம் கொள்ளுமளவிற்கு விரிந்திருக்கிறது அவர் களது கட்டற்ற அதிகார வெளி.

பகிர்தலும் புரிதலுமே வாழ்க்கை. அன்பை, பரஸ்பர மதிப்பை, உணர்வுகளை, வாசிப்பை, நேசிப்பை, துக்கத்தை பகிர்ந்து, புரிந்து வாழக்கூடிய ஆறாம் அறிவைக் கொண் டவர்கள் மனிதர்கள். வெளிமனிதரைப் புரிதல் இரண்டாம் கட்டம்.

முதலில் வீட்டிலிருந்து பெருகட்டும் அன்பு. வீட்டினுள்ளே நுழையும்போதே செருப்போடு சிரிப்பையும் கழற்றிவாசலில் விட்டுவிட்டு வரும் ஆண்மனம் மாறவேண்டும்.

எனது சக உயிர் பெண் என்று ஆண்கள் நினைக்கும் நாளுக்காக எத்தனை நூற்றாண்டு தான் துயரத்தோடு காத்திருப்பது?

நன்றி: இளவேனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறை அனுபவத்தில் முதிர்ந்து தம் படைப்புகளால் தமிழ் வளர்க்கும் சான்றோர்களை இலக்கியமுத்து என்னும் பகுதியினூடாக அடையாளப் படுத்தும் ஒளிஅரசியின் இம்மாத இலக்கிய முத்து பகுதியை அலங்கரிப்பவர் திரு.ஏ.ஜே.ஞானேந்திரன் அவர்கள்.

இனிய தமிழ் இனிச் சாகாது என்பதை உறுதிப்படுத்துவதுபோல, இன்று பலர் தமிழை வளர்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. காவலூர் என்று அழைக்கப்படும் ஊர்காவற்றுறை மண் தந்த திரு.ஏ.ஜே.ஞானேந்திரன் அவர்களை வாசகர்களாகிய உங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் ஒளிஅரசி பெருமிதம் கொள்கின்றது.

# மொழி என்பது அறிவின் தேடல்

கோபிகை

தனது 14ஆவது வயதில், புனித அந்தோனியார் கல்லூரியில்கல்வி கற்ற சமயம், இவரது தமிழாசிரியர், இவர் எழுத்தை அங்கீகரித்தபோது, இவரது இலக்கியப் பயணம் ஆரம்பித் திருக்கின்றது. ஒரு மரணக் கைதியின் ஆழ்ந்த சிந்தனை என்று இவர் எழுதிய கட்டுரை, ஆசிரியரால் பெரிய அளவில் பாராட்டப்பட்டது. விளக்குக்குள் ஒளிந்து கொண்டிருந்த பூதம் போல,இவருள்ஒளிந்துகொண்டிருந்த எழுத்தார்வம், இந்த நாளன்றே வேகமாக வெளிக் கிளம்பியது எனலாம்.



இன்று அகவை அறுபத்தியேழைத் தொட்டுநிற்கும் இவருக்கு 30 வருடஅந்நிய நாட்டு வாழ்க் கையும் முற்றுப் பெற்றுள்ளது. இன்றும் முழுமூச்சுடன் இவர் எழுதிக் கொண்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் ஈழநாடு, பாரிஸ் ஈழநாடு, வீரகேசரி ஆகிய பத்திரிகை நிறுவனங்களில் பணியாற்றும் வாய்ப்புக்கள், இவருக்கு பல பண்பட்ட எழுத்தாளர்களைச் சந்திக்கும் வாய்ப்பைக் கொடுத்திருக்கின்றது.

உற்சாகமாக எழுதவும் வைத்திருக்கின்றது.சுவிஸ் நாட்டில் பணியாற்றிய போது இலக்கிய தாகம் இவரை விட்டபாடாக இல்லை. ஜேர்மனியிலிருந்து வெளிவந்த மண் என்ற சஞ்சிகை, பூவரசு என்ற இன்னொரு சஞ்சிகை, இளைஞன் என்ற மாத இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன இவரது ஆக்கங்களை அகமலர்வுடன் வரவேற்றன. வடலி என்ற இலண்டன் சஞ்சிகையும் இவர்எழுத்துக்களை உற்சாகமாகப் பிரசுரித்தன. இளைஞன் சஞ்சிகையின் பொறுப்பாசிரியராக இவர் பணியாற்றி இருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

தான் எழுதியவற்றுள் தனக்குப் பிடித்தவற்றைத் தொகுத்து, சிதறல்கள் என்ற பெயரில், ஒரு நூலை சுவிஸ் நாட்டில் பாடசாலை வாணி விழா நிகழ்வொன்றில் வெளியிட்டார். இப்பொழுது சந்தர்ப்பவாதிகள் என்ற 32 அத்தியாய நாவலை எழுதி முடித்துள்ளார். இவரது பயண அனுபவங்களின் வெளிப்பாடே இந்த நாவல்! சுவிஸ் மண்ணில் 200க்கு மேற்பட்ட மாணவர்களைக்கொண்ட தமிழ்ப் பாடசாலையின் பொறுப்பாளராக இருந்து, அங்குள்ள எமது சிறார்கள், தமிழைக் கற்க இவர் இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக ஆற்றிய தொண்டு போற்றத்தக்கது. எந்த ஊதிய எதிர்பார்ப்புமின்றி ஒரு தொண்டாகவே இதைச் செய்திருந்தார். ஆங்கிலத்திலும் நல்ல புலமையுள்ள இவர், எமது மண்ணிலும் ஆங்கிலத்தைக் கற்பித்து, பலருக்குச் சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவதில் பெரும் பங்களித்துள்ளார்.

தன் தாயகம் திரும்பியும், எழுத்தின் தாகம், உதயன் பத்திரிகைப் பக்கம் இவரை ஈர்த்துள்ளது. இங்கு ஒரு ஊழியராகப் பணியாற்றும் இவர், கடந்த ஆறு மாதங்களாக, அறிந்த மிருகம் அறியாத கதை என்ற தலைப்பில் தொடராக, காட்டு விலங்கினங்கள், பறவைகள் பற்றி எழுதிவருகிறார். படித்தறிய பல பயனுள்ள தகவல்களுடன், இது உதயனில் வாராவாரம் பிரசுரமாகின்றது.உதயன் நிறுவனத்தின் இன்னொரு வெளியீடான புதுவிதியில் தொடராக புதினப் பூங்கா, சிறுவர் பகுதியையும் எழுதி வரும் இவர், இடையிடையே பல நடப்பு நிகழ்வுகளின் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வருகிறார்.




சுவிஸ் மண்ணில் ஆங்கில மொழிபெயர்ப்பாளராக, தமிழ்க் கல்விப் பரப்பாளராகத் தொண்டு செய்தவர். இப்பொழுது தாயகத்திலும் இதைத் தொடர முனைகிறார். தான் திருமணம் செய்த உடுவில் மண்ணின் பாடசாலை(இவரது பிள்ளைகள் இருவரும் கற்ற ஆரம்பப் பாடசாலை) மாணவர்களுக்கு உற்சாகமூட்டும் விதத்தில், ஓர் ஆண்டுக்கான ஒளிஅரசி சஞ்சிகையை இவரே தனது சொந்தச் செலவில் வழங்கிவருகிறார். ஒவ்வொரு தவணைப் பரீட்சை முடிவிலும் இப்பாடசாலையின் சிறந்தமாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கவென 5000 ரூபாயை அன்பளிப்பாக வழங்கி வருகிறார்.

பதவி ஓய்வுபெற்றநீதிமன்ற சுருக்கெழுத்தாளரான இவரது மனைவி திருமதி இராஜேஸ்வரி உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இவர் எழுத்தாளர் ஞானேந்திரனது எழுத்துக்களின் ரசிகை! எழுத்தை நேசிக்கும் இவரை, ஒளி அரசி, எமது ஆலோசகர்கள் குழுவில் ஒருவராக இணைத்துக் கொண்டதில் பெருமிதம் கொள்கிறது.

★★★★★★★★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமையில் இன்பம் தரும் நோன்பு



**இஸ்லாம் போதிக்கும் அடிப்படையான இபாதத்துக்களில் நோன்பும் ஒன்றாகும். ரமழான் மாதத்தில் நோன்பிருப்பது இஸ்லாத்தின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாகும். நோன்பின் மாண்புகளையும் மகத்துவங்களையும் புரிந்து கொள்ள இஸ்லாம் அதற்கு வழங்கியுள்ள சிறப்புக்களை அறிந்து கொள்வது முக்கியமாகும்.**

**1. இஸ்லாத்தின் தூண்களில் ஒன்று:**

நோன்பு என்பது இஸ்லாத்தின் தூண்களில் ஒன்றாகும். இது இல்லாமல் இஸ்லாம் எனும் கட்டடத்தைக் கட்டியெழுப்ப முடியாது. ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது கட்டாயக்கடமை என்பதை ஏற்காதவர் முஸ்லிமாக முடியாது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் அவர்கள் இறைத் தூதர் என்றும் உறுதியாக நம்புதல், தொழுகையை நிலை நிறுத்துதல், ஸகாத்து வழங்குதல், ஹஜ் செய்தல், ரமழானில் நோன்பு நோற்றல், ஆகிய ஐந்து காரியங்களின் மீது இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது என்று இறைத்தூதர்(ச) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர் (ர) அறிவித்தார்.

(புஹாரி: 8)

**2. நோன்பு ஈமானின் அடையாளம்:**

ஒருவர் நோன்பை முறையாக நோற்கின்றார் என்றால் அது அவரின் ஈமானின் அடையாளமாக இருக்கின்றது. இதனால்தான் நோன்புடன் தொடர்புபட்ட பல ஹதீஸ்களில் ஈமான், இஹ்திஸாப் என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**3. நோன்பு அல்லாஹ்வுக்குரியது:**

இறைத்தூதர்(ச) அவர்கள் கூறினார்கள்: நோன்பு எனக்குரியது. நானே அதற்குப் பிரதிபலன் வழங்குவேன். நோன்பாளி தன் இச்சைகளையும் தன் உணவையும், பானத்தையும் எனக்காகவே விட்டு விடுகிறார் என்று அல்லாஹ் கூறுகின்றான். நோன்பு ஒரு கேடயமாகும். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. நோன்பு திறக்கும் வேளையில் கிடைக்கிற ஒரு மகிழ்ச்சியும், மறுமையில் தம் இறைவனை அவர் சந்திக்கும் வேளையில் கிடைக்கிற ஒரு மகிழ்ச்சியும்தான் அவை. நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை கஸ்தூரி வாசனையைவிட அல்லாஹ்விடம் மணம் மிக்கதாகும் என அபூஹுரைரா(ர) அறிவித்தார்.

**4. அளவில்லாக் கூலி:**

அடுத்து, எல்லா அமல்களுக்கும் அல்லாஹ்தான் கூலி கொடுக்கின்றான். அப்படியிருக்கும்போது நோன்பைப் பற்றி மட்டும் ஏன் நானே அதற்குக்கூலி கொடுக்கின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான் என்ற சந்தேகமும் எழலாம். எல்லா நல்லறங்களுக்கும் அல்லாஹ்வே கூலி கொடுக்கின்றான். அந்தக் கூலியை எத்தனை மடங்காகப் பெருக்கிக் கொடுக்க வேண்டும் என்ற அளவு உண்டு. ஆனால், நோன்புக்கு அந்த அளவு எல்லை என்பதெல்லாம் கிடையாது. அல்லாஹ்வே அவன் நினைக்கும் அளவு கணக்கின்றி வழங்குகின்றான். அதனால்தான் அதற்கு நானே கூலி வழங்குகின்றேன் என்று இங்கே கூறப்படுகின்றது.

**5. நோன்பு கேடயமாகும்:**

நபி(ச) அவர்கள் நோன்பு ஒரு கேடயமாகும் என்று கூறியுள்ளார்கள். எதிரிகளின் ஆயுத வீச்சிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளவே கேடயம் பயன்படுத்தப்படும். நோன்பு என்பது வீணான இச்சைகளில் இருந்தும் ஷைத்தானின் தாக்குதலிலிருந்தும், மறுமையில் நரகத்திலிருந்தும் பாதுகாக்கும் கேடயமாக அமைந்துள்ளது. இந்தக் கேடயம் எமக்கு அவசியமானதல்லவா?

**6. கற்பைக் காக்கும், பார்வையைத் தாழ்த்தும்:**

நோன்பு கற்பைக் காக்கும். பார்வையைத் தாழ்த்தச் செய்யும், வீணான உணர்வுகளைக் கட்டுப்படுத்தும், பக்குவத்தைத் தரும், வேண்டிய பொருட்களையும் ஒதுக்கி வாழ பயிற்சியைத் தரும். இதனால்தான் நபி(ச) அவர்கள் இப்படிக் கூறினார்கள். இளைஞர்களே! தாம்பத்தியம் நடத்த சக்தி பெற்றோர் திருமணம் செய்து கொள்ளட்டும். ஏனெனில், அது (தகாத) பார்வையைக் கட்டுப்படுத்தும், கற்பைக் காக்கும். (அதற்கு) இயலாதோர் நோன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோற்றுக்கொள்ளட்டும்! ஏனெனில், நோன்பு (ஆசையைக்) கட்டுப்படுத்தக்கூடியதாகும் என்று கூறினார்கள். (புஹாரி: 5066)

**7. நோன்பு சுயகட்டுப்பாட்டைத் தரும்:**

நோன்பு சுயகட்டுப்பாட்டை வளர்க்கின்றது. ஆசை இருந்தும், தேவை இருந்தும் உணவு மற்றும் பானம் இருந்தும் அவற்றை உண்ணாமல், பருகாமல் மனதைக் கட்டுப்படுத்தி பக்குவப்படுத்துகின்றது நோன்பு! இவ்வாறே கோபத்தைக் கட்டுப்படுத்தி பொறுமையைப் போதிக்கின்றது. நோன்பு நாவையும், தேவையற்ற போக்குகளிலிருந்தும் தவிர்ந்திருக்கச் செய்து அதையும் கட்டுப்படுத்துகின்றது. இவ்வாறு உள்ளத்தையும் உடலையும் கட்டுப்படுத்தி பக்குவமாக வாழ நோன்பு பயிற்சியளிக்கின்றது.


**8. சுவனத்திற்குத் தனி வழி:**

சுவனத்திற்குப் பல வாயில்கள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் ரையான் என்பதாகும். நோன்பாளிகள் விஷேடமாக அந்த வாயில் வழியாக சுவனம் நுழையும் பாக்கியத்தைப் பெறுவார்கள்.

இறைத்தூதர்(ச) அவர்கள் கூறினார்கள்: சொர்க்கத்தில் ரய்யான் என்று கூறப்படும் ஒரு வாசல் இருக்கிறது! மறுமை நாளில் அதன் வழியாக நோன்பாளிகள் நுழைவார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழையமாட்டார்கள்! நோன்பாளிகள் எங்கே? என்று கேட்கப்படும். உடனே, அவர்கள் எழுவார்கள். அவர்களைத்தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழையமாட்டார்கள்! அவர்கள் நுழைந்ததும் அவ்வாசல் அடைக்கப்பட்டு விடும். அதன் வழியாக வேறு எவரும் நுழைய மாட்டார்கள்! என ஸஹ்ல்(ர) அறிவித்தார். (புஹாரி: 1896) சுவனமும் கிடைக்கும், தனி வழியாகச் செல்லும் உயர்ந்த பாக்கியமும் கிடைக்கும் எனக் கூறி நோன்பின் மகத்துவத்தை இந்த ஹதீஸ் உயர்த்திக் காட்டுகின்றது.

**9. வாயின் வாடையும் கஸ்தூரி மணமாகும்:**

நோன்பாளி நோன்புடன் இருக்கும் போது வாயில் துர்வாடை ஏற்படும். இந்தத் துர்வாடை கூட அல்லாஹ்விடத்தில் கஸ்தூரியை விட நறுமணம் கூடியது என ஹதீஸ்கள் கூறி நோன்பாளியின் அந்தஸ்தை உயர்த்திக் காட்டுகின்றது. இறைத்தூதர்(ச) அவர்கள் கூறினார்கள் முஹம்மதின் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மேல் ஆணையாக! நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரியின் வாடையைவிட விருப்பமானதாகும். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. நோன்பு திறக்கும்போது அவன் மகிழ்ச்சியடைகிறான்; தன் இறைவனைச் சந்திக்கும் பொழுது நோன்பின் காரணமாக அவன் மகிழ்ச்சியடைகிறான் என அபூஹுரைரா(ர) அறிவித்தார். (புஹாரி: 1904)



**10. நோன்பும் துஆவும்:**

நோன்பாளியின் துஆ விஷேடமாக ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதாகும். அல்குர்ஆனிலும் நோன்பு பற்றி கூறிய பின்னர் துஆ பற்றிக் கூறப்படுவதைக் கவனியுங்கள். ரமழான் மாதம் எத்தகையதென்றால், அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேர்வழியைத் தெளிவுபடுத்தக் கூடியதாகவும், (சத்தியத்தையும், அசத்தியத்தையும்) பிரித்தறிவிக்கக் கூடியதாகவுமுள்ள அல்குர்ஆன் இறக்கி வைக்கப்பட்டது. எனவே, உங்களில் யார் அம்மாதத்தை அடைகின்றாரோ அவர் அதில் நோன்பு நோற்கட்டும். யார் நோயாளியாக அல்லது பயணத்தில் இருக்கின்றாரோ (அவர்) வேறு நாட்களில் கணக்கிட்டு (நோற்று)க் கொள்ளட்டும். அல்லாஹ் உங்களுக்கு இலகுவையே விரும்புகின்றான். அவன் உங்களுக்குக் கஷ்டத்தை விரும்பவில்லை. (நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் முழுமைப்படுத்துவதற்காகவும், அல்லாஹ் உங்களை நேர்வழியில் செலுத்தியதற்காக அவனைப் பெருமைப்படுத்துவதற்காகவும், நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவும் (இவ்வாறு செய்தான்.) (நபியே!) என்னைப் பற்றி எனது அடியார்கள் உம்மிடம் கேட்டால், நிச்சயமாக நான் அருகிலேயே இருக்கின்றேன். (எனக் கூறுவீராக!) பிரார்த்திப்பவன் என்னை அழைத்தால், அழைப்புக்கு விடையளிப்பேன். எனவே, அவர்கள் நேர்வழி பெறும் பொருட்டு என்னையே அழைக்கட்டும். மேலும், என்னையே நம்பிக்கை கொள்ளட்டும். (2:185-186) நோன்பாளி நோன்பு திறக்கும்போது மறுக்கப்படாத ஒரு துஆ அவருக்குண்டு என நபி(ச) அவர்கள் கூறியதாக அம்ர் இப்னு ஆஸ்(ர) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (இப்னு மாஜா: 1753)

இவ்வாறு பல்வேறுபட்ட கோணங்களில் நோக்கும் போது நோன்பின் மாண்பு பளிச்செனத் தெரியவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சசிகா லேணர்ஸ்
# The Sasika Learners

Reg No. DS 882

**அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை**

821C, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
021 222 8004, 070 301 5004




www.sasikalearners.com

தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
077 722 6247 / 077 614 0361 / 021 221 7678/ 021 221 7578

கிளை நிறுவனம்

| வேலணை | மல்லாகம் | சங்கானை |
|---|---|---|
| 021 221 5472 | 021 224 3393 | 021 225 1664 |
| 070 301 3012 | 070 301 3014 | 070 301 3016 |

SLS 894

Divine BOTTLED DRINKING WATER

# DIVINE
DDW Divine Drinking Water

## BOTTLED DRINKING WATER

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட
பிரதேசங்களில் வீட்டுக்கு நேரடியாக
கொண்டுவந்து கொடுக்கப்படும்.

Health Ministry Reg No:
CFA/BW/158/2017- 07

தொடர்புகளுக்கு :- 0777 813 913

Office : No. 37, Jayarathna Place,
Naranvita, Gampola
Tel : +94 815 652 651

Factory : No. 25,
Ambagastennahena Estate,
Naranvito, Gampola, Sri Lanka.
Hot. Line : +94 777 426 489


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் வாழ்வியலை மேம்படுத்தும் செயற்பாடுகளை கிராம-நகர மட்டத்தில் தொடங்கும் தருணம்'' எனும் தொனிப்பொருளில் மகளிர் தினம் அனுஷ்டிப்பு











மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய ஆளுகைக்கு உட்பட்ட J/309,310,311 ஆகிய கிராம அலுவலக பகுதிகளில் வசிக்கும் பெண்களின் திறமைகளையும் ஆளுமைகளையும் வெளிப்படுத்தும் மகளிர் தின விழா 07/05/2018 அன்று வளர்மதி விளையாட்டு அரங்கில் மாதர் சங்க தலைவி திருமதி சிவாஜினி லூயிஸ்மென்ராசா தலைமையில் இடம்பெற்றது.



ஊடக அனுசரணை
மகளிர் மாத சஞ்சிகை
ஒளிஅரசி
இல்லத்தரசிகளின் தோழி
அன்பு + அறிவு + அழகு + திறன் + முயற்சி + வாழ்த்து + பொழுதுபோக்கு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# United Creation




**Wedding Cards Print & Sale**
**CTP & Colour Separation**

## *Specialized In Wedding Cards*

Available Places

Kilinochchi - Velan Printers / Siva Pathippagam
Vavuniya - Kalaimagal Printers / Vanni Quick Printers
Batticaloa - Aathavan Printers / New Keen Printers
United Book Shop
Yatiyantota - Swarna Print
Matale - VJ Printers
Thalawakala - Geetha Press / Harani Printers
Umaiyal Printers
Trincomalee - Sun Printers / New Uthayan Printers
Paruththithurai - Jeevan Printers
Kaludawalai - Maaruthi Printers
Nuwara Eliya - Nuwara Eliya Printers / Apeksha Offset Printers
Laxmi Printers
Puttalam - Serendip Printers
Kandy - Vino Printers

51A, Negombo Road, Peliyagoda.
Tel : 0112 938 083, 0115 767 309
Mobile : 0777 347 452
Email : unitprintek@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org